விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 18 ஞாயிற்றுக்கிழமை (02.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 073

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# அரசியல் அதிகாரங்களை அறியாதவன் நான் அல்ல!

## தயாசிறியின் கருத்திற்கு முதலமைச்சர் பதிலடி



(யாழ்ப்பாணம்)

13ஆவது திருத்தச்சட்டம் பற்றியும் அதிலுள்ள அதிகாரங்களை அறியாமலும் நாம் தேர்தலில் போட்டியிடவில்லை. தயாசிறி போன்று பலர் பலவிதமாகச் சொன்னாலும் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது வட மாகாணத்திற்கு அதிகாரங்களைத் தருவதற்காகவே உருவாக்கப்பட்டது என்பதை புரிந்து கொள்ளவேண்டுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் புதிய மாணவர் விடுதி நேற்றுக்காலை திறந்துவைக்கப்பட்டது. இதில் கலந்துகொண்ட முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போது முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமேல் மாகாண முதலமைச்சரும் ஐ.தே.கவிலிருந்து அரசாங்கத்திற்கு தாவிய வருமான தயா

23 ஆம் பக்கம் பார்க்க..

## அரசியல் கைதி கோபிதாஸின் இறுதிச் சடங்கு இன்று

### போராட்டம் நடத்தவும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு மகசீன்சிறையில் அணமையில் மர்மமான முறையில் உயிரிழந்த அரசியல்கைதி விஸ்வலிங்கம் கோபிதாஸின் இறுதிச் சடங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை வடமராட்சி புலோலியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

இதேவேளை மர்ம மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரும் ஜனநாயகரீதியான போராட்டம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்.வடமராட்சி புலோலி

23 ஆம் பக்கம் பார்க்க..

## மாணவனைக் காணவில்லை

(மல்லாவி)

மாங்குளம் மகா வித்தியாலத்தில் தரம் 6-ல் கல்வி பயிலும் 12 வயதுடைய சிறுவனை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலையில் இருந்து காணவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கனகராயன்குள பொலிஸார் தெரிவித்துள்ளார்.

A9 வீதி குஞ்சுக்குளம் மாங்குளத்தினை சேர்ந்த ஞானசேகரம் டிலக்ஷன் (வயது 12) என்ற சிறுவனே காணாமல் போயுள்ளார்.

வீட்டில் உள்ளவர்கள் வேலைகுச் சென்ற வேளை குறித்த சிறுவன வெள்ளிக்கிழமை நண்பகல் 11.30

24 ஆம் பக்கம் பார்க்க..

## கைலாகு கொடுப்போம்



(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கைலாகு கொடுத்த் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அரசியல் ரீதியாக நாம் இருவரும் இணைவது சாத்தியமற்றது. ஆனால் சந்திக்கும் பொழுது மனிதாபிமான அடிப்படையில் கைலாகு கொடுப் போம் என்று தெரிவித்தார்.

23 ஆம் பக்கம் பார்க்க..

## பிரிட்டன் பிரஜாவுரிமையை பெற்றிருந்தாலும் இலங்கை சட்டங்களை மீற முடியாது

### அரசியல்கைதி குறித்து தூதுவர் ஜோன் நீல் விளக்கமளிப்பு

(யாழ்ப்பாணம்)

பிரித்தானியாவில் பிரஜாவுரிமை பெற்றிருந்தாலும் அல்லது எமது நாட்டு பிரஜையாகயிருந்தாலும் கூட இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது எமது அரசாங்கத்தினால் விடுதலைக்கான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியாது என்று அந் நாட்டின் தூதரகத்தின் ஆலோசனைப் பகுதி தூதுவர் ஜோன்நீல் யாழ்ப்பாணத்தல் விளக்கமளித்துள்ளார்.

அதேவேளை கொழும்பு மகசீன் சிறைச் சாலையில் உயிரிழந்த பிரித்தானிய நாட்டின் பிரஜாவுரிமை பெற்ற கோபிதாஸின் விடயம் குறித்து எழுப்பட்ட கேள்விக்கும் பதிலளித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் தங்கியுள்ள பிரித்தானிய பிரஜைகளின் நலன் சார் விடயங்கள் மற்றும் அவர்கள

23 ஆம் பக்கம் பார்க்க..

## ராகுலை முத்தமிட்ட பெண் கணவனால் எரித்துக் கொலை



(சென்னை)

காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்திக்கு கன்னத்தில் முத்தமிட்ட பெண் தனது கணவரால் தீ வைத்து எரித்து கொல்லப்பட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுளளது. கடந்த சிலதினங்களுக்கு

23 ஆம் பக்கம் பார்க்க..


SISIL WOLRD
உங்கள் பொன்னான நேரத்தை மீதப்படுத்த
SISIL, SAMSUNG, WHIRL POOL, HITACHI, BEKO
சலவை இயந்திரங்கள் இப்போது எம்மிடம் இருந்து
கடன் அட்டைகளுக்கு விசேட விலை கழிவு மற்றும் வட்டி இல்லாத கொடுப்பனவு முறை
No106, K.K.S Road Jaffna. 021-2219291 No125, K.K.S Road, Chunnakam. 021-2242335 No17/3, Kandy Road, Kilinochchi. 021-2283755

(C-6622)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் யாழில் பார்த்தீனியம் ஒழிப்புப் படையணி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் பார்த்தீனியம் ஒழிப்புப் படையணியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. யாழ் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 400 இளைஞர்களையும் யுவதிகளையும் கொண்ட இந்தப் படையணியின் முதலாவது செயலமர்வுக் கூட்டம் நேற்று சனிக்கிழமை புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரியில் வட மாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்தியப் படையினர் இலங்கைக்கு வந்த போது உணவுக்காக அவர்கள் எடுத்து வந்த செம்மறி ஆடுகளுடனும் தானியங்களுடனும் சேர்ந்து வடக்கில் ஊடுருவிய பார்த்தீனியம் இன்று ஓர் ஆக்கிரமிப்புக்களையாக உருவெடுத்துள்ளது.

இந்த அந்நிய ஊடுருவல் இனம் விவசாய உற்பத்தியை மோசமாகப் பாதிக்கச் செய்வதோடு உள்ளூர்ச் சுதேசிய இனத் தாவரங்களையும் அழித்து வருகிறது. மனிதர்களிலும், கால்நடைகளிலும் ஒவ்வாமை நோய்களையும் ஏற்படுத்துகிறது.

பார்த்தீனியத்தை ஒழிப்பதற்குக் கடந்த காலங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நீடிக்கிறது. இந்நிலையில அண்மையில் உருவாக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபையின் விவசாய மற்றும் சுற்றாடல் அமைச்சு பார்த்தீனியம் அழிப்பில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தைப் பார்த்தீனியம் ஒழிப்பு மாதமாகப் பிரகடனப்படுத்திய வட மாகாண விவசாய அமைச்சு, இப்போது அதன தொடர்ச்சியாகப் பார்த்தீனியம் ஒழிப்புப் படையணியை உருவாக்கியுள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மேலும் தெரிவிக்கையில்,

பொதுமக்களின் பங்கேற்பில்லாது எந்தத் திட்டமும் வெற்றியடையாது என்பதாலேயே சமூக நோக்குடைய இளைஞர்களையும் யுவதிகளையும் பார்த்தீனியம் ஒழிப்பில் ஒருங்கிணைத்துள்ளோம். வினைத்திறன் கொண்ட இந்த இளைஞர்களும் யுவதிகளும பொருளாதார ரீதியாக பின்தங்கிய கிராமங்களில் இருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் நாளொன்றுக்கு ஐந்து மணி நேரம் என்ற அடிப்படையில் பதினைந்து நாட்களுக்குப் பார்த்தீனியம் பல்கிப் பெருகியுள்ள இடங்களில் பார்த்தீனியம் ஒழிப்பில் ஈடுபடவுள்ளார்கள். பொது நோக்கம் கருதித் தங்களது உடல் உழைப்பை நல்க முன்வந்துள்ள இவர்களுக்கு வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் ஒருமாத கால உலர் உணவை வழங்குவதற்கு உலக உணவுத் திட்டம் முன்வந்துள்ளது. பார்த்தீனியம் ஒழிப்பில் இவர்கள் ஆற்றுகின்ற பங்களிப்புக்கு எத்தகைய கொடுப்பனவுகளும் ஈடாகாது. இவர்களின் சேவையை எல்லோரும் நன்றியுடன் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண சபை உறுப்பினர்கள் த.சித்தார்த்தன், பா.கஜதீபன், அ.பரஞ்சோதி, வடமாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், யாழ் மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர் கி.சிறீபாதசுந்தரம், வலி கிழக்குப் பிரதேச சபைச் செயலாளர் நா.குமணன் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## போட்டி நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜம் ஆகியன இணைந்து மகளிர் தினத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு நல்லூர் பிரதேச செயலக வளாகத்தில் பின்வரும் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

கோலப்போட்டி, மாலை கட்டுதல், தேங்காய் உரித்தல், தேங்காய் திருவுதல், பலூன் உடைத்தல், மெதுவான சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல், சங்கீதக் கதிரை உட்பட சங்கங்களில் உள்ள பெண்களுக்கு இடையேயான ஓட்டப் போட்டியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச மகளிர் தினம் மார்ச் 8 ஆம் திகதி கொண்டப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-11)


**தொண்டர் தேவை**

தற்கொலைச் செய்திகள் உங்களை வருத்துகின்றனவா? முன்பின் தெரியாதோருக்கும் உதவத் தயாரா? எம்முடன் ஒரு தொண்டராக இணையுங்கள். வாரத்தில் ஒரு நாள் மட்டும் நான்கு மணித்தியாலங்கள் சம்பளம் இன்றிப் பணியாற்ற வேண்டும். பயிற்சி வழங்கப்படும்.

காலை 9.00 – பிற்பகல் 1.00 இடையில் அழையுங்கள். 021 222 8117

கைகொடுக்கும் நண்பர்கள்
இல. 104, நான்காம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
(த-6637)

**சேவை முகவர்**
**காணிகள், வீடுகள் விற்பனைக்கு**

பிறவுண் வீதி, பஸ்தியன் A9-5பரப்பு, நுணாவில் 21 பரப்பு உரும்பிராய், கோண்டாவில், முடமாவடி, மணல்தறை லேன் ஆகியன. யாழ்.நல்லூரில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். பழைய ஓடுகள் விற்பனைக்கு உண்டு. சுந்தரம் - 0774819801
(5609)

2 மணித்தியாலத்தில்
**கணினி திருத்தம்**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம். அழையுங்கள். 077 908 6737
GUNAA BEST PC
52, Hospital Road, Jaffna.
இப்பொழுது GUNAA BEST PC இல் Quick Service 2 மணித்தியாலத்தில் கணினிகளை திருத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Computer Repair Laptop and motherboard Repair

**கணினி உதிரிப்பாகங்கள் மலிவு விலையில்...**

| | | | |
|---|---|---|---|
| Blank DVD(Banana) | 14/= | CRT Monitor (12 inch) | 500/= |
| Game DVD | 40/= | CRT Monitor (15 inch) | 1000/= |
| Software CD | 40/= | LCD Monitor (15 inch) | 4400/= |
| Memory Card Reader | 50/= | LED Monitor (14 inch) | 5900/= |
| Phone Charger | 75/= | DONGLE STC(6mon war) | 2750/= |
| Multi Charger | 100/= | FLEXBLE KEYBORD | 800/= |
| Power Cable | 100/= | KEYBORD | 450/= |
| Head Phone | 200/= | SPEAKER | 400/= |
| Memory Card 4GB | 420/= | USB SOUND CARD | 300/= |
| PENDRIVE 8GB(6mon w) | 950/= | MOUSE | 300/= |
| Hidden Cam. Keytag | 3500/= | Hidden Cam. Pen | 4500/= |

SAMSUNG Branded System — 10 500/=
Processor 3.0 (3 Mon.War), DDRII 1GB, HD 160GB, Combo

IBM Branded System — 5 500/=
INTEL 2.4, DDRII 256mb, HD 20 GB

INTEL Assemble System(6Month Warrenty) — 25 500/=
i3 (1 yr War), DDRIII 2GB, 500GB

Micro Dgitel
146, Ponnalai Road, Manipay Tel : 021 3200 999, 07779 3333 8

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER
(C-6621)


## பல்கலை.விரிவுரையாளர்களுக்கும் தலைமைத்துவப் பயிற்சி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கும் தலைமைத்துவப் பயிற்சிகளில் விரிவுரையாளர்களையும் சேர்த்து கொள்ள வேண்டும் என்ற யோசனையை உபவேந்தர்களின் ஒன்றியம் முன்வைத்துள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் சிலர் உபவேந்தர்களின் ஒன்றியத்திடம் இந்த யோசனையை முன்வைத்திருந்தனர். இதனை ஆராய்ந்த ஒன்றியம் குறித்த யோசனையை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிடம் முன்வைத்துள்ளது.

மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தலைமைத்துவப் பயிற்சி காரணமாக அவர்களிடம் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் அப்படியான மாணவர்களுடன் இணைந்து பணியாற்றும் போது விரிவுரையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியத்தை போக்க விரிவுரையாளர்களையும் பயிற்சிகளில் சேர்த்து கொள்ள வேண்டும் என தாம் கோரிக்கை விடுத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் ஒருவர் தெரிவித்தார். (செ-11)

## குறும்பட வெளியீடும் அறிமுக நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழக வெளியீட்டு அனுசரணையில் தினேஸ் ஏகாம்பரத்தின் 'அணுகுண்டுகள்' குறும்பட வெளியீடும் ஆறு குறும்படங்களின் அறிமுகமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய பிரார்த்தனை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (செ)

## உள்நாட்டு பொறிமுறைக்கு இலங்கைக்கு உதவ வேண்டும்
### அமெரிக்க செனட்டர்கள் பிரேரணை

(கொழும்பு)

இலங்கையில் உள்நாட்டு யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவடைந்த பின்னரும் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினால் உண்டான துன்பகரமான நிகழ்வுகளை கையாள உள்நாட்டு பொறிமுறை ஒன்றை வகுத்துக் கொள்ள இலங்கைக்கு உதவ வேண்டும் என அமெரிக்காவையும், சர்வதேச சமூகத்தையும் கேட்டுக் கொள்ளும்பிரேரணை ஒன்றை பதினொரு அமெரிக்க செனட்டர்கள் கொண்டு வந்துள்ளனர்.

இந்த பிரேரணை இலங்கை தொடர்பாக ஒரு முழுமையான நன்கு சமனிலைப்பட்ட கொள்கையை உருவாக்கும்படி அமெரிக்க ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளது.

இந்த கொள்கையானது அமெரிக்காவின் நலன்கள், சட்டத்தில் ஆட்சி என்பவற்றை பிரதிபலிக்க வேண்டுமெனவும் பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

சமய மற்றும் ஊடக சுதந்திரங்களை முனனேற்றவேண்டும் எனவும் ஊடகவியலாளர்கள், பத்திரிகை அலுவலகங்கள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றின் மீதான தாக்குதல்களுக்கு காரணமானவர்களை நீதியின் முனநிறுத்த வேண்டுமெனவும் இந்த பிரேரணை இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.(செ-11)

## கடலில் குளித்த சீனப் பெண் மரணம்

(திருகோணமலை)

இலங்கைக்கு சுற்றுலாப் பயணியாக வந்திருந்த இளம் சீனப் பெண் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் உள்ள சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த 22 வயதான இந்த சீனப் பெண், நிலாவெளி கடலில் நீராடச் சென்ற நிலையில், இவ்வாறு கடலில் மூழ்கி இறந்துள்ளார்.

உயிரிழந்த சீனப் பெண்ணின் உடல் நிலாவெளி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் குச்சவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## ஆற்றில் மூழ்கி இருவர் பலி

(கொழும்பு)

பண்டாரவளை, பனங்கல குளத்தில் குளிக்கச் சென்ற இரு இளைஞர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவமொன்று நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

இம்முறை க.பொ.த சாதாரணதரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகளுக்காகக் காத்திருந்த பண்டாரவளை, சாமசைத்திய பிரதேசத்தைச் சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

சம்பவத்தில், மேற்படி இரு இளைஞர்களுடன் குளிக்கச் சென்ற மேலும் மூவர் காப்பாற்றப்பட்ட நிலையில் கரைசேர்ந்துள்ளனர் என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

நீரில் மூழ்கிய இரு இளைஞர்களின் சடலங்களைத் தேடும் பணிகள் நேற்று இரவு வரை முன்னெடுக்கப்பட்டு வந்ததாக பொலிஸார் மேலும் கூறினர். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி தலைமையில் 15 தேர்தல் கூட்டங்கள்

(கொழும்பு)

தென் மற்றும் மேல் மாகாண சபைத் தேர்தலை முன்னிட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் 15 பிரதான பிரசாரக் கூட்டம் நடத்தப்பட உள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இரண்டு மாகாணங்களில் உள்ள 6 மாவட்டங்களில் தலா இரண்டு பிரதான பிரசாரக் கூட்டங்கள் நடைபெறவுள்ளதுடன், மேலும் மூன்று மாவட்டங்களில் மூன்று கூட்டங்கள் நடத்தப்பட உள்ளன.

ஜனாதிபதி தலைமையில் நடைபெறும் முதலாவது பிரதான பிரசாரக் கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி கடுவலையில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் கொழும்புக்கு வெளியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய அதிவேக நெடுஞ்சாலையும் திறந்து வைக்கப்பட உள்ளது. (செ-11)


# வைத்தியசாலையின் தேவைகள் முடிந்தவரை நிறைவேற்றப்படும்

## சுகாதார அமைச்சர் உறுதியளிப்பு

கரவெட்டி வைத்தியசாலையில் நிலவுகின்ற தேவைகளை முடிந்தளவில் நிறைவேற்றுவதாக வடமாகாண சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேற்படி வைத்தியசாலையினை பார்வையிட்டு அங்கு நிலவுகின்ற பற்றாக்குறைகளை அறியும் நோக்குடனான கலந்துரையாடலொன்று வைத்தியசாலை ஊழியர்கள், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தினர்,வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இதன்போது ஆண், பெண் விடுதி, மின் பிறப்பாக்கியும் அதற்கான அறை வசதிகள் சமையலறை, பயிற்றப்பட்ட தாதியர், மருத்துவ பரிசோதனைக்கான மாதிரிகளை மந்திகைக்கு அனுப்பி பரிசோதனை அறிக்கை பெறுவதற்கான வசதிகள் என்பன செய்யப்படல் வேண்டுமென சுட்டிக்காட்டப்பட்டது.



இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் இருக்கின்ற வசதிகளை முழுமையாக பயன்படுத்துமாறும் தேவைகள் நிதி நிலைமை, அரசியல் சூழல் என்பவற்றை கருத்தில் கொண்டு நிறைவேற்றப்படும் என்றார்.

இக் கலந்துரையாடலில் அமைச்சர் குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதியூட், கரவெட்டி பிரதேச சபைத்தலைவர் வியாகேசு மாகாண சபை உறுப்பினர்களான எம். கே. சிவாஜிலிங்கம், பி.சிவயோகன், எஸ். சுகிர்தன், அதிபர் தர்மலிங்கம், பிரதேச வைத் தியர் சுதோகுமார், மாகாண சுகாதார சேவை கள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-9)

## சித்தம் அழகியநிகழ்வு

பருத்தித்துறை ஞானாலயத்தினரால் நடத்தப்பட்டு வரும் சித்தம் அழகிய என்ற தொடர் நிகழ்வில் இரண்டாம் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 3.30 க்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் சிரித்திரன் எனும் ஆய்வு நூல் தொடர்பான கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கினை மூத்த ஊடகவியலாளர் ராவேயன் நிகழ்த்தவுள்ளார். (அ-9-19)

## நிர்வாகத்தெரிவு

நெல்லியடி முச்சக்கர வண்டியின் இவ்வாண்டிற்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றுள்ளது.

இதன்படி, தலைவர் கி.கிருஷ்ணராசா,உப செயலாளர் சி.புஸ்பராசா, பொருளாளர் த.ஜெயகுமார், உப தலைவர் பு.புஸ்பகரன், உப செயலாளர் ந.பிரசன்னா ஆகியோருடன் 7 பேர் நிர்வாக சபை உறுப்பினர்களாக தெரிவ செய்யப்பட்டனர். (அ-9-60)

## நிர்வாக சபை கூட்டம்

(மானிப்பாய்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் இவ்வாண்டிற்கான இறுதி நிர்வாக சபைக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை மதியம் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத் தலைவர் ச.லக்ஷன் தலைமையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட காரியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைவரையும் தவறாது சமூகம் தருமாறு மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனன் அறிவித்துள்ளார். (அ-9-23)

## வாரம் ஒரு தகவல்

### அருள்வாக்கு

"நான் முடிவு செய்து விட்டேன்"

"என்ன முடிவு"

"அமைதியாக ஒரு ஆலமரத்தடியிலே உட்கார்ந்திருந்து அருள் வாக்கு சொல்ல தொடங்கலாம் என்று. அது என்ன அவ்வளவு சுலபமான காரியமா? தென் கரோலினாவில் அமைந்துள்ள ஆண்டர்சன் நகரத்திலே டெனிஸ் என்ற 25 வயது இளைஞன் ஒருவனால் முடிந்தது என்றால் என்னால் முடியாதா?"

"அது எப்படி?"

"அவன் ஒரு பெண்ணை விரும்பினால்... அந்தப் பெண் வீட்டிலே என்னென்ன பேசினார்கள் என்பதை மறுநாள் வந்து அப்படியே சொல்லுவானாம்"

"ஆச்சரியமாக இருக்கிறதே!"

"கேட்டால் எனக்கு தெய்வீக அருள் இருக்கிறது என்று கூறுவானாம்! கடைசியிலே தான் உண்மை வெளிச்சத்திற்கு வந்தது"

"என்ன அது?"

"ஏற்கனவே அந்தப் பெண்ணிடம் கடிகாரம் பதித்த ரேடியோ ஒன்றை பரிசாக கொடுத்துள்ளான். அந்தப் பெண்ணும் அதை படுக்கை அறையிலே வைத்துள்ளார்! அந்த ரேடியோவினுள்ளே ஒரு மைக்ரோஃபோன் இருந்தது. அதன் மூலமாக இவன் ஒட்டுக் கேட்டிருக்கிறான்! பெண் வீட்டில் கதைக்கப்பட்ட அனைத்து விடயங்களும் இவன் வீட்டிலே கேட்கக்கூடியதாக இருந்தது."

"கடைசியில் என்ன நடந்தது?"

"கம்பி எண்ணுகிறானாம் அந்த இளைஞன்"

"அதேமாதிரி உங்கள் நிலைமையும் மாறப்போகிறது"

"அது நடைபெறாமல் இருக்க நான் மிகவும் எச்சரிக்கையாக இருப்பேன்!"

"அது சரி! இப்படி திடீரென்று சாமியாராக மாற வேண்டும் என்று முடிவு செய்வதற்கு என்ன காரணம்?"

"கல்யாணம் செய்ய வேண்டுமென்று ஆசைப்பட்டேன்..."

"அதற்கான முன்னேற்பாடுகள் அனைத்தையும் செய்தேன்...
கடைசியில் அது நிறைவேறாமல் போய்விட்டது"

"ஏன் நிறைவேறாமல் போனது"

"குறுக்கே வந்து நின்று தடுத்து விட்டார்களே!"

"யார்?"

"என் மனைவி!"

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## இராசி பலன்

02.03.2014
(மாசி 11, ஞாயிற்றுக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு
பிரதமை பிற்பகல் 12.49 மணிவரை
பூரட்டாதி முன்னிரவு 7.18 மணிவரை
இராகுகாலம் 4.57-6.27மணிவரை
சுபநேரம் 9.27-10.57 மணிவரை
சித்தாமிர்தம்

**மேடம்** கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும்.

**இடபம்** காரிய அனுகூலமுண்டு, உறவினர் வருகையால் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்** தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், அந்நியர்களின் உதவிகள் கிடைக்கலாம், எடுத்த காரியத்தை முடிப்பதில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கடகம்** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், தந்தை வழி உறவினர்களால் நன்மையுண்டு.

**சிங்கம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, போசன சுகமுண்டு, சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், பயணங்களால் தேக நலன்கள் பாதிப்படையலாம்.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், உறவினர்கள் வருகையுண்டு, தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும், கௌரவமான நாள், எடுத்த கருமங்களில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**துலாம்** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், தொழில் வளர்ச்சி கருதி முக்கிய முடிவு எடுப்பீர்கள், போசன நன்மையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**விருச்சிகம்** பிள்ளைகளால் பெருமைகள் வந்து சேரும், பிறருக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், வழிபாடுகளில் ஈடுபாடுகூடும், புதிய திட்டங்கள் கைகூடும்.

**தனுசு** திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, ரோக பயமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகமாகும்.

**மகரம்** விடா முயற்சியால் வெற்றி கிடைக்கும், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், தனவிரயங்கள் கூடும்.

**மீனம்** எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்ல படியாக நடைபெறலாம், பெரியோர்கள் சந்திப்புண்டு, ஆழ்ந்த சிந்தனையுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள்

வளவன்

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|
| கத்தரிக்காய் | 20 | 20 | 20 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 100 |
| தக்காளி | 20 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 90 | 80 | 80 |
| பூசணி | 30 | 50 | 40 |
| புடோல் | 30 | 60 | 60 |
| வாழைக்காய் | 30 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-100 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 120 | 70 |
| பாகற்காய் | 60-100 | 120 | 120 |
| வெண்டிக்காய் | 120 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 20 | 40 | 40 |
| பயற்றங்காய் | 160 | 100 | 120 |
| லீக்ஸ் | 50 | 80 | 80 |
| பீற்றூட் | 20 | 40 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 400 | -- | 600 |
| போஞ்சி | 40 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 15 | -- | -- |
| கீரை - 1 பிடி | 5-15 | 20 | 30 |
| தேசிக்காய் | 30-50 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-50 | 40-50 | 35-45 |
| [illegible] | 70 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாமுனை ஆற்றுப் பகுதி வீதியை விரைவில் புனரமைத்துத் தாருங்கள்

## மக்கள் கோரிக்கை

வடமராட்சி கிழக்கின் மாமுனை கிராமத்திற்கும் பளைப் பிரதேசத்திற்கும் இடைப்பட்ட ஆற்றுப் பகுதியை மறித்து அமைக்கப்பட்ட வீதி, தற்போது சேதமடைந்துள்ளதனால் போக்குவரத்துச் செய்வதில் பல இடையூறுகளை எதிர்நோக்கி வருவதாக கிராம மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாமுனை, செம்பியன்பற்று குடாரம் ஆகிய பகுதிகளிலிருந்து பளைக்குச் செல்வதற்கு வீதியின்மையால் இவர்கள் புதுக்காடு மருதங்கேணி




ஊடாக 8 கிலோமீற்றர் தூரம் பயணம் செய்த பின்னரே ஏ 9 வீதியை அடையும் நிலை காணப்பட்டது.

இந்நிலையைக் கருத்திற்கொண்டு 2004 ஆம் ஆண்டு மாமுனை தெற்குப் பகுதியிலுள்ள ஆற்றை மறித்து மணற்பாதை அமைத்துக் கொடுக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு இப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்ததினால் பாதை கவனிப்பாரற்றிருந்த நிலையில் தற்போது மிக மோசமாக சேதமடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பாதை சேதமடைந்துள்ளதனால் மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்காக 8 கிலோமீற்றர் தூரம் சென்றபின்னரே ஏ 9 வீதியை அடைய வேண்டிய துர்ப்பாக்கி நிலைக்குட்பட்டுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்டோர் உடனடியாக குறித்த பாதையை புனரமைத்து உதவுமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-64)

நன்றி:-மிரர்




# அரசியல் அதிகாரங்கள் பகிரப்படுதல் அவசியம்; வடக்கு மாகாண முதலமைச்சர் வலியுறுத்தல்





சுமுகமான வாழ்க்கை முறைக்குப் பகிர்தல் ஒரு அத்தியாவசியமானது. எனவேதான் அரசியலில் கூட நாங்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுங்கள் என்று கேட்கின்றோம் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ் வரன் தெரிவித்துள்ளார். யாழ்.பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மாணவ விடுதி செயற்றிட்டத்தின் கீழ் இயன் கரன் மாணவ விடுதி திறப்பு விழா நேற்று இடம் பெற்றது. இதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

179 வருட பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு கொழும்பு கல்லூரியாம் றோயல் கல்லூரியின் பழைய மாணவனான நான், 176 வருடங்கள் பழைமை வாய்ந்த யாழ்.மண்ணின் தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றான ஹாட்லி கல்லூரியில் தடம் பதித்து இந்த நிகழ்வில் பங்குபற்றுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய அதிபர்கள் நால்வரின் பெயர்களில் தான் எங்கள் மாணவ இல்லங்கள் இயங்குகின்றன. அவற்றின் பெயர்கள் ஹாட்லி, ஹார்வட், மார்ஷ் மற்றும் ஃபோக் என்பன. நான் ஹாட்லி இல்லத்தைச் சேர்ந்தவன். எனவே, கல்லூரிக் காலத்திலேயே ஹாட்லி என்ற பெயர் எனக்கு மிகவும் வேண்டிய ஒரு பெயராக இருந்து வந்துள்ளது.

எனக்கு மிகவும் கிட்டிய நண்பராக இருந்து காலஞ்சென்ற தம்பசிட்டியைச் சேர்ந்த சட்டத்தரணி சோமசுந்தரம் இந்தக் கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். அவரின் வியப்பு மிகும் கெட்டித்தனத்தைக் கண்டபோதெல்லாம் இக் கல்லூரியைத் தான் என் மனம் புகழ்ந்தது.

சி.பி.தாமோதரம் அதிபராக கடந்த 1913 ஆம் ஆண்டு தொடக்கம் 1943 ஆம் ஆண்டு வரை பதவி வகித்த காலத்தில்தான் உங்கள் கல்லூரி ஹாட்லி கல்லூரி என்று பெயர் பெற்றது. வணக்கத்திற்குரிய மார்ஷல் ஹாட்லி உங்கள் கல்லூரியை விரிவுபடுத்த அக்காலத்தில் பெருந் தொகைப் பணத்தை லண்டனில் இருந்து அனுப்பினார். அவர் ஞாபகமாக இந்தக் கல்லூரிக்கு அவரின் பெயர் வைக்கப்பட்டது.

அப்பேர்ப்பட்ட கல்லூரிக்கு மெருகூட்டும் வண்ணமாக இன்று இந்த மாணவ விடுதி திறக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு இந்தக் கொடையை வழங்கிய வள்ளல் இயன்கரன் பாராட்டுக்குரியவர். அவரை முன்னர் நான் சந்தித்துள்ளேன். ''தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற உயரிய நோக்கைக் கொண்டவர். அவரின் பண உதவியும் ஊக்குவிப்புத்தான் இந்தக் கட்டடங்களை இவ்வளவு அழகான முறையில் முடித்துக் கொடுக்க உதவின என்றால் மிகையாகாது. மேலும் அவர் போன்ற கொடையாளிகளின் உதவிகள் எமது மக்களுக்கு வந்தடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பறவைகளையும் மிருகங்களையும் பார்த் தீர்களானால் பொதுவாக அவை பகிர்ந்துண்ணு வதை அவதானிப்பீர்கள். காகம் "கா! கா!" என்று கரைந்து கூப்பிட்டு விட்டே தனது உணவைப் பகிர்ந்து உட்கொள்ளும். மனிதர்களான எமக்குள்ளும் இருப்பதைப் பகிர்வதே எமது கருத்தாக இருக்க வேண்டும்.

சிலருக்கு இறை வன் போதுமான பணத்தை வாரி வழங்கியுள்ளான். சிலரிடம் அறிவைக் கொடுத்துள்ளான். சிலருக்கு நல்லகட்டுமஸ்தான உடலைக் கொடுத்துள்ளான். சிலருக்கு அன்பையும் கருணையையும் இயற்கையாகவே அவர்கள் மனதில்மலர வைத்திருக்கின்றான். இவர்கள்ஒவ்வொருவரும் தம்மிடம் இறைவன் கொடுத்து வைத்திருப்பதை ஏனையவர்களுடன் பகிர்வதையே இறைவன் எதிர்பார்க்கின்றான். ஆகவே, பணத்தைப் பெற்றவன் நண்பர் இயன்கரன் போன்று அதை மக்கள் நலனுக்காகப் பாவிக்க வேண்டும். அறிவைப் பெற்றவன் வருமானத்தை மட்டும் பார்க்காது அறிவைப்பெறமுயல்பவர்களுடன்அவரின் அறிவைப் பகிர முன்வரவேண்டும்.






உடல்வலு உடையவர்கள் சிரமதானம் செய்ய முன்வரவேண்டும். மனதில் அன்பையும் கருணையையும் வைத்துக் கொண்டு அங்கிப்பையில் ஒரு சதம் இல்லாதவர்கூட தனது அன்புவார்த்தைகளால் இன்னொருவரின் மனத் துயரைத் துடைக்க முன்வர வேண்டும்.

ஆகவே, பகிர்ந்து கொள்வதை எமது மாணவர்கள் தமது வாழ்க்கையில் ஒரு பகுதியாக நடைமுறைப்படுத்தி வரவேண்டும். அரசியலில் கூட நாங்கள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுங்கள் என்றே கேட்கின்றோம். சுமுகமான வாழ்க்கை முறைக்குப் பகிர்தல் ஒரு அத்தியாவசியம் என்பதை மாணவர்களாகிய நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

மாணவப் பருவம் ஒரு மகத்தான பருவம். அதன் மேன்மையை சொல்லில் வடிக்க முடியாது. இதுபோன்ற ஒரு காலம் உங்கள் வாழ்க்கையில் இனி எப்போதும் வரப்போவதில்லை. உயர் படிப்புக்குப் போய் அல்லது போகாதிருந்து அதன் பின்னர் வேலையொன்றில் ஈடுபட்டு திருமணம் செய்து குழந்தைகள் பெற்று வயோதிபம் எய்தி இறைபாதங்களை அடையும் வரையில் இவ்வாறான எதற்கும் பயப்படாத எந்தவித கரிசனைகளும் எம்மை வாட்டாத பருவம் இனி மேலும் உங்கள் வாழ்க்கையில் வராது.

தனித்துவமான ஒரு பருவம் மாணவப் பருவம். ஆனால், இந்தப் பருவத்தை நீங்கள் பாவிக்கும் விதத்தில்தான் உங்கள் எதிர்காலம் அமைந்திருக்கும். அதையும் நீங்கள் மறக்கக் கூடாது. எவ்வாறு குயவன் ஒருவன் களிமண்ணை கையால் பிசைந்து எடுத்து வனப்புடைய பொம்மைகளைச்செய்கின்றானோ அதேபோல் நீங்களும் உங்கள் வாழ்க்கையை வளம் மிக்க தாக ஆக்க முடியும். அதற்குத் தெய்வ நம்பிக்கையும் தன் னம்பிக்கையும் வேண்டும். அந்த நம்பிக் கையின் அடிப்படையில்நீங்கள்உங்களைவழிநடத்திச்சென்றால்நினைத்தது நடக்கும் என்பதை மறவாதீர்கள்.

ஆனால், வெற்றி என்பது நீங்கள் பங்கு பற்றும் ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் வெற்றி அடைவது என்று அர்த்தமில்லை. நீங்கள் எதனை விரும்பினீர்களோ அதை அடைந்தே தீருவது என்றும் அர்த்தமில்லை. அல்லது பெயர், புகழ் பெற வேண்டும் என்று கூட அர்த்தமில்லை. உங்களை நீங்கள் என்னவாறாக ஆக்கினீர்கள் என்பதிலேயே வெற்றி என்பது இருக்கின்றது. உங்கள் வாழ்க்கை, உங்கள் குணாதியங்கள், நீங்கள் என்னவாறாகப் பரிணாமம் பெற்றுள்ளீர்கள் என்பதில்தான் வெற்றி என்பது இருக்கி ன்றது. அதாவது வாழ்க்கையில் வெற்றி பெறுவதைவிட உங்கள் வாழ்க்கையானது வெற்றி பெற வேண்டும். It is not so much a question of success in life but rather it is success of life என்றார் சுவாமி விவேகானந்தர்.

எங்கள் வாழ்க்கை வெற்றி பெறும் போது உலகமானது எங்களை முழுமையாகக் கருதிப் பார்த்து நாங்கள் எவ்வாறு வாழ்கின்றோம். என்ன கருமங்களை ஆற்றுகின்றோம். என்ன வாறு பரிணாமம் பெற்றுள்ளோம் என்பதை எல்லாம் எடைபோடும்

மனித வாழ்க்கையை நான்காகப் பிரிக்கலாம். ஆரம்பகாலம், அபிவிருத்திக்காலம், மலருங்காலம். பழமாகும் காலம் என்று அவற்றைக் குறிப்பிடலாம். உங்கள் காலம் அபிவிருத்திக்காலம். ஆகவே, வருங்காலத்தை உத்தேசித்து உங்களை நீங்கள் அபிவிருத்தி செய்யும் காலமே மாணவப்பருவம். நிலத்தை முதலில் பெறவேண்டும். அதன்பின்னர் அதனை உழ வேண்டும். உழுது பயிர் விதைக்க வேண்டும். பயிர் வளர்ச்சி அடைய வேண்டும். ஈற்றில் அறுவடை செய்ய வேண்டும். இப்பொழுது நீங்கள் உழுது கொண்டிருக்கின்றீர்கள்! கல்வி என்றால் என்ன என்று தெரியுமா? கல் என்றால் தோண்டுதல். வி என்றால் ஆழமாக என்று பொருள்படும். ஆகவே, ஆழமாகத் தோண்டுதலே கல்வி. ஆழமாக உழுது பயிர் விதைப்பதே மாணவப் பருவம். ஆகவே, உரியவாறு உழுது விதைப்பதை நீங்கள் முக்கியமான காரியங்களாக அடையாளம் கண்டு இந்த மாணவப் பருவத்தை வீணடிக்காது பார்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் பருவத்தை வீணடிக்க இந்திரிய சுகங்கள் பல உங்கள் முன் அடையாளப்படுத்தப்படுகின்றன. அவற்றிற்கு அடிமையானால் வருங்காலத்திற்கு ஏற்ற ஒரு மனிதனை நீங்கள் உருவாக்காது கடமையில் தவறி விடுவீர்கள்.

உங்கள் கடமைகள் என்ன என்று பார்த்தோமானால் உங்கள் வாழ்க்கைக்கு அத்திவாரம் இடுங்காலம் இக்காலம். அதன் பொருட்டு அறிவு பூர்வமான, சரியான, உங்கள் நல உரித்தை நோக்கிய, எக் காலமும் மனதிற்கு மகிழ்வையூட்டுவதான பூர்வாங்கக் காரியங்களில் நீங்கள் இறங்க வேண்டும். இதைத்தான் எங்கள் முன்னோர்கள் பிரமச்சாரிய வாழ்க்கை என்று குறிப்பிட்டார்கள். உடல், உள்ளம், அறிவு, ஆத்மா ஆகிய அனைத்திற்கும் வலுவூட்டும் விதத்தில் கல்வியையும் கற்றுத் தன்னடக்கம் தரவல்ல தேகப்பயிற்சிகளிலும் ஈடுபட்டு உங்களைச் சுற்றியுள்ளவர்களுடன் தர்மத்தின் அடிப்படையில் கொண்டொழுகி வரப் பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் மத்திய அமைச்சரான கே.என். டக்ளஸ் தேவானந்தா வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் ஜர்கான் மொஹறாட் மற்றும் பலர் கலந்து கொண்டனர். (அ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்நுட்ப மாற்றீட்டு இலவச பயிற்சி நெறிகள்

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சி நெறிகள் நல்லூர் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவசமாக நடைபெறவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய Hand wash, Dish Liquid soap, Car wash தயாரித்தல், அலங்கார மெழுகுதிரி தயாரித்தல், ஊதுவர்த்தி தயாரித்தல், யோக்கட் தயாரித்தல், கணனி வலையமைப்பு (LAN, WAN), Computer Graphic Designing, (Photo shop), வாழ்த்து அட்டைகள் வடிவமைத்தல், பேக்கரி தயாரிப்புகள், ஜாம், கோடியல் தயாரிப்புகள், Web Designing programme, ஊறுகாய் உற்பத்தி செய்தல், அரிசிமாவினாலான தயாரிப்புக்கள், Printer Technology & Toner Refill, Edible fruit waxing, How to promote the business & project management ஆகிய பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட வுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். பயிற்சிநெறியினை கற்க விரும்புபவர்கள் தமது சுய விபரக் கோவை, சான்றிதழ்கள் பங்கீட்டு அட்டைகள் ஆகியவற்றுடன் எதிர் வரும் மார்ச் மாதம் 6 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக இல. 63, பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள விதாதா வள நிலையத்திற்கு நேரில் வருகை தந்து பதிவை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். மேலதிக தகவல்களை 021 222 1034 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு பெற முடியுமென அவர் அறிவித்துள்ளார். (அ-2)



## தென்மராட்சி இலக்கிய அணி முன்னெடுக்கும் 'வள்ளுவர் விழா'

காலம்: 02.03.2014 (ஞாயிறு) இன்று காலை 09.00 மணி

இடம்: இந்துக் கல்லூரி மண்டபம், சாவகச்சேரி.

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து:- | செல்வன் பா.செந்தூரன் |
| தலைமை:- | திரு. அ. கைலாயபிள்ளை (அதிபர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி) |
| வரவேற்புரை:- | திரு.க.ஈஸ்வரன் |
| தொடக்கவுரை:- | சட்டத்தரணி திருமதி. சா.திவாகரன் |
| நூல் வெளியீடு:- | "வள்ளுவரின் வழி நடப்போம்" |
| வெளியீட்டுரை:- | திரு.க.வேலாயுதபிள்ளை |

### சுழலும் சொற்போர்

நடுவர்: கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன்

*வள்ளுவர் வகுத்த இல்லறவியலில் தமிழர் தம் தனித்துவப் பண்பாய் மேல்நிற்பது*

அன்புடைமை அல்ல விருந்தோம்பலே- *திரு.கு.பாலசண்முகன்*
விருந்தோம்பல் அல்ல இனியவை கூறலே- *திரு.பா.விக்கினேஸ்வரன்*
இனியவை கூறல் அல்ல செய்ந்நன்றியறிதலே- *திரு.க.ரஜனிகாந்*
செய்ந்நன்றியறிதல் அல்ல ஒழுக்கமுடைமையே *திரு. செ. செல்வரமணன்*
ஒழுக்கமுடைமை அல்ல ஒப்புரவறிதலே- *திரு.ந.விஜயசுந்தரம்*
ஒப்புரவறிதல் அல்ல அன்புடைமையே-*கம்பவாரிதி இ.ஜெயராஜ்*

மாலை 02.30 மணி

கடவுள் வாழ்த்து: திரு.வே.ஞானசம்பந்தன்

தலைமை: திருமதி. லலிதா முகுந்தன் (அதிபர், யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி)

வரவேற்புரை: திரு.ச.மார்க்கண்டு

தொடக்கவுரை: திரு.வே.பாலசுப்பிரமணியம் (தென்மராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர்)

### ஆன்றோர் கௌரவம்:

கௌரவம் பெறும் சான்றோர் வைத்திய கலாநிதி ச.அம்பிகைபாகன்

### பட்டி மண்டபம்

*நடுவர்: கம்பவாரிதி இ.ஜெயராஜ்*

*வள்ளுவர் வகுத்த வாழ்க்கைத்துணை நலத்தின் வழிநின்று பெரும் புகழ் கொண்டவள்*

| | |
|---|---|
| கண்ணகியே! | *திரு.ஸ்ரீ.பிரசாந்தன், திரு.ச.மணிமாறன்* |
| சீதையே! | *திரு.தி.வேல்நம்பி, திரு.ச.லலீசன்* |
| பாஞ்சாலியே! | *திரு.த.நாகேஸ்வரன், திரு.அ.வாசுதேவா* |
| நன்றியுரை: | *திரு.க.நடேஸ்வரன்* |

*அனைவரும் வருக! பயன் மிகப் பெறுக!*

| | | | |
|---|---|---|---|
| *ச. மார்க்கண்டு* | *த.நாகேஸ்வரன்* | *அ.வாசுதேவா* | *க.நடேஸ்வரன்* |
| *அமைப்பாளர்* | *தலைவர்* | *செயலாளர்* | *பொருளாளர்* |

# தங்கம் கடத்த முயன்ற இந்திய பிரஜை கைது

சட்டவிரோதமான முறையில் ஒரு கிலோகிராம் தங்கத்தை இலங்கையிலிருந்து கடத்த முயற்சித்த இந்திய பிரஜைகள் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து பெங்களூர் நோக்கி செல்லவிருந்த நிலையில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக விமான நிலைய சுங்க பிரிவினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட ஒருவரிடமிருந்து முழுமையாக செய்து முடிக்கப்படாத காப்பு மற்றும் 200 கிராம் எடையுடைய மாணிக்கக் கல் உள்ளிட்ட பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் கைப்பற்றப் பட்ட தங்கத்தின் மொத்த பெறுமதி 50 இலட்சம் ரூபா என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ-2)

## மும்மொழியிலும் அடையாள அட்டை

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகள் அனைத்தும் மூன்று மொழிகளிலும் நேற்று முன்தினம் முதல்வழங்கப்பட்டு வருகிறது. ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் சரத் குமார ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் மோசடிகளை தவிர்க்கலாம் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)





## அழகுக் கலைப் பயிற்சி
## ORIFLAME SWEDEN

மகளிர் தினத்தை முன்னிட்டு துரித மூன்று மாதகால அழகுக் கலைப் பயிற்சி மற்றும் கேக் ஐசிங் பயிற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. Facial பலவகைகள், Pedicure, Manicure, Nail art, Thereading, Hairstyle (பலவகை) Hair Straightening Re - bonding, Perming Hair Colouring Hair Cut (பலவகை) Sareestyle Make up (பலவகை) என பல பயிற்சி இடம்பெற்று பயிற்சி முடிவில் சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும்.

இணைய விரும்புவோர் அறிமுக வகுப்பில் கலந்து மேலதிக விபரங்களை பெற்று பதிவுகளை மேற்கொள்ளவும்.

கிழமைநாள் பிரிவு: 05.03.2014 அன்று 10.00 மணி
சனி ஞாயிறு பிரிவு:08.03.2014 அன்று 10.00 மணி



முக்கிய குறிப்பு: மேற்படி பயிற்சியில் கலந்து கொள்ளும் அனைவருக்கும் மகளிர் தினத்தை முன்னிட்டு 25% கட்டணக் கழிவு வழங்கப்படும். அதேவேளை HAIR IRONER, HAIR DRYER, FACIAL KIT என்பன இலவசமாக வழங்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய இடங்களிலும் பயிற்சிகள் ஆரம்பிக்கப் படவுள்ளன. இவ்விடங்களில் இணைய விரும்புவோர் பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை 0772288243 என்ற இலக்கத்திற்கு SMS மூலம் அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: 0772288243,0773686038 (5718)

ஒறிபிளேம், 187/30, யூனியன் ஒழுங்கை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (சத்திரச்சந்திக்கு அருகாமை)



## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள கொங்கிறீட் கலக்கும் இயந்திரம் மேலதிக 03 அச்சுக்களுடனும் 500 அச்சுப் பலகைகளுடனும் விற்பனைக்கு உண்டு. கடைக்குரிய கதவு நிலை 02 உடன் விற்பனைக்குண்டு. *0774366704* (சி-6630)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தும்பளை றோட்டில் பன்னையம்பதியில் நி.பர (ஒன்று குளி 04) விஸ்தீரணமான வீடு கட்டக் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. (சி-6631)

தொடர்புகளுக்கு : 0774366704

## நிரந்த வேலை

தனியார்துறைமுகத்திலும்விமானநிலையத்திலும்வேலைசெய்யவிருப்பமா? அழையுங்கள்

❖ கப்பல் புனர்நிர்மாணத்துறையில் சாதாரண ஊழியர்கள்/ வெல்டர்/ தச்சு

❖ விமான நிலையத்தில் சுத்திகரிப்பாளர்/ கேட்டரீஸ்/ லொன்றி பிரிவில் 18-45 வயது ஆண், பெண் தேவை சம்பளம் 18000/= 35000/= உணவு தங்குமிடம் குறைந்த விலைகளில். (சி-6633)

தொடர்புக்கு முந்துங்கள்:0775561883

## தேவை

கட்டட நிர்மாணத்துறையில் மேசன்/ தச்சு/ பெயின்டர்/ இலற்றிசன்/ செடலின் பாஸ்/கம்பிபாஸ் (1200/= -1500/=) கையுதவியாளர்கள் (900/= - 1100/=) உணவு+ தங்குமிடம் வழங்கப்படும். கொழும்பு/ கண்டி/ கம்பஹா/யாழ்./ அநுராதபுரம்/ (சி-6632)

தொடர்பு 0775561883



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 2<br>கி.பா: 62 ¼ செவ் 7 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: MBBS / வைத்தியர்<br>தொ.இ: B/2877 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 29<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: BA, ACCA / கணக்காளர் (UK)<br>எதிர்பார்ப்பு: UK PR அல்லது Work Permit உள்ளவர்<br>தொ.இ: G/1587 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா: 16.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC / ஆசிரியர்<br>தொ.இ: B/2879 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 1<br>கி.பா: 9 செவ் 7 ல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L / தனியார் நிறுவன வேலை<br>தொ.இ: G/1590 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 18 சூரி செவ் 4 இல்<br>உயரம்: 6'2"<br>தகைமை/தொழில்: MBA, PGDCA / சமையல் கலைஞர்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்றுக்கொள்ளப்படும்<br>தொ.இ: B/2880 | பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 38.5 செவ் 4 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியர்<br>தொ.இ: G/1591 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 3<br>கி.பா: 4<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L / கிராம நிலதாரி<br>தொ.இ: B/2883 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 40 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSc Micro Biology / விரிவுரையாளர் (தனியார்)<br>தொ.இ: G/1593 |

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கான சத்துணவு வழங்கல் முறையாக நடைமுறைப்படுத்த முடியவில்லை

## வலி.மேற்கு தவிசாளர் கல்வி அமைச்சருக்கு கடிதம்

பாடசாலை மாணவர்களுக்கென முன்னெடுக்கப்பட்டு வரும் சத்துணவு திட்டத்தின் குறைபாடுகளை சுட்டிக்காட்டி வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தனவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்கல் என தலைப்பிட்டு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு கோப்பை பால் வழங்கல் மற்றும் உலக உணவுத்திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கல், முட்டை வழங்கல் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந் நிலையில் ஒரு கோப்பை பால் வழங்கலுக்கான கொடுப்பனவு சத்துணவு திட்டத்திற்கான இலை, மரக்கறி கொடுப்பனவு மற்றும் முட்டைக்கான கொடுப்பனவு கடந்த ஜுலை மாதத்தின் பின்னர் எமது பகுதி பாடசாலைகளுக்கும் வழங்கப்பட வில்லை என பாட சாலை சமூகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இச் சத்துணவு திட்டத்திற்கான அரிசி உள்ளிட்ட பொருட்களை உலக உணவுத் திட்டத்தின் மூலம் பாட சாலைகளுக்கு வழங்கப்படுகின்ற நிலையில் அதற்கான இலை , மரக்கறி வகைகளுக்கு மற்றும் முட்டைக்கான கொடுப்பனவு அரசால் வழங்கப்பட்டு வந்தது.

ஆயினும் கடந்த சில கால மாக இக் கொடுப்பனவு வழங்கப்படவில்லை. இந்நிலையில் இச்சத்துணவுத் திட்டத்தை வழங்கும் பாட சாலை அதிபர்களும் சத்துணவுத் திட்டத்தை பெற்றுக் கொள்ளும் மாணவர்களும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

மறுபுறத்தே இலை , மரக்கறி கடைகாரர்களும் பால் வழங்குநர்களும்மற்றும் முட்டை வழங்குநர்களும் அதி பர்களுடன்கொடுப் பனவு கிடைக்காத நிலையில் பல முரண்பாடுகள் ஏற் பட்டுள்ளன.

இந் நிலையில் அதிபர்கள் சத்துணவு வழங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களும் பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் ஒரு மாணவர்க்கு சத்துணவுத் திட்டத்திற்கு உணவு வழங்குவதற்கு ரூபா 2.50 மட்டுமே ஒதுக்கீடு செய்யப்படுகின் றது. இவ் ஒதுக்கீட்டிலேயே அம் மாணவருக்கான மரக்கறியும் அதை சமைப்பதற்குரிய தூள், உப்பு மற்றும் புளி என்பவற்றை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

இதற்கு மேலாக விறகை பெற்றோரிடம் இருந்தே பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், சமைப்பதற்கு பெற்றோரை பயன்படுத்த வேண்டும். இந் நிலையில் அதிபர்காலை7.30மணிக்கு பாடசாலைக்கு சமுகமளித் தாலேயே பாடசாலை யின் ஆரம்ப கருமங்களை ஆற்ற முடியும்.

இந் நிலையில் குறிப்பிட்ட சத்துணவுத் திட்டம் தொடர்பில் அதிபரே கொள்வனவுக்கும் பொறுப்பாக இருக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் ஒரு மாணவர்க்கு ஒதுக் கீடு செய்யப்படும் ரூபா 2.50 இல் சரா சரியாக 100 மாணவர்களை கொண்ட பாடசாலையாயின் நாள் ஒன்றிற்கு ரூபா 250 இற்கும் மதிய உணவுக்கான பொருட்களை கொள்வனவு செய்வதில் பாடசாலை அதிபர்கள் பெரும் சவாலை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

செயற்படுத்த முடியாத திட்டங்களை அதிபர்கள் தலையில் சுமத்தி அவர்களையும் தர்மசங்கடத்தினுள் ஆழ்த்துவது முறையற்றதாகும். இத்திட் டத்தினை செயற்படுத்தும் பொறுப் பினை பிரதேசங்களிலுள்ள பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக பெற்றோர் மூலம் இத் திட்டத்தினை செயற்படுத்துவது பொருத்தமானது என கருது கிறேன்.

இத்திட்டத்தினை பாடசாலைக ளில் செயற்படுத்துவதில் பெரும் இடர்பாடுகள் உள்ளது என்பதை இந் நாட்டின் ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று உரிய நடவடிக்கை மேற்கொண்டு உதவுமாறு பனிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இதேவேளை தற்போது பால் மற்றும் முட்டை என்பன மாணவர் களுக்கு வழங்குவது நிறுத்தப்பட் டுள்ள தாகவும் அறிய முடிகின்றது. இந்நி லையில் இதனை சத்துணவு திட்டம் என குறிப் பிடுவது பொருத்தமற்றதாகவேயுள்ளது என்பது எனது வெளிப்பாடாகும் என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# காணி சுவீகரிப்புக்கு எதிராக ஆணைக்குழுவில் முறைப்பாடு



(குருமன்காடு)

கிளிநொச்சி, இயக்கச்சி பிரதேசத்தில் பொதுமக்களின் காணிகளை இராணுவம் சுவீகரிப்பதாக தெரிவித்து வவுனியா மனிதவுரிமைகள் ஆணைககுழுவில் நேற்று முன்தினம் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மனிதவுரிமை ஆணைக்குழுவிற்கு சென்ற 8 காணி உரிமையாளர்கள் இந்த காணி சுவீகரிப்பு தொடரபான மனுவொன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா அலுவலக அதிகாரியிடம் கையளித்தனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

“ஏ - 9 வீதிக்கு அருகாமையில் இயக்கச்சி, ஊர்வணிகன்பற்று கிராமத்தில் பொது மக்களுக்கு சொந்தமான 36 ஏக்கர் காணியை இராணுவத்தின் 552ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர், படைத்தலைமையகம் ஒன்றை அமைப்பதற்காக சுவீகரிக்கவுள்ளனர். இது பச்சி லைப் பள்ளி பிரதேச செயலகம் ஊடாக காணிச் சொந்தக்காரர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட காணியில் நாம் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்துள்ளோம். கடந்த கால போர்ச்சூழல் காரணமாக நாம் இருப்பிடத்தை விட்டு வெளியேறி மாத்தளன், பொக்கணை வரை சென்று 2009ஆம் ஆண்டு இராணுவ கட்டுப்பாட்டிற்குள் சென்று மெனிக்பாம் முகாமில் தங்கியிருந்தோம்.

அதன் பின்னர் 2009.09.14 அன்று எமது சொந்த கிராமத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோது எமது காணிகளில் இராணுவ முகாம அமைந்திருந்தது.

எனவே எமது காணிகளை விடுவித்து தருமாறு பல தடவை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் கவனத்திற்கும் பிரதேச செயலகத்தில் மாதாந்தம் இடம்பெறும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திற்கு வருகை தரும் இராணுவ அதிகாரிகளின் கவனத்திற்கும் கொண்டு சென்றோம். இருப்பினும் எவ்வித பலனும் கிடைக்கவில்லை.

தற்போது எமது காணிகளை இராணுவம் கையகப்படுத்தவுள்ளது. எனி னும எமக்கு இதற்கு பதிலாக மாற்று காணிகளோ நட்ட ஈடுகளோ தேவையில்லை. எமது சொந்த காணியை விடுவித்து தர வேண்டும் என அம்மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-9-250)

# புதுமுறிப்பு குளத்தை புனரமைக்க வேண்டும்

## து.ரவிகரன் சுட்டிக்காட்டு



முல்லைத்தீவு குமுழமுனைப்பகுதியில் உள்ள முறிப்பு குளம் விரைவில் புனரமைப்பு வேலைகள் மேற் கொள்ளப்பட வேண்டிய அவசிய நிலையில் உள்ளதாக வட மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறைகேள் மக்கள் சந்திப்பு ஒன்றுக்காக அப்பகுதிக்குச் சென்ற வடமாகாண சபை உறுப்பினர் மக்களின் தகவலையடுத்து குளத்தின் நிலையை நேரில் உறுதிப்படுத்திய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் ,

இக்குளத்தில் பராமரிப்பு குறைவாக இருப்பதால், குளக்கட்டு கரைகளில் பற்றைகள் வளர்ந்து வீதியை மூடி விடக் கூடிய அபாய நிலை காணப்படுகின்றது.

இது தவிர காலபோகத்தில் ஆயிரத்து 200 ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசன வசதி பெறும் இக்குளத்திற்கு அரை அடி அளவிற்கு கலிங்கையும், குளக்கட்டினையும் உயர்த்தும் பட்சத்தில் சிறுபோகத்திலும் முழுமையான பலனை பெறமுடியும் என அங்குள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இது பற்றிய விடயங்களை உரியவர்களின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக மக்களுக்கு உறுதியளித்தார். (அ-9-250)

# ஜெனீவாவுக்கு என்ன பதிலை கொடுத்தாலும் அது தான் நினைத்ததையே செய்யும்

## ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு

பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட தாய்த் திருநாட்டைக் காட்டிக் கொடுக்க ஒருபோதும் இடமளிக்க முடியாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அங்கொடை பிரதேசத்தில் 47ஆயிரம் மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்டுள்ள குடிநீர்த் திட்டத்தை உத்தி யோகபூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில்,

சர்வதேசத்துக்கு அடிபணிந்து விட முடியாது. சர்வதேச அழுத்தங்களுக்கு பதில் கொடுக்க எமது மக்கள் தயாராக வேண்டும்.

வெளிநாட்டுத் தூதரகங்களின் பணத்தைப் பெற்று செயற்படுவோர் நாட்டில் ஜனநாயகமில்லை, சுதந்திரமில்லை என பிரசாரம் செய்கின்றனர். ஜனநாயகம் இல்லாமலா யாழ்ப்பாணதில் நாம் தேர்தல் நடத்தினோம். அரசாங்கம் தோற்றாலும் அந்த மக்களுக்கு ஜனநாயகத்தைப் பெற்றுக் கொடுப்பதை கடமையாக்கிக் கொண்டு நாம் செயற் பட்டுள்ளோம்.

சிலர் நாம் வெளிநாடுகளில் கடன் பெறுவதாக விமர்சிக்கின்ற னர். இத்தகைய அத்தியாவசிய அபிவிருத்திக்காகவே நாம் கடன் பெறுகிறோம் என்பதை மக்களுக்குக் குறிப்பிட விரும்புகிறேன். இது போன்ற அபிவிருத்திகளை நாம் கைவிட்டிருக்க முடியும். எனினும் மக்களுக்கான தேவைகளைப் பெற்றுகொள்ள எம்மை அர்ப்பணித்துள் ளோம.

நீர், மின்சாரம், உர மானியம் போன்ற மக்கள் தேவைகளை நாம் நிறைவேற்றுகின்றோம். நாம் செய்ய வேண்டியதும் இதுவே. வரப்பிரசாத ங்களை ஒருசாரார் மட்டும் அனுபவிப்பதை நாம் அனுமதிக்க முடியாது. மக்களின் சுமைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டே இத்தகைய நடவடிக கைகளை மேற்கொள்ள முடிகிறது. அரசு என்பது மக்களே. அதனால் தான் நாம் இவ்வாறு செயற்படுகிறோம்.

மூன்று தசாப்தங்களாக நாட்டைச் சீரழித்த யுத்தத்தை நாம் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளோம். எனினும் அதற்கெல்லாம் நாம் தற்போது ஜெனீவா நாட்டுக்குப் பதில் கூற நேர்ந்துள்ளது. நாம் ஜெனீவாவிற்குப் பதில் கொடுப்போம். நாம் பதில் கொடுத்தாலும், கொடுக்கா விட்டாலும் அவர்கள் நினைத்ததை அவர்கள் செய்வார்கள் என்பதை நாமஅறிவோம்.எனினும்இதைவைத்து சில சக்திகள் பாரிய அச்சத்தைத் தோற்றுவித்து வருகின்றன.

நாடு முழுவதிலும் பயத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. படிப்படியாக மக்களை அச்சத்துக்குள்ளாக்கி மக்களை வீதிக்கு இறக்குவதற்கே இவர்கள் முயற்சிக்கின்றனர். அதுவே அவரகளின் எதிர்பார்ப்பு. நான் ஜெனீவா போயிருந்த போது கியூபாவுக்கு எதி ராக 60 தடவைகள் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப பட்டதாக கியூபா ஜனாதிபதி என்னிடம் கூறினார்.

அதேபோன்று இஸ்ரேலுக்கு எதி ராகவும் இதுபோன்றே இடம் பெற்றுள்ளது. அந்நாட்டுக்கு எதிராகவும் 65 தடவைகளுக்கு மேல் ஜெனீவா மனிதஉரிமைப் பேரவை குற்றஞ் சுமத்தியு ள்ளதை அறிய முடிகிறது.

அதனால் ஐ.நா. அமைப்பிலிருந்து அந்நாடு விலகி விட்டதாக அந்நாட்டுத் தலைவர் தெரிவித்தார்.


இதனால் ஜெனீவா எதனைச் செய்தாலும் அது எமக்குப் பிரச்சினையிலலை. இதனை நான் சரி என்று கூறி அங்கீகரிக்க முடியாது. எனினும இதுதான் தற்போது உலக நாடுகளில உளள நிலைமை. எமக்கு எதிராகவும் குற்றச்சாட்டுகள் வரும்.

கடந்த வருடமும் கொண்டு வரப்பட்டது. இந்த வருடமும் கொண்டு வருவர். எனினும் எம்மில் சிலர் இதனைப் பெரிதுபடுத்திக் கொண்டு பதில் சொல்ல வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர்.

சர்வதேச அழுத்தங்களுக்குப் பதில் கொடுக்க எமது மக்கள் தயாராக வேண்டும். நாம் அடிபணிந்து விட முடியாது. இத்தகைய பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட நாட்டை காட்டிக் கொடுக்க இடமளிக்க முடியாது என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவி அம்மையின் அறிக்கையை பிரித்தானியா வரவேற்கிறது



இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த பிரித்தானியா அர்ப்பணிப்புடன் இருப்பதாக அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் ஹ்யூகோ ஸ்வைா தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய வெளிவிவகார அமைச்சின் அறிக்கை ஒன்றில் குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பிரித்தானியாவின் பிரதமரும், வெளிவிவகார செயலாளரும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.

இந் நிலையில் இலங்கை தொடர்பில் மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையை பிரித்தானியா வரவேற்கிறது.

இலங்கையின் மனிதவுரிமை நிலவரங்கள் தொடர்பில், பொறுப்புக்கூறும் நிலைமைகளில் உள்ள தடங்கல் தொடர்பிலும் பிரித்தானியா கவலை அடைகிறது.

இந்த நிலையில் ஐக்கிய நாடுகளின் ஆணையாளரது அறிக்கையையும், அது தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டையும் பிரித்தானியா ஆராய்ந்து வருகிறது என்று ஸ்வைர் தெரிவித்துள்ளார். (அ-2)

## மத்திய காங்கிரஸ் அரசின் போக்கை கண்டித்து மாபெரும் ஒன்றுகூடல்

### மே 17 இயக்கம் ஏற்பாடு

**மனிதநேய எண்ணமின்றி தமிழ்க்குல மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்டு வரும் மத்திய காங்கிரசின் போக்கைக் கண்டிக்கும் வகையிலும் ஏழு தமிழர்களையும் சிறையிலிருந்து விடுவிக்கக்கோரியும் சென்னை மெரினா கடற்கரையில் கண்ணகி சிலை அருகில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மக்கள் பெருந்திரள் ஒன்றுகூடல் நிகழ்வை மே 17 இயக்கம் முன்னெடுத்து நடத்துகின்றது என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தெரி வித்துள்ளார்.**

தமிழ் இனத்துக்கும் தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் கேடும், வஞ்சகமும, துரோகமும் செய்து வரும் மத்தியில ஆட்சி புரியும் காங்கிரஸ் தலைமையலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஏழு பேரையும் விடுதலை செயவதற்குத் தடை விதிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

2011 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 30 ஆம திகதி சென்னை உயர் நீதிமனறத்தில் நீதிபதிகள் நாகப்பன் மற்றும் சத்திய நராயணா ஆகியோர் முருகன, சாந்தன, பேறறிவாளன் தூக்குத் தண்டனையை செப்டெம்பர் 9 இல் நிறைவேற்றக்கூடாது என்று தடை விதித்து தீரப்பு அளித்தது மிக முக்கியமான திருப்பமாகும்.

ராஜீவ் கொலை வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் விசாரிக்கக் கூடாது என்றும், வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட வேண்டும் என்றும காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத் தலைமையின் ஏற்பாடடால் உச்ச நீதிமன்றத்தில ஒரு மனுத்தாக்கல் செய்யப்பட்டு வழக்கு உச்ச நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

23 ஆண்டுகள் சிறைச்சாலையில் துன்புற்ற ஏழு பேரையும் விடுதலை செய்வது மனிதாபிமான நடவடிக்கை ஆகும். ஆனால், அத்தகைய மனித நேய எண்ணமின்றி தமிழ்க்குல மக்களுக்கு விரோதமாகச் செயற்பட்டுவரும் மத்திய காங்கிரஸ் அரசின போக்கைக கண்டிக்கும் வகையிலும் ஏழு தமிழர்களையும் சிறையிலிருந்து விடுவிக்கக் கோரியும் சென்னை மெரினா கடற்கரையில் கண்ணகி சிலை அருகில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மக்கள் பெருந்திரள் ஒன்று கூடல் நிகழ்வை மே பதினேழு இயக்கம் முன்னெடுதது நடத்துகின்றது. (அ-2)

## இலங்கை கடற்படையினருக்கு எதிராக வழக்குத் தாக்கல்

தமிழக மீனவர்களை தாக்கியதாக இலங்கை கடற்படையினர் மீது இராமேஸ்வரம் பொலிஸ் நிலையத்தில் முதன்முறையாக வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 4 பேர் கடந்த முதலாம் திகதி கச்சதீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்கள் மீது தாக்குதல் நடத்தியதோடு, மீன்களையும் கொள்ளையடித்து சென்றனர். மேலும் வலைகளையும் பறித்துச் சென்றனர்.

இது குறித்து பாதிக்கப்பட்ட படகு உரிமையாளர் மீனவர் சகாயராஜ் கடந்த மாதம் 2ஆம் திகதி இராமேஸ்வரம பொலிஸ்நிலையத்தில் இலஙகை கடறபடையினர்மீது முறைப்பாடு கொடுத்தார்.

இந்நிலையில், 27 நாட்களுக்கு பின்னர் இராமேஸ்வரம் கோவில் பொலிஸார் நேற்றிரவு இலங்கை கடற்படையினர் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

பல ஆண்டு காலமாக தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தி வரும் இலங்கை கடற்படையினர் மீது முதன் முறையாக பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

இதேபோல் கடந்த மாதம் 3 ஆம திகதி மீன்பிடிக்க சென்ற பாம்பன் மீனவர் ஜாண் பிரிட்டோ என்பவரின் வலைகளை இலங்கை மீனவர்கள் 20 இறக்கும் மேற்பட் டோர் அபகரித்து சென்றனர்.

இது குறித்து பாம்பன் பொலிஸ் நிலையத்தில் கடந்த 5 ஆம் திகதி இலங்கை மீனவர்கள் மீது பிரிட்டோ முறைப்பாடு கொடுத்தார்.

இந்த முறைபபாட்டின் பேரில் இலங்கை மனவர்கள் மீது 23 நாட்களுக்குப் பினனர் பாம்பன் பொலிஸார் நேற்று முன்தினம் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (அ-2)

## உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்க அரசு தலையீடு

### அமைச்சர் வாசு கொதிப்பு

அமெரிக்க சூழ்ச்சித் திட்டத்தின் ஓர் கட்டமாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கருத வேண்டுமென தேசிய மொழிகள் அமைச்சர் வாசு தேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை விவகாரங்களில் அமெரிக்காவை தலையீடு செய்ய வைக்கும் நோக்கில் இவ்வாறு நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுகின்றது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப் படவுள்ள நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்ற முயற்சித்து வருகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நிறைவேற்ற ஐக்கிய தேசியக் கட்சி எடுத்துக் கொண்டுள்ள காலம் மிகவும் முக்கியமானது.

அமெரிக்க அரசாங்கம் ஏதேனும் ஓர் காரணத்தின் அடிப்படையில் இலங்கை விவகாரத்தில் தலையீடு செய்ய முயற்சித்து வருகின்றது.

இலங்கைக்கு எதிராக செயற்படுவோர் தொடர்பில் அரசாங்கம் அவதானமாக இருக்க வேண்டும் எனவும் அல்லது பாதக விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.

அமெரிக்கா மனிதவுரிமை என்ற பெயரில் உள்நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

## சோபித தேரரை சந்தித்தார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிற்கும், கோட்டே ஸ்ரீ நாகவிஹாரையின பீடாதிபதி மாதுலுவே சோபித தேரருக்கும் இடையில் பேச்சுவார்த்தை கடந்த வாரம் நடத்தப்பட்டுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை தெரிவது தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வேட்பாளர் தெரிவு தொடர்பில் சில இணக்கப்பாடுகள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலில் சோபித தேரரை போட்டியிடச்செய்யும் முனைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, சில அமைச்சர்கள் மற்றும் புத்திஜீவிகளும் சோபித தேரர தேர்தலில் போட்டியிட்டால் ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்காக தாம் தேர்தலில் போட்டியிட உத்தேசித்துள்ளதாக சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட மாட்டாது என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அண்மையில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களிடம் திட்டவட்டமாக அறிவித்துள்ளார். (அ-2)

## அரசில் அங்கம் வகிக்க விருப்பமா? மு.காவை கேட்டாராம் ஜனாதிபதி

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் தொடர்ந்தும் அங்கம் வகிக்க விருப்பமா? இல்லையா? என பதை தீர்மானிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா முஸ்லிம காங்கிரஸிற்கு அறிவித்துள்ளார்.

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம், ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் இல்ங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநதம்பிள்ளையிடம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆவணமொன்றை ஒப்படைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த விடயம் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட சில அமைச்சர்கள் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்துள்ளனர்.

கிறிஸ்தவ, முஸ்லிம் மத வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு வருவதாகவும் இந்த சம்பவங்கள் தொடர்பில் அரசாங்கம எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குறிப்பிட்டு 50 பக்க அறிக்கை ஒன்றை முஸ்லிம் காங்கிரஸ் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் இடம்பெற்ற இடங்கள் தொடர்பான வரைபடங்கள் மற்றும புகைப்படங்களும் இந்த ஆவணத்தில உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

இந்த ஆவணத்தை தமிழ் புலம் பெயர் சமூகத்தினர் இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் பயன்படுத்திக் கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த குற்றச்சாட்டுக்களின் காரணமாக ஆத்திரமடைந்த ஜனாதிபதி, இது குறித்து விளக்கமளிக்குமாறு ரவூப் ஹக்கீடம் கோரியுள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில உறுப்பினர்களை ஜனாதிபதியினால் கட்டுப்படுத்த முடியாததைப் போன்றே தம்மால் தமது கட்சியின் சில உறுப்பினர்களை கட்டுப்படுத்த முடிவதில்லை என ஹக்கீம் பதலளித்துள்ளார்.


ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரே இந்த அறிக்கையை நவநீதம்பிள்ளையிடம் ஒப்படைத்துள்ளதாக ஹக்கீம் தெரிவித்துள்ளார். (அ-2)






மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் 2013 ஆம் ஆண்டில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கப்பட்ட பின்னர் மாணவர்களுடன் எஸ்.வி[illegible] படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# காஜல் அகர்வாலின் அந்தரங்கம் இணையத்தில்

காஜல் அகர்வால் மும்பை தொழில் அதிபர் ஒருவருடன் ஜோடியாக டுபாயில் சுற்றிய படங்கள் இணையர்தளங்களில் வெளியாகியுள்ளன. தமிழ், தெலுங்கில் பிசியாக நடித்து வரும் காஜல் அகர்வால் காதல் வலையில் விழுந்துவிட்டார் என்ற தகவல் வெளியானது.

தற்போது அதனை உறுதிப்படுத்தும் வகையில் மும்பை இளைஞர் ஒருவருடன் காஜல் அகர்வால் நெருக்கமாக இருக்கும் படங்கள் வெளியாகியுள்ளன.

அந்த இளைஞர் மும்பையில் பிரபலமாக உள்ள இன்டீரியர் நிறுவனம் ஒன்றில் தலைமை செயல் அதிகாரியாக பணியாற்றுகிறாராம். இருவரும் ஒருவாரத்துக்கு முன் டுபாய் சென்றபோது, அங்கு பல்வேறு இடங்களில் ஜோடியாக சுற்றியுள்ளார்கள். தங்கள் இரகசிய காதல் தெரிந்து விடக் கூடாது என்பதற்காவே இந்த வெளிநாடு ட்ரிப்பாம். ஆனால் இந்தப்படங்கள் எப்படியோ இணையத்தளத்தில் வெளியாகியுள்ளன. இந்தப் படங்கள் வெளியான பிறகு காஜல் அதுகுறித்து எதுவும் பேசாமல் அமைதி காத்துவருகிறார்.

# சிம்புவின் காதலுக்கு குட்பை சொன்ன ஹன்சிகா



ஹன்சிகாவை பிரிந்துவிட்டேன் என்று கூறியுள்ளார் சிம்பு. வேட்டை மன்னன் படத்தில் இணைந்து நடித்ததன் மூலம் சிம்புவுக்கும் ஹன்சிகாவுக்கும் காதல் தீ பற்றிக்கொண்டது.

ஆனால் அப்படம் வெளியாவதற்கு முன்னரே இந்த தீ அணைந்து சாம்பலாகிவிட்டது. ஆம் அரசல் புரசலாக பேசிக்கொண்டிருந்த விடயம் இப்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.

காதலர் தினத்தை கொண்டாடவில்லை நான் சிங்கிள் தான் சொல்லிவந்தார் ஹன்சிகா. இப்போது சிம்புவும் நானும் சிங்கிள். ஹன்சிகாவைப் பிரிந்துவிட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

# விஜய்க்கு தோன்றிய புதிய வில்லன்



விஜய்க்கு வில்லன் கதாபாத்திரத்தை தேடி வருகிறாராம் ஏ.ஆர்.முருகதாஸ்.

ஏ.ஆர்.முருகதாஸ் டைரக்ஷனில் விஜய் நடித்துவரும் படத்தின் படப்பிடிப்பு தற்போது ராஜமுந்திரியில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

வில்லனாக நடிக்கும் வங்காள நடிகர் டோடா ராய் ஜெயிலில் இருந்து தப்பிக்கும் காட்சிகளை எடுப்பதற்காக இங்கே முகாமிட்டிருக்கிறார் முருகதாஸ்.

விஜய்க்கு வில்லனாக நடிப்பவர் பெங்காலி நடிகரான இந்த டோடா ராய் சௌத்ரி தான் என்றும் இவர் கதையின் மெயின் லைனை ஒரு சிலரிடம் சொல்லிவிட்டார் எனவும் தகவல்கள் வெளியாகின.. ஆனால் இதை மறுத்துள்ளார் ஏ.ஆர்.முருகதாஸ்.

இதுபற்றி முருகதாஸ் கூறுகையில், இந்தப்படத்திற்கு பெங்காலியில் சரளமாக பேசத்தெரிந்த நடிகர் வேண்டும் என தேடியபோது கிடைத்தவர்தான் இந்த டோடா ராய். சொல்லப்போனால் படத்தில் இவர் துணை வில்லன் தான்.

இன்னும் பிரதான வில்லன் கதாபாத்திரத்தில் நடிப்பவரை நாங்கள் தேடிக்கொண்டு இருக்கிறோம் என்று கூறியுள்ளார்.

மேலும் டோடா கதையைப்பற்றி சொன்னதாக வெளியான செய்தியில் உண்மையில்லை. அப்படியே அவர் சொல்லியிருந்தாலும் அது உண்மையான லைன் இல்லை என மறுத்திருக்கிறார் முருகதாஸ்.

# டாப்ஸிக்கு பொதுஇடத்தில் முத்தமிட்ட நடிகர் அமித்



பொது இடத்தில் டாப்ஸிக்கு முத்த மழை பொழிந்துள்ளார் ஹீரோ அமித் சத்.

தமிழில் ஆரம்பம் படத்தினைத் தொடர்ந்து முனி 3 கங்கா படத்தில் நடித்து வருகிறார் டாப்ஸி. மேலும் இந்தியிலும் அமித் ராய் இயக்கத்தில் "ரன்னிங் ஷாதி.காம்" படத்தில் நடித்துள்ளார். இதன் ஹீரோவாக அமித் சத் தான் நடித்திருக்கிறார்.

ரொமான்டிக் கொமடி என்டர்டெயினர் படமாக உருவாகி இருக்கும் இப்படத்தின் புரொமோஷன் மும்பையில் நடந்தது. இதில் அமித் சத், டாப்ஸி ஆகியோர் கலந்துகொண்டனர்.

அப்போது எதிர்பாராத விதமாக டாப்ஸியின் கன்னத்தில் திடீரென்று முத்தமிட்டுள்ளார் அமித் சத். இதனால் சிறிதுநேரம் பரபரப்பு ஏற்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப்புலிகள் இயக்கம் ஒரு விடுதலை அமைப்பாகும்

## இத்தாலி மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு

விடுதலைப் புலிகள் இயக்கம் ஜெனீவா சாசனங்களிற்குட்பட்ட ஒரு விடுதலை அமைப்பாகவே பார்க்கப்பட வேண்டியதெனவும் இவ்வியக்கத்தை பயங்கரவாத இயக்கமாக பார்க்க முடியாதெனவும் இத்தாலி மேன் முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இது குறித்து தெரிவிக்கப்பட்டி ருப்பதாவது,

கடந்த 2008 யூன் மாதம் சர்வதேச பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விடு தலைப் புலிகள் இயக் கத்திற்கு நிதி சேகரித்து வழங்கியது என்ற குற்றச்சாட்டின் அடிப்ப டையில் கைது செய்யப்பட்டு பின் 2010 ஆம் ஆண்டு வழக்குத் தொடரப்பட்டது.

பின்னர், 2011 இல் நாப்போலி நீதிம ன்றத்தால் இவர்கள் குற்ற மற்றவர்கள் எனவும் மேலும் தமி ழீழ விடுதலைப் புலிகள் 25 ஆண் டுகளுக்கு மேலாக தமிழ் மக்க ளின் விடுதலைக்காகவும் தமது போராட் டத்தின் மூலம் மருத்துவம் நீதிமன்றம், கல்வி, பொருண் மியம், சீரான இராணுவக் கட்டமைப்பு ஆகியவை உள்ளடங்கிய ஒரு நிழல் அரசை நிறுவி இருந்தது என்பது தமது ஆய்வில் தெரிய வந் துள்ளமையால், இவ் இயக்கம் ஜெனீவா சாசனங்களிற்குட்பட்ட ஒரு விடுதலை அமைப்பாகவே பார்க்கப்பட வேண்டியதெனவும் இவ்வியக்கத்தை பயங் கரவாத இயக்கமாக பார்க்க முடியாதென வும், அந்த வகையில் இத்தாலி தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் அற்புதமற்றது எனவும் மேலும் விடுதலைப் புலிகள் இயக்கம் போர்க்குற்ற ங்கள் புரிந்திருப்பின் அவற்றுக்கான விசாரணையை சர்வதேச மனிதவுரிமை மீறல்களுக்கான நீதிமன்றமே விசாரிக்க தகுதியான தென் குறிப்பிட்டு 23-06-2011 நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

அந்தவகையில் அவரது தீர்ப்பு தவறா னது எனக்கூறி அரச தரப்பினர் மேல் நீதிமன்றத்தில் மனுத தாக்கல் செய்திருந்தனர்.

அதற்கான வழக்கு விசாரணை கடந்த 27ஆம் திகதி மேன் முறையீட்டு நீதிமன்றில் ஒன்பது நீதிபதிகள் முன்னிலையில் விசார ணைக்கு எடுக்கப்பட்டது.

சில மணி நேர இரு தரப்பு விவா தங்களின் பின்னர் முதல் கட்ட நீதிபதியின் தீர்ப்பை தாமும் உறுதிப்படுத்துவதாக கூறி குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் குற்றமற்ற வர்கள் என தீர்ப்பளித்தனர். (அ-2)

## வெள்ளைக் கொடி சம்பவம் குறித்து சாட்சியங்கள் திரட்டப்படுகின்றன

(கொழும்பு)

வன்னியுத்த வெள்ளைக் கொடி சம்பவம் தொடர்பில், சாட்சியங்கள் திரட்டப்பட்டு வருவ தாக இணையத்தள செய்திகள் தெரிவிக்கி ன்றன. அச்செய்தியில்,

பாதுகாப்புச் செயலாளர் கோத்த பாய ராஜபக்ச, சவேந்திர சில்வா ஆகியோருக்கு எதிராக இவ்வாறு சாட்சியங்கள் திரட்டப்பட்டு வருவ தாக குறிப்பிடப்பட்டுள்ளது.'

அரச சார்பற்ற நிறுவனங்களினால் வழங்கப்பட்ட சாட்சியாளர்களிடம் நவ நீதம்பிள்ளை சாட்சியங்களை திரட்டி வருகின்றார்.

வெள்ளைக் கொடி சம்பவம் குறித்த குற்றச்சாட்டு முற்றுமுழுவதும் பொய்யானது என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரி வித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலான சாட்சியா ளர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதா கத் தெரிவிக்கப் பட்ட போதிலும் அவர்கள் யார் என்பது இன்னமும் குறிப்பிடப்பட வில்லை.

வன்னி இறுதிக்கட்ட போரின் போது வெள் ளைக் கொடி ஏந்தி சென்று சரணடைந்த புலித் தலை வர்களை படையினர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை ஏற் றுக்கொள்ள முடியாது என மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (அ-2)

## பழைய இடதுசாரி குழுவினர் பிரிவினைக்கு உயிரூட்ட முயற்சி

### அமைச்சர் விமல் குற்றச்சாட்டு



அரசாங்கத்தில் இருக்கும் பழைய இடதுசாரி குழு வினர் எப்படியாவது பிரிவினைவாத இனவாத சக்தி களுக்கு உயிரூட்ட வேண்டும் என்ற பழக்கத்தை கொண்டுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தில் இருக்கும் இந்த பழைய இடதுசாரிகள் தமது பழக்கத்தை கைவிடப் போவதில்லை. போரில் ஈடுபடும் முன்னர் இந்த போரில வெல்ல முடியாது என்று கூறினார்கள். இந்த பிரச்சினையை பேச்சுவார த்தை நடத்தி அதிகாரத்தை பரவலாக்கி தீர்த்து கொள்ள வேண்டும் என்று கூறினார்கள். அரசாங்கத்தில் இருக்கும் இந்த இடதுசாரி களை வெளிநாட்டு தூதரகங்களில் இருக்கும் சில அதிகாரிகள் மிகவும் விரும்புகின்றனர். அந்த தூதரகங்கள் இந்த இடதுசாரிகளை நன்கு கவனித்து வருகின்றன. நாடாளு மன்றத்தில் ஒருமுறை முக்கியமான வாக்கெ டுப்பு நடந்தது.

வாக்கெடுப்பு நடந்து முடிந்த பின்னர், வெளியில் வரும் போது இந்தியாவின் முன்னணி தலை வர் ஒருவர் குறித்த இடதுசாரி குழுவை சேர்ந்த ஒருவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். இந்த இடதுசாரி இந்தளவிற்கு தூதரகங்களுடன் நெருக்கத்தை கொண்டுள்ளன. அங்கிருந்து தான் இவர்கள் வழிநடத்தப்படுகிறார்கள்.

போர் நடைபெற்ற காலத்தில் புலிகளை காண்பித்து ஐயோ இந்த போரில் வெல்ல முடியாது. புலி கள் அமைப்பு மிகவும் வலுவான அமைப்பு என்பதால் பேச்சுவார்த்தை நடத்தி அதிகாரத்தை பரவ லாக்கி பிரச்சினையை தீர்த்து கொள்வோம் என்று இவர்கள் கூறினார்கள்.

புலிகளை காண்பித்து பயமுறு த்தி அதிகார பரவலாக்கம் என்ற கயிற்றை வாயில் திணிக்க முயற் சித்தனர். இன்று இந்த இடதுசாரி குழுவினர் மேலும் சில புதிய வர்களை இணைத்து கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

அரசாங்கத்திற்குள் இருக்கும் இவர்கள், ஜெனீவா சவால் மற்றும் பொருளாதார தடைகளில் இருந்து தப்பிக்க அதிகாரத்தை வழங்கு மாறு கூறுகின்றனர். ஏகாதிபத்திய நாடான அமெரிக்கா கூறுவதை இவர்கள் வேறு விதமாக கூறுகின்றனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)



அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்ப்பாண மெற்றோக் கிளை நாவலர் வீதியில் அண் மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட அலியா ன்ஸ் காப்புறுதி நிறுவ னத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி சுரேக்கா ஐயங்கனி அலஸ் நாடாவெட்டி திறந்து வைப்பதையும் அருகில் யாழ். மெற்றோக் கிளையின் பிராந்திய முகா மையாளர் சிறிராம் மற்றும் ஆயுட் காப்புறுதி பொது முகாமையாளர் [illegible] ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்: புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)


## ST.JOHN'S COLLEGE, JAFFNA.
## CHUNDIKULI GIRLS' COLLEGE, JAFFNA,
## THE JAFFNA ACADEMY AND SCHOOL OF TECHNOLGY.
## ADMISSION-2015 FOR GRADE 1, GRADE 4, GRADE 6, GRADE 10 &A/L

### தரம் 01, தரம்04, தரம் 06, தரம் 10 இற்கான அனுமதி 2015

01. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 03.03.2014 முதல் 17.03.2014 வரை பெற்றுக் கொள்ளலாம்.

ஆ.எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

இ.விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 25.03.2014 செவ்வாய்க்கிழமை. அத் திகதிக்குப் பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்ப டமாட்டா.

02. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (போட்டோஸ்ரட் கொப்பி) இணைக்கப்பட வேண்டும்.

03. விண்ணப்பப்படிவங்களை ஞாயிறும் விடுமுறையும் தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக் கொள்ளலாம்.

04. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதுமான கட்டணம் ரூபா 1000

05. வயதெல்லைகள்.

அ.தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2009 இற்கும் 31.01.2010 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

ஆ.தரம் 04 விண்ணப்பதாரி 01.02.2006 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

இ.தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2004 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

ஈ.தரம் 10 விண்ணப்பதாரி 01.02.2000 இல் அல்லது அதற்குப் பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.

06. தரம் 12 (A/L-2017 Batch) விண்ணப்பதாரி 01.02.1998 இல் அல்லது அதற்குப் பின் பிறந்திருத்தல் வேண்டும்.

07. தரம் 04,தரம் 06, தரம் 10 இற்கான பிரவேசப் பரீட்சை 11.10.2014 சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:

01.தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஆண்டு 5 புலமைப்பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது. அனுமதிப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெறும் உதவி தேவைப்படும் மாணவர்களுக்கு குறிப்பிட்ட சில புலமைப் பரிசில்கள் கல்லூரியால் வழங்கப்படும்.

02.தரம் 12 இற்கு (A/L 2017 Batch) தமிழ் மொழி மூலம் (தொழில்நுட்பத்துறை விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்), ஆங்கிலம் மொழி மூலம் (விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம்) London A/L 2015/2016 இற்கும் கற்பதற்கான விண்ணப்பப்படிவங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியினால் ஏற்றுக்கொள்ளப்ப டும். அனுமதிப் பரீட்சை 03.01.2015 சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். புதிய வகுப்புக்கள் 07.01.2015 ஆரம்பமாகும்.

03.சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் தரம் 12 (A/L) (தமிழ்/ஆங்கில மொழி மூலம் 2017 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.


04.The Jaffna Academy and School of Technology இல் Gr. 5, மற்றும் 2 ஆம் தடவையாக O/L,A/L எடுக்கும் மாணவர்களினதும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

அதிபர்கள். (சி-6627)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# ஏற்றத் தாழ்வுகள்



...குருபக்தியில் சிறந்து விளங்கிய முத்து அவருடைய அறிவுரையை அப்படியே கடைப பிடிக்கத் தீர்மானித்தான். தன்னுடைய தந்தைக்குச் சொந்தமான சிறிய நிலத்தையும், மாடுகளையும் விற்று, அதில் கிடைத்த பணத்தை மூலதனமாகக்கொண்டு நகரத்தில் ஒரு ஜவுளிக்கடை திறந்தான்.

குரு கூறியபடி தன் வியாபாரத்தின் மேன்மைக்காக அல்லும் பகலும் அயராமல் உழைத்தான். ஆனால், அவன் எதிர் பார்த்தபடி வியாபாரத்தில் லாபம கிட்டவில்லை.

அதனால் அவன் குருவிடம் சென்று யோசனை கேட்டான்.

"நல்ல லாபம் வேண்டுமென்றால் உழைத்தால் மட்டும் போதுமா? நீ வியாபாரத்தை விரிவாக்க வேண்டும்.

அதற்கு, அதிகமான மூலதனம் தேவை! அதனால், செல்வர்களாக இருக்கும் இன்னுமசிலரையும் உனது வியாபாரத்தில் கூட்டுச் சேர்த்துக்கொள்! பெரிய அளவில் வியாபாரம் நடத்து! லாபமும் அதிகமாக வரும்!" என்றார்.

குருவின் அறிவுரையை சிரமேற்கொண்ட முத்து, நகரத்தில் பல செல்வர்களை அணுகினான். இறுதியில் இருவர் அவனோடு கூட்டுச் சேர ஒப்புக்கொண்டனர். தொடக்கத்தில் செய்த முதலீட்டைப் போல் பல மடங்கு அதிகமாக முத்து முதலீடு இட்டான். தனது கடையை விரிவாக்கினான். இன்னும் சில இடங்களிலும் தன் கடைகளைத் திறந்தான். இவ்வாறு வியாபாரத்தைப் பல மடங்கு பெருக்கியதால் லாபமும் அதிகரித்தது. நகரத்தின் பெரும் புள்ளிகளில் அவன் ஒருவன் ஆனான். நகரத்து செல்வர் ஒருவர அவனுக்குத் தன் மகளைத் திருமணம் செய்து வைத்தார். முத்துவிற்குப் பெண் குழந்தை பிறக்க, அதற்கு அன்னபூரணி எனப் பெயரிட்டு நன்கு வளர்த்தான். பெண்ணும் பெரியவள் ஆனாள்.

வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக தனது கூட்டாளிகளைக் கலந்து ஆலோசித்தான். பிறகு வெளிநாடுகளுக்கு ஆடைகளை ஏற்றுமதி செய்து லாபம் பெறலாம் என முடிவெடுத்தனர். அவ்வாறே அடுத்த மாதத்திலிருந்து வெளிநாடுகளுக்கு ஆடைகள் ஏற்றுமதி செய்யப்பட்டன.

மூன்று மாதங்களுக்குப் பிறகு, தங்கத் தீவிற்கு ஆடைகள் தேவை என்பதைப் புரிந்து கொண்டு தனது பல லட்ச மதிப்புள்ள ஆடைகளுடன் நம்பிக்கைக்குப் பாத்திரமான குமாஸ்தாவையும் ஒரு கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தான். தங்கத் தீவை அடைந்ததும் பூகம்பம் ஏற்பட்டதால் கப்பல் மூழ்கிவிட்டது. இந்தச் செய்தியைக் கேட்டதும் முத்து மிகவும் பாதிக்கப்பட்டான்.

கூட்டாளிகள் இருவரும கூட அவனை எதிரியைப் போல் நடத்தினர். இதனால் அவன் மிகவும் துன்பத்திற்கு ஆளானான். அந்த சமயத்தில் அவனது குரு தீர்த்த யாத்திரை மேற்கொண்டிருந்தார்.

அவர் அவனை வந்து பார்த்து, அவனது நிலைமையைக் கண்டு அவனுக்கு ஆறுதல் கூறும் வகையில், "முத்து, இந்த நேரத்தில் தான் நீ மனம் தளரக்கூடாது. வாழ்க்கையில் வெற்றி தோல்வி இயற்கைதான். ஒரு சமயம், ஒரு மரத்தில் ஒரு ஜோடிப் புறாக்கள் அமர்ந்திருந்தன.



அப்போது ஒரு வேடன்அவற்றை நோககி அம்பு எய்ய முயற்சி செய்வதைப் பார்த்த பெண்புறா ஆண்புறாவிடம் பறந்து விடலாம் என்று கூற, ஆண்புறா வானில் வட்டமிட்ட ஒரு கழுகைக் காட்டி பறந்து சென்றாலும் அபாயம் என்றும், கண்களை மூடிக் கடவுளைப் பிரார்த்தனை செய்வோம் என்றது. அவ்வாறே அவை பிரார்த்தனை செய்ய, வேடனைத் தற்செயலாக ஒரு பாம்பு கடித்து விட, அவன் விட்ட அம்பு குறிதவறி கழுகின் மீது பட, கழுகு இறந்தது. புறாக்கள் தப்பித்தன! அதுபோல், ஏற்றத் தாழ்வுகள் இயற்கையின் நியதி என்று எண்ணிக் கொண்டு, கடவுளைப் பிரார்த்தனை செய்! இறுதியில் உனகது நன்மை உண்டாகும்!" என்றார். (முற்றும்)

## 03.2014 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 986 - பிரான்சின் மன்னனாக ஐந்தாம் லூயி முடிசூடினான்.
- 1807 - அடிமைகளை நாட்டுக்குள் கொண்டு வருவதை தடை செய்யும் சட்டமூலம் அமெரிக்க காங்கிரசில் கொண்டுவரப்பட்டது.
- 1815 - கண்டி ஒப்பந்தம் என வழங்கப்படும் ஒப்பந்தத்தின் மூலம் கண்டி இராச்சியம் பிரித்தானியருக்குக் கொடுக்கப்பட்டது. சிறை பிடிக்கப்பட்ட ஸ்ரீவிக்கிரம ராஜசிங்கன் என்ற கண்ணுச்சாமி தென்னிந்தியாவில் உள்ள வேலூர்க் கோட்டைக்கு அனுப்பப்பட்டான்.
- 1836 - டெக்சாஸ் குடியரசு மெக்சிக்கோவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1855 - இரண்டாம் அலெக்சாண்டர் ரஷ்யாவின் சார் மன்னனாக முடிசூடினான்.
- 1896 - எதியோப்பியா ஆட்வா என்ற இடத்தில் வைத்து இத்தாலியைத் தோற்கடித்தது. ஓர் ஆபிரிக்க நாடொன்றினால் காலனித்துவ நாடொன்றின் படைகள் தோற்கடிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும்.
- 1917 - புவேர்ட்டோ ரிக்கன்களுக்கு ஐக்கிய அமெரிக்கக் குடியுரிமை வழங்கப்பட்டது.
- 1919 - அனைத்துலக கம்யூனிஸ்ட்டுகள் முதற்தடவையாக மொஸ்கோவில் கூடினர்.
- 1930 - மகாத்மா காந்தி உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பிப்பதற்காக அகமதாபாத்திலிருந்து குஜராத் கடலோரத்தில் இருந்த தண்டி நோக்கி 240 மைல் நடைப் பயணத்தை துவக்கினார்.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: முதலாவது ஜேர்மனியப் படைகள் பல்கேரியாவினுள் நுழைந்தனர்.
- 1946 - ஹோ சி மின் வட வியட்நாமின் ஜனாதிபதியானார.
- 1956 - மொரோக்கோ பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1958 - தி.மு.க. மாநிலக் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது.
- 1962 - பர்மாவில் இராணுவ ஜெனரல் நெவின் இராணுவப் புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றினார்.
- 1970 - ரொடீசியா பிரித்தானியாவிடம் இருந்த பிணைப்பைத் துண்டித்து தன்னைக் குடியரசாக அறிவித்தது.
- 1972 - நாசாவின் பயனியர் 10 விண்கலம் வெளிக் கோள்களை ஆராய்வதற்காக புளோரிடாவில் இருந்து ஏவப்பட்டது.
- 1991 - இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன தொலைவில் இருந்து இயக்கிய கார் குண்டு ஒன்றின் மூலம் கொலை செய்யப்பட்டார்.
- 1990 - ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதித் தலைவராக நெல்சன் மண்டேலா தெரிவு செய்யப்பட்டார்.
- 1992 - உஸ்பெக்கிஸ்தான், மல்தோவா ஆகியன ஐ.நாவில் இணைந்தன.
- 1995 - யாஹூ தொடங்கப்பட்டது.
- 1998 - ஜுப்பிட்டரின் சந்திரனான "யூரோப்பா"வில் அடர்ந்த பனிக்கட்டியின் கீழ் திரவநிலையில் கடல் இருப்பதாக கலிலியோ விண்கலம் தகவல் அனுப்பியது.
- 2002 - ஆப்கானிஸ்தான் மீதான ஐக்கிய அமெரிக்காவின் அனகோண்டா தாக்குதல் ஆரம்பமாகியது.

### பிறப்புக்கள்

- 1896 - ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழறிஞர் (இ. 1961)
- 1931 - மிக்கைல் கொர்பசோவ், சோவியத் ஒன்றிய முன்னாள் தலைவர்
- **1935 - குன்னக்குடி வைத்தியநாதன், வயலின் இசைக்கலைஞர் (இ. 2008)**

### இறப்புக்கள

- 1791 - ஜோன் வெஸ்லி, மெதடிஸ்தத்தை அறிமுகம் செய்தவர். (பி. 1703)
- 1930 - டி. எச். லோறன்ஸ், ஆங்கில எழுத்தாளர் (பி. 1885)
- 1949 - சரோஜினி நாயுடு, இந்திய சுதந்திரப் போராட்ட வீராங்கனை, கவிக்குயில் (பி. 1879)

### குன்னக்குடி வைத்தியநாதன்



குன்னக்குடி வைத்தியநாதன் 1935 இல் தமிழ்நாட்டின் சிவகங்கை மாவட்டத்திலுள்ள குன்னக்குடியில் இராமசாமி சாத்திரி, மீனாட்சி அம்மையார் தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்த வைத்தியநாதன் தனது 12 ஆவது அகவையிலிருந்து இசைக் கச்சேரிகளில் பங்கேற்றார்.

இவர் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு வயலின் கலைஞர், இசையமைப்பாளர். குன்னக்குடியில் பிறந்த இவர் இந்திய அரசன் பத்மஸ்ரீ விருது பெற்றவராவார். கர்நாடக இசையை வயலினில் வாசித்தோரில் மிக முக்கியமானவராகக் கருதப்படுகிறார்.

காலங்காலமாக வயலினுடன் மிருதங்கம் வாசிக்கப்பட்டமையில் மாற்றம் செய்து வலயப்பட்டி சுப்பிரமணியம் என்பவரின் தவிலுடன் பெருமளவு வயலின் கச்சேரிகளைச் செய்துள்ளார். கர்நாடக இசை, திரைப்பட இசை என்பவற்றோடு பறவைகள், மிருகங்களின் ஓசைகள் போன்ற இயற்கை ஒலிகளையும் வயலினில் வாசித்தார்.

வா ராஜா வா (1969) என்ற திரைப்படத்துக்கு முதன்முதலில் இசையமைத்த வைத்தியநாதன் தெய்வம், கந்தன் கருணை உள்ளிட்ட மொத்தம் 22 திரைப்படங்களுக்கு இசையமைத்தார்.

திருமலை தென்குமரி (1970) திரைப்படத்திற்கு இசையமைத்தமைக்காக தமிழக அரசின் சிறந்த இசையமைப்பாளர் விருது பெற்றார். தோடிராகம் (1983) என்னும் திரைப்படத்தைச் சொந்தமாகத் தயாரித்தார். டி. என். சேஷகோபாலன் இதில் முக்கிய பாத்திரமாக நடித்தார். குன்னக்குடி வைத்தியநாதன் சில திரைப்படங்களில் கௌரவ வேடங்களில் நடித்தும் உள்ளார்.

இவர் 2008 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 75 ஆவது வயதில் சென்னை போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் மாரடைப்பால் காலமானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...கோரக்கர் குறிப்பிட்ட பலாமரத்தையும் கருப்பண்ண சுவாமியையும் தரிசித்து விட்டோம். பலா வடிக்கருப்பருக்குப் பின்பக்கமாய் தைலக்கிணறு இருப்பதாகக் கூறியுள்ளதால் பலா மரத்திற்குப் பின்பக்கமாய் சென்று பார்க்கிறோம். ஆனால் அங்கு காலாங்கி முனிவரால் உண்டாக்கப்பட்ட தைலக்கிணறு ஏதுமில்லை.

ஏமாற்றத்துடன் திரும்பும்போது கோயிலுக்குப் பக்கத்தில் சிறிது தூரத்தில் ஒரு திறந்த நிலை கல் கிணறு நமக்குத் தெரிகிறது. பக்தர்களெல்லாம் அதைத்தான் தைலக் கிணறாக எண்ணி வணங்கிச் செல்கின்றனர்.

காலாங்கிநாதர் வகார தைலத்தை மறைத்து வைத்த கிணற்றுக்கு கல் கதவு போட்டு மூடி அதன் மேல் பாறைக் கல்லையும் தூக்கி வைத்திருப்பதாக கோரக்கர் தெரிவிப்பதால் காலாங்கி நாதர் அமைத்த தைலக்கிணறு அதுவல்ல என்பது மட்டும் நிச்சயம்.

காலாங்கிநாதர் அமைத்த கிணறு கருப்பர் கோயிலுக்குப் பின்பக்கமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டாலும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்களின் பார்வைக்கெல்லாம் அந்த ரகசியக் கிணறு இருக்குமிடம் தட்டுப்படாதாம். மாபெரும் யோகிகளுக்கும், சித்தர்களுக்கும் மட்டுமே அந்த வகார தைலக் கிணறு தென்படுமாம்.

ம்.... சரி, தைலக் கிணற்றைத்தான் பார்க்க முடியாது. அது உருவான வரலாற்றையாவது தெரிந்து கொள்ளலாமல்லவா?

வேதமொரு நான்கேகால் வெற்பாக நின்றதெனப்
போதவுரை சேர்சதுரப் பொங்கரினற் காலாங்கி
நீதசித்தர் தைலமதைநேராக்கி வைத்ததுவும்
சீதமணங் கூர்கிணற்றின் சீர்தெரியச் செப்பிடுவாம்



தைலக்கிணறு

என்று தைலக் கிணறு உருவான விதத்தை தலபுராணம் தெரிவிக்கிறது.

முன்னொரு காலத்தில் வளம் மிகுந்த சிருங்கேரி என்னும் நகரத்தைச் சார்ந்த வாலைபுரம் என்னும் ஒரு கிராமத்தில் இறை பக்தியும், திருப்பணிக் கைங்கரியங்களில் சிறந்த வருமான வாமதேவன் என்ற பிரபல வியாபாரி வசித்து வந்தார்.

பெரும் சிவபக்தரான அவருக்கு அவர் வழிப்படுவதற்கேற்ற சிவாலயம் ஒன்றுகூட அவர் கிராமத்தில் இல்லையே என்ற ஏக்கம் நீண்ட நாட்களாகவே இருந்து வந்தது.

நாட்டை ஆளும் அரசன் அக்கறை கொள்ளாதது போல, தானும் சும்மா இருந்துவிட மனம் இல்லாமையால், தன் முயற்சியால் தன்னுடைய கிராமத்தில் எப்படியேனும் ஒரு சிவாலயம் அமைத்துவிட வேண்டும் என்று முடிவு செய்தார்.

முடிவு செய்தது மட்டுமல்லாது தான் அமைக்கும் சிவாலயம் எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானித்தவராய் வாஸ்து மற்றும் கட்டட வல்லுநர்களையெல்லாம் வரவழைத்து அவர்களுடன் கலந்தாலோசித்து அழகிய சிவலாயம் ஒன்றுக்கான திட்ட வரைவுகளைத் தயாரித்து முடித்தார். அவர்களது ஆலோசனைகளின்படியே தேர்ந்த ஸ்தபதிகளையும் சிற்பிகளையும் வரவழைத்து ஒரு சுபயோக சுப தினத்தில் கோயில் கட்டுவதற்காக அடிக்கல்லும் நாட்டினார்.

கோயில் அடிமட்டம் பூர்த்தியா

## ஆன்மீகம் 49

னது. உபாசனம், சகதி, குமுதம், பத்மம், பட்டிகை முதலான அதிட்டான பகுதி பூர்த்தியானது. வணிகரின் கையிலுள்ள பொருளெல்லாம் செலவழிந்து போனது.

செல்வந்தர்கள் முதலான ஊர்ப் பெரியவர்களிடம் வசூல் செய்து திருப்பணியைத் தொடர்ந்தார். சுவர்ப் பகுதி பூர்த்தியானது.

இன்னும் பிரஸ்தரம், தள அமைப்பு, விமானம், முன் மண்டபம், கோபுரப் பாகங்கள் தொடந்து கட்ட பொருள் இல்லாமையால் திருப்பணி பாதியில் நின்றது.

மன்னர்களைத் தேடினார். தனி மனிதனின் திருப்பணிக்குத் தயக்கம் காட்டினர். கவலை தோய்ந்த முகத்துடன் திரும்பி வரும்போது அவருக்கு முன்பாக முனிவர் ஒருவர் எதிர்ப்பட்டார். சோர்வுற்ற அவரது முகத்தைக் கண்டு அவரது துன்பத்திற்கான காரணத்தை கேட்டார். அவரும் அவரை வணங்கி அனைத்து செய்தி களையும் கூறி ஆலயத் திருப்பணியை நிறைவு செய்ய என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார்.


(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி

---




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



61

"...அவுங்க ஞாபகமாத்தான் இந்த சூழற் கோப்பையிலே ரெண்டு நெல்லைப் போட்டு வச்சிருக்கேன். அவுங்க இருந்திருந்தா அதை நிச்சயம் நிறைவேத்தியிருப்பேன். என்ன செய்றது? எங்க உயர்வைப் பாக்குறதுக்கு முன்னாலே போய் சேந்துட்டாங்க" என்று கண் கசிந்தார்.

செம்மல் ஏழ்மையைப் போற்றியவர். வறுமையில் பெருமை கொண்டவர். அதை அவர் மறக்கவில்லை என்பதற்கு இன்னொரு நிகழ்ச்சி.

வேலை முடிந்து வீடு போய்ச்சேர இரவு ஜாமமாகும். படுக்கப்போவதற்கு முன் பழைய சோறும் தயிர், வற்றல் குழம்பு உண்பார். எத்தனை மணிக்குப் போனாலும் இது வழக்கம். வெளியூருக்கு, படப்பிடிப்புக்குப் போனாலும் அரசியல் பிரசாரத்துக்கு போனாலும் ஊற்றி வைத்து படுக்கப்போகையில் உதவியாளர்கள் கொடுப்பார்கள்.

வாழ்கையில் வசதி வந்ததும், புரோட்டின் உணவுகளையே உண்பேன். ஆப்பிள் ஜூஸ் மட்டுமே சாப்பிடுவேன் என்று சொல்லிக் கொள்பவர் அல்லர் செம்மல். பழைய உணவுக்கு வைத்திய ரீதியில் "பகலெல்லாம் தொழில் ரீதியில் ஏற்படும் உஷ்ணத்தை இந்த உணவு தணிக்கிறது. மலச்சிக்கல் இல்லாமல் காக்கிறது" என்று சொல்வார். ஆன்ம ரீதியில் சொல்வது- இந்தப் பழையது பழையதை நினைக்க என்று!

இதோ என் பதில்

என்னுடைய ஆட்சி நீக்கத்துக்கு படத்தின் மூலமே பதில் சொல்ல ஒரு கதை வேண்டும் என்றார் செம்மல்.

முதல்வர் என்ற பெயர் ஆட்சியில் மட்டுமல்ல, கல்லூரியிலும் உண்டு. [illegible] முதல்வரை வைத்து எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டு வந்தேன்.

செம்மலுக்குக் கதை எழுதினால் வீட்டில்தான் எழுதுவேன். ரூம் போட்டு எழுதுவது அவருக்கு பிடிக்காது. என் கற்பனைக்கு இலகுவாக அப்போது சென்னை புதுக்கல்லூரியிலும், எஸ்.ஐ.இ.டி. பெண்கள் கல்லூரியிலும் இரு நிகழ்ச்சிகள் நடந்தன.

புதுக் கல்லூரியில் அப்போது முதல் [illegible] இருந்தார். அதே கல்லூரியில் படித்து முதல்வராக வந்தவர் என் நண்பர். அவர் அக்கல்லூரியின் வேலை நிறுத்த காரணத்தை விளக்கினார். அவர் நிர்வாகத்தினர் பக்கம் இல்லாமல் மாணவர்களுடன் இருந்தே அவர்களுக்கு வெற்றி தேடிக் கொடுத்து விட்டு விலகிவிட்டார்.



நடிகர் திலகம் சிவாஜிகணேசனுடன் எம்.ஜி.ஆர்.

எஸ்.ஐ.இ.டி. கல்லூரி ஸ்ட்ரைக் வேறு விதம். உணவு உண்ணும் ஹாலுக்கு மின் விசிறி வேண்டும். படிக்கும் வகுப்பறைகள் விசாலமாக வேண்டும் என்பதே. அந்த மாணவர்களை காம்பவுண்டுக்கு வெளியே பிளாட்பாரத்தில் அமர வைத்து, பாடங்கள் சொல்லிக் கொடுத்தனர் ஆசிரியைகள், மலர்கள் வெயிலில் வாடுவதைப் போல் பெண்கள் வாடினர். இருந்தாலும் படிப்புக் கெடாமல் வெற்றி கண்டனர்.

இந்த நிகழ்ச்சிகளை மையமாகவும் காட்சிகளாகவும் வைத்து கதையமைத்தேன். செம்மலுக்குப் பிடித்திருந்தது. வசனம் எழுதச் சொன்னார்.

படத்தை ஒரே மாதத்தில் முடித்து வெளியிட ப.நீலகண்டன் அவர்களையும் கே.சங்கர் அவர்களையும் நியமித்தார்.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கைதடியில் அமைந்துள்ள செவிப்புலன் மற்றும் விழிப்புலன் அற்ற மாணவர்களுக்கான நவீல்ட் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் மாணவர்களின் அணிவகுப்பு இடம்பெறுவதையும் மாணவர்களின் கயிறிழுத்தல் போட்டியையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் வெற்றிபெற்ற மாணவியொருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

நிழல்கள்





யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவிகளின் அணி வகுப்பையும் இடைவேளை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)




யாழ்.கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் ஒலிம்பிக் தீபம் ஏற்றி போட்டிகள் ஆரம்பிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.





கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் அணிநடை நிகழ்வையும் விருந்தினர்கள் மாணவர்களுக்கு கேடயம் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)





கிளிநொச்சி தர்மபுரம் இல 1 பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு கல்லூரி முதல்வர் சு.சுதாகரன் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சான்றிதழ் பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் நிற்பதையும் மாணவர்களின் விநோத உடை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தியசாலை கட்டடத் தேவைகளுக்கு

# 1800 கோடி ரூபா செலவிடப்படும்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்க வைத்தியசாலைகளில் நிலவும் கட்டடக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவென இவ்வருடம் ஆயிரத்து 800 கோடி ரூபா செலவிடப்படும் என்று சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இந்நிதி மூலம் வைத்தியசாலை கட்டடங்கள் மாத்திரமல்லாமல் வைத்தியர்கள், தாதியர் மற்றும் ஊழியர்களுக்கான தங்கும் விடுதிகளும் நிர்மாணிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டை பொது வைத்தியசாலையில் சி. ரி. இயந்திரப் பிரிவைத் திறந்து வைக்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த 2013 ஆம் ஆண்டில் ஜப்பானுக்கு மேற்கொண்டிருந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது இலங்கையின் அரசாங்க வைத்தியசாலைக்குத் தேவையான நவீன மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்நாட்டு அரசாங்கத் திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதன் பயனாக ஜப்பானிய அரசாங்கம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவர் ஊடாக 770 மில்லியன் ரூபாவை மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கியது.

இந்நிதியைக் கொண்டு 58 இரத்த சுத்திரிகரிப்பு தொகுதிகளும், 8 சி. ரி. ஸ்கானர் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டுத் தேவையான வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2014 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் ஊடாக சுகாதாரத் துறைக்கு 157 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. அதே நேரம் சுகாதாரத்துறை கட்டடங்களை நிர்மாணிக்கவென 18 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இந்நிதி வெளிநாட்டு நிதியங்கள் மூலம் நன்கொடை களாகவே எமக்குக் கிடைக்கின்றன.

இந்நிதி மூலம் வைத்தியசாலைக் கட்டடங்கள் மற்றும் வைத்தியர்கள் தாதியர்கள், ஊழியர்களுக்கான தங்கும் விடுதிகள் என்பன நிர்மாணிக்கப்படும்.

கடந்த 5, 6 வருடங்களில் நாட்டிலுள்ள சகல வைத்தியசாலைகளிலும் பாரிய அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

மருத்துவ வசதிகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன் காரணத்தினால் எமது மக்கள் பெரிதும் பயன அடைந்து வருகின்றார்கள் என அவா மேலும் தெரிவித்தார். (அ-2)

## வடக்கு மற்றும் கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்துக

### ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு கோரிக்கை

இலங்கையில் தமிழீழம் அமைப்பது தொடர்பில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தமிழ் மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பினை நடத்த அமெரிக்கா நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.இவ்வாறு ஒபாமாவுக்கான தமிழர் அமைப்பு இந்த கோரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரிக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

இம் மாதம் நடைபெறவுள்ள மனிதவுரிமைகள் மாநாட்டின் போது, இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்றை வலியுறுத்திய பிரேரணையை அமெரிக்கா முன்வைக்கவுள்ளது.

இந்த பிரேரணையில் மேலும் இரண்டு விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும். சூடானில்மேற்கொள்ளப்பட்டதைப் போலவே இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்கள் எவ்வாறான அரசாங்கத்தை விரும்புகின்றனர் என்பது தொடர்பான கருத்துக் கணிப்பு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

அத்துடன் இலங்கை அரசாங்கத்தின் பழிவாங்கும் செயற்பாடுகளில் இருந்து தமிழர்களை பாதுகாக்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை அந்த அமைப்பு முன்வைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு தனியான இராச்சியம் ஒன்று கிடைப்பதே தீர்வாக அமையும் என்றும் அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)



தென்மராட்சி கல்வி வலயத்தின் சைவசமயப் பாட பிரிவினரால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் முதலாம் இடத்தினைப் பெற்ற மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களை படத்தில் காணலாம்.

(படம்:- சாவகச்சேரி செய்தியாளர்)

## குடும்ப அரசியலை நான் விரும்பவில்லை

தந்தையிடம் இருந்து புதல் வருக்கும், மகளுக்கும் ஆட்சி அதிகாரம் கைமாறும் குடும்ப அரசியல் முறைமையை தான் எதிர்ப்பதாக அமைச்சர் றெஜினோல்ட் குரே தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி விவாதம் ஒன்றில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில், குடும்ப அரசியலைதான் விரும்பவில்லை என்பதன் காரணமாகவே மாகாண சபைத் தேர்தலில் உறவினர்கள் எவரையும் நிறுத்தவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் அரசியலுக்காக எந்த அர்ப்பணிப்பையும் செய்ய தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார். (அ-2)

## ஆட்டோவிபத்தில் ஒருவர் மரணம்

திருகோணமலை, நிலாவெளி பகுதியில் முச்சக்கரவண்டி-பேருந்து நேருக்கு நேர் மோதியதில் ஆட்டோ வில் சென்ற மூவரில் ஒருவர் மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு படு காயமடைந்த மூவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொழும்பிலிருந்து சுற்றுலா வந்த பேருந்து வண்டியே ஆட்டோவில் மோதுண்டதாகவும் தெரிய வருகின்றது. (அ-2)

# ஜெனீவாவை இலக்கு வைத்தே தேர்தலை நடத்துகிறது அரசு

## ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கம் உண்மையான தேசப்பற்றுள்ள நாட்டை நேசிக்கும் அரசாங்கமாக இருந்தால், ஜெனீவாவில் இம் மாதம் இலங்கைக்கு எதிராக வாக்களிப்பு நடத்தப்படவுள்ளநிலையில், இங்குள்ள வேலைகளை நிறுத்தி விட்டு அதில் வெற்றி பெறுவதற்கான முயற்சிகளில் ஈடு பட் டிருக்க வேண்டும் என ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்ட மகாஹார பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக யோசனை கொண்டு வரப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

அரசாங்கம் உண்மையில் நாட்டை நேசிக்கும் தேசப்பற்றுள்ள அரசாங்கம் என்றால், என்ன செய்திருக்க வேண்டும். இங்குள்ள பணிகளை இடைநிறுத்தி விட்டு, அமைச்சர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து ஆதரவுகளை திரட்டியிருக்க வேண்டும்.

அதனை செய்யாத அரசாங்கம், இங்கு தேர்தலையும் நடத்திக் கொண்டு சர்வதேச சதித்திட்டம், மின்சார நாற்காலி பற்றி பேசி வருகிறது.

மாகாண சபைத் தேர்தல் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு பயிற்சி வழங்கும் முன்பள்ளியாக மாறியுள்ளது.

இவர்கள் கொள்கைகளை முன் வைத்து தேர்தலில் வெற்றி பெறுவதில்லை. இலஞ்சம் கொடுத்தும், அச்சுறுத்தியும், சர்வதேச பிரச்சினைகளை காட்டியும் இவர்கள் தேர்தலில் வெற்றி பெறுகின்றனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்தல் நடைபெறுகிறது. தேர்தல் நடத்தப்படும் தினத்தை அறிவிக்க வேண்டியவர் தேர்தல் ஆணையாளர்.

வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், அவற்றை ஆரா



ய்ந்து ஏற்றுக்கொள்ள கூடியவற்றை ஏற்றுக்கொள்ளும் தினத்தில்தான் தேர்தல் நடைபெறும் தினம் அறிவிக்கப்படும்.

ஆனால் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் பெறப்படும் முன்னர் எதிர்வரும் 29 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன கூறியிருந்தார்.

தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய செய்ய வேண்டிய பணியை அதற்கு முன்னர் அரசாங்கத்தின் அமைச்சர் ஒருவர் செய்து விட்டார். எப்படி இது நடந்தது. மகிந்த ராஜபக்ஷ தேர்தல் நடத்த வேண்டிய தினத்தை ஏற்கனவே தீர்மானித்து விட்டார் என்பதே உண்மை.

ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவின் கூட்டத் தொடரை இலக்கு வைத்தே இந்த தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா மனிதவரிமை ஆணைக் குழு எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் ஜெனீவாவில் கூடுகிறது. அமெரிக்கா இலங்கைக்கு எதிராக யோசனை ஒன்றை கொண்டு வருகின்றது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அது நாட்டுக்கு தீங்கானதும் பாதிப்பானதுமான யோசனை, ஆனால் அரசாங்கம் என்ன செய்கின்றது. இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்படும் யோசனையை தோற்கடிக்க நடவடிக்கை எடுக்காது, அந்த தோல்வியை காட்டி இங்கு தேர்தலில் வெற்றி பெற முயற்சித்து வருகிறது.

இதனால் இம் மாதம் நடைபெறும இரண்டு வாக்கெடுப்பும் ஆபத்தானது. ஒன்று ஜெனீவாவில் நடை பெறும் வாக்கெடுப்பு, இரண்டாது இலங்கையில் நடைபெறும் வாக்கெடுப்பு. இவை இரண்டையும் நாம் தோற்கடிக்க வேண்டும் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அம்மா அப்பா கையால சாப்பிடனும்"

## அரித்ராவின் ஆசை



உயரமான மதில் சுவர்கள் சூழ்ந்த சிறைச்சாலைக்குள் நிழல் சூழ்ந்த ஒரு மரம். அதன் கீழே ஒரு கரும்பலகை. கைதிகளுக்குப் பாடம் நடத்துகிறார் பேரறிவாளன். சிறையில் பிறந்த ஏதோ ஒரு குழந்தைக்கு அழகாக உடைதைத்துக் கொடுக்கிறார் முருகன். தான் சிறையில்கட்டிக்கொண்டிருக்கும்சாய்பாபாகோயிலை மேலும் எப்படி அழகாக்கலாம் எனக் கழிகிறது சாந்தனின் வாழ்வு. 23 ஆண்டுகாலசிறைவாழ்க்கை... காலை 6 மணியில் இருந்து மாலை 5 மணி வரை கம்பிகளுக்கு வெளியே சுவர்களுக்குள் சுழலும் வாழ்வு. இருள்கவியும் நேரத்தில் தனிமைச் சிறைக்குள் சென்றுவிடுகிறது.

உச்ச நீதிமன்றத்தால் தூக்குத்தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டு, தமிழக அரசு ராஜீவ் படுகொலை வழக்கில் ஆயுள் கைதிகளான 7 பேரையும் விடுவிக்கும் முடிவை எடுத்த போது சிறையில் ஒரே ஆரவாரம். முருகன், சாந்தன், பேரறிவாளன், நளினி, ஜெயக்குமார், ரவிச்சந்திரன், ராபர்ட்பயஸ்.... உள்ளிட்ட 7 பேரும் 23 ஆண்டு கால சிறை வாசத்தில் சேகரித்த புத்தகங்களையும் துணி மணிகளையும் எடுத்து வைக்கத் தொடங்கினார்கள்.

பேரறிவாளன் விடுதலையாகி வந்ததும் என்னென்ன செய்ய வேண்டும்? யார் யார் வீட்டிற்குச் செல்ல வேண்டுமெனப் பட்டியலிடத் தொடங்கினார் அவரது அம்மா அற்புதம்மாள்.


இத்தனை வருஷத்தில இழந்தவை ஏராளம். ஆனால், பல்லாயிரக்கணக்கான அன்பான உள்ளங்களைச் சம்பாதிச்சிருக்கோம். அறிவுக்காக செங்கொடி தனது உயிரையே கொடுத்தாளே (அழுகிறார்) நீதிக்கான இந்தப் போராட்டத்தில் இறுதியாக எங்கள் வாழ்வில் விளக்கை ஏற்றியது முதல்வர் அம்மாதான். தமிழக முதல்வர் அம்மாதான் என் மகனைக் காப்பாத்துவாருன்னு நான் 2011 இலிருந்தே சொல்லிட்டிருந்தது வீண்போகலை. சீக்கிரமே அறிவு வெளியில் வருவான். இத்தனை வருஷத்துக்கும் முடிவுக்கு வரும்னு நம்பிக்கையோட காத்திருக்கேன் என்றார் அற்புதம்மாள்.

விடுதலைச் செய்தி வெளியான உடனேயே தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் தமிழகம் முழுவதும் இனிப்புக் கொடுத்துக் கொண்டாடினார்கள். ஆனால், மறுநாளே 7 பேரையும் விடுவிக்கத் தடை கோரி மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனுவைத் தாக்கல் செய்தது. விடுதலைக்கு இரு வாரத் தடை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. உடனே அந்த உற்சாகம் வடிந்து கோப மாக மாறியது. வழக்கறிஞர் மூலமாக பேரறிவாளனிடம் பேசியபோது, சிறை என்பதே சுவர்களால் தனிமைப்படுத்தப்பட்ட ஒரு பகுதி தான். அதற்குள் உயர் பாதுகாப்புத் தொகுதி என்ற பெயரில் 23 ஆண்டுகள் தனிமைச் சிறையிலேயே வாழ்ந்துவருகிறேன். இதற்கெல்லாம் ஒரு முடிவு வருகிறது என்பதை நினைக்கும்போது அந்த உணர்வைச் சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை. தண்டனைக்குறைப்பு என்பதைவிட நாங்கள் எதிர்பார்ப்பது விடுதலையை. அது உச்ச நீதிமன்றம் மூலமாகவும் தமிழக முதல்வர் மூலமாகவும் சாத்தியமாகியிருக்கிறது. எனக்காக பல்லாயிரம்பேர் உழைத்திருக்கிறார்கள். சிறையிலிருந்து வெளியில் வந்ததும் முதன் முதலாக நான் செல்ல விரும்புவது செங்கொடியின் கல்லறைக்கு. என் தங்கையின் தியாகத்துக்கு முதல்மரியாதை செய்ய விரும்புகிறேன். அடுத்து என் ஆசான் தந்தை பெரியாரின் நினைவிடத்துக்குச் செல்ல வேண்டும். என் சொந்த ஊரில் மக்களைச் சென்று பார்க்க வேண்டும். எஞ்சிய என் வாழ்நாளை சமூகப் பணிகளில் மட்டுமே செலவிடுவேன். என் விடுதலைக்காக உழைத்த மக்களுக்கு நான் செய்யப் போகும் நன்றி இதுதான் என்கிறார் பேரறிவாளன்.

நளினி- முருகனின் மகளான அரித்ரா தற்போது லண்டனில் இருக்கிறார். இன்னும் சில மாதங்களில் தன் மருத்துவக் கல்வியை நிறைவு செய்யவிருக்கும் அரித்ரா, நான் இரண்டரை வயதுக் குழந்தையாக இருந்தபோது சிறையிலிருந்து வெளியே வந்தேன். பின்னர் ஈழத்தில் வாழ்ந்து லண்டனுக்கு வந்தேன். இத்தனை ஆண்டுகளில் ஒரே ஒருமுறை மட்டும் வேலூர் சிறையில் என் அப்பா அம்மாவைச் சந்தித்தேன். அதன்பிறகு சந்தித்தது இல்லை. இப்போது வரை எனக்குத் தொடர்ந்து விசா மறுக்கப்பட்டு வருகிறது. அம்மா அப்பாவைச் சந்தித்தபோது, நாங்க தான் எங்க வாழ்க்கையைத் தொலைச்சுட்டோம். நீயாவது நல்ல இருக்கணும். உன் கண்கள் வழியாத்தான் நாங்க இந்த உலகத்தைப் பார்க்கிறோம் என்று சொன்னார்கள். அவர்களின் ஆசையை நிறைவேற்றும் விதமாக என் மருத்துவக் கல்வியை முதல்தர மதிப் பெண் எடுத்து முடிக்க வேண்டும் என்பதே என் குறிக்கோள். எனக்கு விபரம் தெரிந்து ஒருநாள் கூட அம்மாவின் கையால் சாப்பிட்டதேயில்லை. அங்கு வந்து என் அம்மா அப்பாவோடு அமர்ந்து அவர்களின் கையால் உணவருந்த வேண்டும் என்பது தான் என் ஆசை என்கிறார் அரித்ரா.

முருகன், சாந்தன், பேரறிவாளன்.... விடயத்தில் பரிதாபத்துக்கு உரியவர் சாந்தன் தான். பெரும்பாலும் தனிமை விரும்பியான சாந்தன் யாருடனும் பேசுவதில்லை. சிறையிலிருக்கும் இந்த 23 ஆண்டுகளில் உறவினர் என்று ஒருவரும் இதுவரை சாந்தனைச் சந்தித்தது இல்லை. அவரது குடும்பம் பற்றி எந்தச்செய்தியும் வந்ததும் இல்லை.





யாழ்ப்பாணத்திலுள்ள உடுப்பிட்டி என்னும் கிராமத்தில் வசித்துவரும் தில்லையம்பலம்-மகேஸ்வரி தம்பதிக்கு நான்கு பிள்ளைகள். அதில் இரண்டாம் அவர் சாந்தன். தன் மகனைக் காணமுடியாத கவலையிலேயே போனவரும் தில்லை மறைந்துவிட்டார். மகேஸ்வரியிடம் பேசினேன். ரொம்ப வறுமை. நான்கு பிள்ளைகளை வளர்க்கவே சிரமப் பட்டோம். நல்ல சாப்பாடு துணிமணி எதுவுமே கிடையாது. இடியப்பம் வித்துத்தான் குடும்ப வாழ்வு ஓடியது. காலையில் இடியாப்பம் விற்றுவிட்டு பின்னர் பள்ளிக்குச் செல்லும் சாந்தன் பள்ளி முடிந்து வந்தபின்னரும் இடியப்பம் விற்கச் செல்வான். குடும்பத்தின் கஷ்டம் அறிந்து அந்த இளம் வயதிலேயே வேலைக்குச் சென்று உழைப்பான். இந்தியா போய் அங்கிருந்து வெளிநாட்டுக்குப்போகப் போகிறேன் என்றுதான் இங்கிருந்து போனான். அவனுக்கும் இயக்கத்துக்கும் எந்தத் தொடர்புமில்லை. எப்படி ராஜீவ் படுகொலை வழக்கில் தொடர்புபடுத்தினார்கள் என்றும் தெரியவில்லை. எப்படியாவது என் பிள்ளையை இந்தியா வந்து பார்க்க வேண்டும் என்று ஆசை. ஆனால், வாழவே வழியில்லை. ஆகாயத்துலஏறிப்போகஏழைஆசைப்படலாமா? என் பிள்ளை ஒரே ஒரு தடவை கடிதம் எழுதியிருந்தான். அதன்பிறகுஎந்தத் தகவலுமில்லை. இப்போ மகனோட விடுதலை செய்தி கிடைச்சது. என் பிள்ளை க்கு என் கையால் ஒரு வேளை உணவு ஊட்டிவிட்டால் போதும். அந்த நிம்மதியோடு என் வாழ்வை முடித்துக்கொள்வேன்! என் பாட்டி வயதுடைய மகேஸ்வரியின் ஆசையும் பேத்தி வயதுடைய அரித்திராவின் ஆசையும் ஒன்றுதான். 19 வயதில் பிடித்துச் செல்லப்பட்ட தன் மகன் வீடு திரும்புவார் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் அற்புதம்மாள், பேரறிவாளன் குறித்து விபரித்த காட்சிதான் இந்தக் கட்டுரையின் தொடக்கத்தில் உள்ள வரிகள். சிறையில் சக கைதிகளுக்கு பேரறிவாளன் வகுப்பு எடுக்கும் அந்தச் சித்திரம் ஓவியமாக வரவேண்டும் என்பது அற்புதம்மாளின் வேண்டுகோள். அவரது இந்த ஆசை இங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது. நிறைவேற்றப்படாத இன்னும் எத்தனையோ ஆசைகளும் கனவுகளும் ஏக்கங்களும் வேலூர் சிறையின் கம்பிகளுக்குள்ளே அலை பாய்ந்தபடியே இருக்கின்றன.

> "அம்மா அப்பாவைச் சந்தித்த போது, நாங்க தான் எங்க வாழ்க்கை யைத் தொலைச் சுட்டோம். நீயாவது நல்ல இருக்கணும். உன் கண்கள் வழியாத் தான் நாங்க இந்த உலகத்தைப் பார்க்கிறோம் என்று சொன்னார்கள்.
>
> அவர்களின் ஆசையை நிறைவேற்றும் விதமாக என் மருத்துவக் கல்வியை முதல்தர மதிப் பெண் எடுத்து முடிக்க வேண்டும் என்பதே என் குறிக்கோள். எனக்கு விபரம் தெரிந்து ஒரு நாள் கூட அம்மாவின் கையால் சாப்பிட்டதேயில்லை. அங்கு வந்து என் அம்மா அப்பாவோடு அமர்ந்து அவர்களின் கையால் உணவருந்த வேண்டும் என்பதுதான் என் ஆசை"

### தூக்கு அரசியலின் உண்மை முகம்!


இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தண்டனையைக் குறைத்து உத்தரவு பிறப்பித்த அடுத்த நாளே 7 பேரையும் விடுதலை செய்யும் அறிவிப்பை வெளியிட்டார் ஜெயலலிதா. இத்தனை ஆண்டுகளாக இவர்களின் விடுதலைக்காகப்போராடி வந்த பல்வேறு அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்களின் மத்தியில் இந்த உத்தரவு பெரும் நம்பிக்கை ஒளியைச் சுடர்விடச் செய்தது.

கடந்த தி.மு.க. ஆட்சியில் நளினிக்கு மட்டும் தண்டனைக்குறைப்பு செய்ததையும் மற்ற மூவருக்கும் தூக்குதண்டனையை நீக்காமல் விட்டதையும் இணைத்து கருணாநிதியை விட தனக்கே இவர்களின் விடுதலை விடயத்தில் கூடுதல் பங்கு இருக்கிறது என்பதாக ஜெயலலிதாவின் அறிக்கை அமைந்தது. தமிழின தலைவர் என்ற கருணாநிதியின் பட்டத்தைக் கூட இரவோடு இரவாகப் பறித்து தமிழினத் தலைவியானார் ஜெயலலிதா.

அன்று ஜெயா ரிவியில் நடைபெற்ற விவாத நிகழ்ச்சியில் ஜெயலலிதாவின் அடைமொழி இதுதான். அ.தி.மு.கவினரோ, ஜெயா ரிவியோ இப்படிச்சொல்வதில் வியப்பில்லை. ஆனால், முற்போக்காளர்களும் எழுத்தாளர்களும் அரசியல் விழிப்புக்கொண்டோரும் இப்படியே பேசினார்கள். அது அரசியல் உள்நோக்கம்கொண்ட நடவடிக் கையாகவே இருந்துவிட்டுப்போகட்டும். எப்படியோ 7 பேர் விடுதலையானால் சரி தான். இதைக் கருணாநிதி ஒருபோதும் செய்திருக்க மாட்டார் இல்லையா? என்று உணர்ச்சிவசப்பட்டுப்பேசினார்கள்.

ஆனால், இந்த விடுதலை உத்தரவு ஜெயலலிதாவின் தேர்ந்த அரசியல் என்று கணிக்கிறார்கள் அரசியல் விமர்சகர்கள். ஜெயலலிதா ஈழத்துக்கும் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக எந்தக்காலத்திலும் இருந்ததில்லை என்பது அனைவருக்கும் தெரியும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்புகூட புலிகளால் என் உயிருக்கு ஆபத்து இருக்கிறது என்று சொன்னவர். கடந்த மாதம் கூட நளினியின் பரோ மனுவை நிராகரித்த வர். ஆகவே, இப்போது 7 பேரை விடுதலை செய்யும் முடிவை இதன் அரசியல் நியாயத்தை ஏற்றுக்கொண்டு அவர் செய்யவில்லை. தேர்தல் வருகிறது என்பதால்தான் செய்துள்ளார். எப்படியும் மத்திய காங்கிரஸ் அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் என்பது ஜெயலலிதாவுக்குத் தெரியும் என்கிறார்கள்.

ராஜீவ் காந்தி படுகொலையின் போது எழுந்த அனுதாப அலையில் மாநிலத்தில் ஆட்சியைப்பிடித்தார். ஜெயலலிதா. இப்போது அவர் பிரதமர் கனவில் இருக்கும் போது மறுபடியும் அதே ராஜீவ் காந்தி படுகொலை வழக்கு அவருக்கு கைகொடுக் கிறது.



ராஜீவ் காந்தியால் காங்கிரஸ் அடைந்த ஆதாரத்தை விட ஜெயலலிதா அடைந்த அல்லது அடையப்போகும் ஆதாயமே அதிகம்.

-ஜூனியர் விகடன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை ஆடுகளம்

## திருமறைக் கலாமன்ற நடன அளிக்கை

இயற்கை பற்றி கவிதைகள் பல பேசக் கண்டிருக்கிறோம். ஆனால், ஆடலும் பாடலும் தாளமும் ஒன்றிணைந்த ஓர் அற்புத நடன நிகழ்வினூடாக ஐம்பெரும்



பூதங்களின் அற்புதங்களை அழகாகவும் அதேவேளை அறிவுரையாகவும் எடுத்தியம்பிய ஓர் கலைப் படைப்பே திருமறைக் கலாமன்றமும் யாழ். இந்தியத் துணைத் தூதரகமும் இணைந்து வழங்கிய "இயற்கை ஆடுகளம்"

புதியன புகுதலும் பழையன கழிதலும் காலத்தின் தேவை என்பதை காட்டி நிற்கும் திருமறைக் கலாமன்றத்தின் கலைப்படைப்புக்கள் பலவற்றில் இதுவும் ஒன்று.

கடந்த சில மாதங்களின் முன்னர் பரதக்கலை மூலம் காலத்தின் கோலங்களை " கால தூரிகை" எனும் மேடை நிகழ்வில் நிகழ்த்திக் காட்டிய திருமறைக் கலாமன்றத்தினர் யாழ்ப்பாணத்தில் கலைத்தூது கலையகத்தில் இம் கடந்த மாதம் 14 ஆம் திகதி நடத்திய "இயற்கை ஆடுகளம்" நடன அளிக் கையின் ஊடாக, வானத்தின் அழகை, நீரின் சிறப்பை, நிலத் தின் பெருமையை, காற்றின் தேவையை, நெருப்பின் வலிமையை, கண்களால் பேசியும், கைகளால் முத்திரையிட்டும், கால்களால் நர்த்தனமிட்டும் , ஆடலும் பாடலும், தாளமும் ஒன்றிணைய நிகழ்த்திக் காட்டியமை கலை ஆர்வலர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டது என்றால் அதில் வியப்பில்லை.

அந்த மேடையில் தவழ்ந்து வரும் தென்றலைக் கண்டோம். சலசலக்கும் அருவியினை பார்த்தோம். வானத்தின் வர்ண ஜாலத்தைக் கண்டோம். சுழலும் பூமியின் எழில்தனை இரசித்தோம், கிழக்கில் எழும் சூரியனின் அழகுதனைக் கண்டோம். மொத்தத்தில் ஆடற்கலையின் அழகுதனை அந்த மேடையில் பார்த்தோம்.

அது மட்டுமல்லாது, மேடையில் ஆடிய் அணங்குகளின் அங்க அசைவுகளில் துள்ளி ஓடும் மானையும், தோகை விரித்தாடும் மயிலையும், விரியும் மலர்களின் அழகையும்தான் காணமுடிந்தது என்றால் அந்தளவு பக்குவமாக பரதக்கலையை கையாண்டார்கள் என்றே உணர முடிகின்றது. இதற்கு சாந்தினி சிவநேசன், பத்மினி செல்வேந்திரகுமார், சுதர்சினி கரன்சன் போன்ற நடன ஆசிரி



யர்களின் நட்டுவாங்கமும், இசைத் தென்றல் ம.யேசுதாசனின் இசையமைப்பும் மெருகூட்டியது எனின் வியப்பன்று.

காலத்தின் தேவைக்கும், எதிலும் புதிதை எதிர்பார்க்கும் கலை உலகின் இன்றைய சூழ்நிலைக்கும் ஏற்ப கலைக்குரவர் மரிய சேவியர் அடிகளாரும் அவரின் கலைக்கூடமாம், திருமறைக் கலாமன்றமும் பாரம்பாரியங்களைக் பேணிக்கொண்டே படைப்புக்கலையில் புதியன புகுத்தி புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டு வருவதை நமது மண் நன்றாக அறியும்.

போரின் மத்தியிலும், வீழ்ந்து சிதறிய கொடூர குண்டுகளின் மத்தியிலும் கூட தொடர்ந்து கலைப் பணியாற்றிக் கொண்டிருக்கும் கலைக்குரவர் மரிய சேவியர் அடிகளாரையும், அவர்தம் கலைக் குடும்பத்தினரையும் ஈழத் தமிழினம் இலகுவில் மறந்துவிட முடியாது.

கலை மட்டுமல்ல, சமூக மாற்றத்திற்காக, சமுதாய விடுதலைக்காக, ஒடுக்கப்பட்ட இனத்தின் குரலை ஓங்கி ஒலிப்பதற்காக, இன்றைய புரட்சிகர கருத்துக் களை தங்களின் படைப்புக்களின் மூலம் மேடையேற்றி, நிகழ்த்திக் காட்டுவதில் திருமறைக் கலாமன்றம் நவீன காலத்தோடு நகர்ந்து கொண்டேயிருகின்றது என்பது உண்மை.

இந்த நடன அளிக்கை இயற்கையின் அழகைக் காட்டியது மட்டுமல்ல அதனை பகைக்கின் அன்றேல், எதிர்கொள்ள வேண்டிய விபரீத விளைவுகளையும், எடுத்துக்காட்டி, புயலும் பூகம்பமும், சுழல் காற்றும், சூறாவளியும், வெப்பமும், வரட்சி, மண் சரிவும், மண்ல் அரிப்பும், இல்லாத ஓர் உலகம் வேண்டுமெனில், இயற்கையை நேசிப்போம், போஷிப்போம், பாதுகாப்போம் என்ற உணர்வை இந்தக் கலை நிகழ்வு ஏற்படுத்தியது என்பது உண்மையேதான்.

**ஒலிவெற் ஜெனோவா**

## இலங்கை பிரஜை ச்வுதியில் மரணம்

(கொழும்பு)

சவுதி அரேபியாவில் பணி புரிந்த இலங்கைப் பிரஜையொருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக் கப்படுகிறது.

கிண்ணியா பிரதேசத்திலுள்ள சம்மாவச்சத்தீவு கிராமத்தைச் சேர்ந்த வீ. மௌசூக் என்பவரே அண்மையில் உயிரிழந்துள்ளார்.

இவர் சவுதி அரேபியாவில் பணி புரிந்து கொண்டிருந்த போது சுகவீனமுற்று வைத்தியசாலையில் அனுமதிப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இவரது சடலம் நேற்று முன்தினம் சவுதி அரேபியாவில் நல்லடக்கம செய்யப்பட்டுள்ளதாக உறவினரகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-2)

## எந்தத் தீர்மானத்தையும் நாம் ஏற்கப் போவதில்லை

### ஜனாதிபதி திட்டவட்டம்

ஜெனீவாவில் இலங்கைக்கு ஆதரவான நாடுகள் சமர்ப்பிக்கவுள்ள யோசனையில் இலங்கை பங்கேற்காது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.வெளியுறவு அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் நேற்று முன் தினம் வெளிநாட்டு செய்தியாளர் களை கொழும்பில் சந்தித்த போது மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இந் நிலையில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக சமர்ப்பிக்கவுள்ள யோசனையின் பின்னால் பல காரணிகள் மறைந்துள்ளதாக ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டார்.இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்துக்கு எதிராக சாட்சியங்கள் இருக்குமாயின் அந்த சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இதன்போது அரசாங்கம் அது தொடர்பில் ஆராயும்.எனினும் ஜெனீவா யோசனைக்கு அப்பால் இலங்கைக்கும் அமெரிக்காவுக் கும் இடையிலான உறவில் பாதிப்பில்லை.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதி தேர்தல் நடைபெறாது. ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராக எந்தவிதமான தீர்மானம் வந்தாலும் தாம் அதனை ஏற்க மாட்டோம்.போருக்குப் பின்னரான மீள்கட்டுமானம் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் தமது அரசு தம்மாலான அனைத்தையும் செய்திருக்கிறது.

அதேவேளை ஐ.நா. மனித வுரிமைகள் ஆணைக்குழுவில் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதில் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு, அங்கு வரவிருக்கும் தேர்தல் ஒரு அழுத்தத்தை கொடுக்கக் கூடிய நிலை இருப்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.அத்துடன், இந்திய மீனவர்கள் எந்த நிலையிலும், இலங்கைக் கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்க நாம் அனுமதிக்க மாட்டோம் என்று ம் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## ஜப்பான் வாக்களிக்காது

(கொழும்பு)

ஜெனீவா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிரான அமெரிக்க யோசனையின் போது வாக்கெடுப்பில் பங்கேற்காது விடுவது என்று ஜப்பான் தீர்மானித்துள்ளதாக ஜப்பானிய தூதரக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை விடயத்தில் அமெரிக்காவின் யோசனை பாரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று தாம் நினைக்கவில்லை என்று ஜப்பானிய தூதரக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் இரண்டு தரப்பையும் திருப்திப்படுத்தும் வகையில் ஜப்பான் வாக்கெடுப்பில் பங்கேற்காது என்று ஜப்பானிய தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன.

(அ-2)

## கச்சதீவை மீளப்பெற வேண்டும்; அமைச்சர் வாசன் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையிடம் கையளிக்கப் பட்ட கச்சதீவின் அதிகாரத்தை இந்தியா ஏன் மீண்டும் கோர முடியாது என்று இந்திய கப்பல் துறை அமைச்சர் ஜீ.கே.வாசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கச்சதீவை மீளப்பெறுவது தொடர்பில் தமிழகத்தின் திராவிடர் முன்னேற்றக் கழகம் மற்றும் அனைத்திந்திய அண்ணா திராவிடர் முன்னேற்றக் கழகம் என்பன உயர் நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்திருக்கின்றன.

இது தொடர்பான வழக்கில் முன்னிலையான இந்திய மத்திய அரசாங்கத்தின் சட்டத்தரணி, கச்சதீவு எல்லை பிரிக்கப்பட்டதன் அடிப்படையில் இலங்கைக்கு உரிமையானதாக மாறியதால், அதனை இந்தியாவால் மீளக் கோரமுடியாது என்று தெரிவித்திருந்தார்.

மத்திய அரசாங்கத்தின் இந்த நிலைப்பாடு தொடர்பில் நான்கு வாரங்களில் பதில் வழங்குமாறு உயர் நீதிமன்றம் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு காலஅவகாசம் வழங்கி இருக்கிறது.

இந் நிலையில் கச்சதீவை இந்தியா கண்டிப்பாக மீளப்பெற வேண்டும் என்றும், இதன் மூலமே தமிழக மீனவர்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ-2)

## கூட்டமைப்பின் கருத்துக்காக ஆணைக்குழு கலைக்கப்படாது

### தலைவர் பரணகம தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமது பொறிமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால், ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் பாதிப்பு ஏற்படப் போவதில்லை என்று காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழு தெரிவித்துள் .ளது.

காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக் குழுவின் விசாரணைகளில் [illegible] இல்லை. கிளிநொச்சி மாவட்டத்தில் ஆணைக்குழு விசாரணையில் ஈடுபட்டிருந்த சம காலத்தில் மற்றுமொரு குழு மரணச் சான்றிதழ்களை வழங்கி இருந்தமை போன்ற விடயங் களை முன்வைத்து, குறித்த ஆணைக்குழுவை நிராகரிப் பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அண்மையில் தெரிவித்திருந் தது.

இது தொடர்பில் காணாமற் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வெல் பராக்கிரம பரணகம உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையில், கிளிநொச்சியில் மரண சான்றிதழ் வழங்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தமக்கு எதுவும் தெரியாது என்று கூறினார்.

எவ்வாறாயினும் காணாமற் போனவர்கள் தொடர்பில் விசாரணை செய்யவே இந்த ஆணைக் குழுவை ஜனாதிபதி நியமித்திருக்கிறார்.

இந்த நிலையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதனை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதால், அது கலைக்கப்பட போவதுமில்லை, அதன் பணிகள் இடைநிறுத்தப் படுவதுமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காந்தி கொலையாளியை விடுவித்தது காங்கிரஸ் அரசுதான்!

"ஜனவரி மாதம் 21 ஆம் திகதி உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு. அதில் 15 பேரைக் காப்பாற்றினார்கள். அப்போது சொல்லப்பட்ட முக்கிய காரணம்... கருணை மனுவைப் பரிசீலனை செய்வதில் கால தாமதம் என்பதுதான். அதில், "இறந்துபோன ஒருவனை ஒருமுறைதான் எரிக்கிறார்கள். சிறைக்குள் வந்த ஒவ்வொரு நாளும் கைதி தகனம் செய்யப்படுகிறான்.

மனதால் எரிந்து போகிறான்' என்று குறிப்பிட்டு இருந்தார்கள். இப்போது கொடுத்த தீர்ப்பின் சாராம்சமும் அதுதான் - உச்ச நீதிமன்றத் தீர்ப்பு, ஜெயலிதாவின் சட்டமன்றத் தீர்மானம் போன்ற பரபரப்பான சூழ்நிலையில் தீப்பொறிப் பறக்க பேச ஆரம்பித்தார் தோழர் தியாகு.

"உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை நீங்கள் எதிர்பார்த்தீர்களா?" கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி 15 பேரைத் தூக்கிலிருந்து விடுவித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கொடுத்த போதே, இந்த மூவர் வழக்கிலும் இந்தத் தீர்ப்புதான் வர முடியும் என்று நினைத்து இருந்தோம். அதேபோல், பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி அதே அடிப்படையில் மூன்று பேருக்கான தூக்குத் தண்டனையைக் குறைத்து இருக்கிறார்கள். மத்திய அரசால் நீதிமன்றங்கள் ஏற்கும்படியான புதிய வாதங்கள் எதையும் வைக்க முடியவில்லை. "இவர்கள் சிறையில் மகிழ்ச்சியாக இருந்தார்கள். பொது வாழ்க்கை வாழ்ந்தார்கள். நாடகம் நடித்தார்கள். ஆடல், பாடலுடன் இருந்தார்கள்.

ஓவியக் கண்காட்சி நடத்தினார்கள்' என்றெல்லாம் சொல்லிப் பார்த்தார்கள். அதையெல்லாம் நீதிபதிகள் நிராகரித்து விட்டார்கள். அந்தத் தீர்ப்பின் கடைசி பத்தியில் மாநில அரசுக்கும் ஒரு செய்தியை சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். "இவர்களுக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டு இருக்கிறது. ஆயுள் தண்டனை என்று சொல்வது ஒரு ஆயுட்கால தண்டனைதான்' என்று நீதிபதிகளே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். தண்டனையைக் குறைப்பதற்கும், விடுதலை செய்வதற்கும் சட்டத்தில் இடம் இருக்கிறது.

குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 432, 433 ஏ இன்படி இதனை உரிய அரசு செய்ய முடியும் என்பதைச் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவர்கள் விடுதலை செய்யச் சொல்லி பரிந்துரையும் செய்யவில்லை. விடுதலை செய்யக் கூடாது என்று உத்தரவும் போடவில்லை.

"சரி, நீதிபதிகள் இந்தத் தீர்ப்பில் ஏன் இதனைச் சுட்டிக் காட்ட வேண்டும்?"

"தண்டனைக் குறைப்புடன் தீர்ப்பு முடிந்து இருக்க வேண்டும் என்பதுதானே உங்கள் கேள்வி ? நீதிபதிகளுக்கு அப்படிச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. தங்களைச் சுற்றி நடப்பதை அவர்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.



தியாகு

சலர், மரண தண்டனை வேணடாம் என்று சொல்லிப் போராடுவதையும் அவர்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். மரண தண்டனைக்கு பதிலாக சாகும்வரை சிறையில் வைத்துக்கொள்ளலாம் என்றும் சொல்கிறார்கள். ஆனால், மரண தண்டனையும் அதுவும் ஒன்றுதான். சொல்லப்போனால் அதைவிட இது மிகவும் கொடுமையானது. சாகும் வரை கைதியை உள்ளேயே வைத்திருந்தால் எப்படி மறுவாழ்வு தர முடியும்? அதனால்தான் உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது. மாநில அரசு அதனால்தான் இதனை முன்னெடுக்கிறார்கள். இது முழுக்க முழுக்க சரியானது"

## மகாத்மா வழக்கைச் சொல்லும் தியாகு!

"முன்னாள் பிரதமரைக் கொன்றவர்களையே வெளியே விட்டால், இந்த நாட்டில் என்ன சட்டம் - ஒழுங்கு இருக்கிறது என காங்கிரஸ் கட்சிக்காரர்கள் கொடி பிடிக்கிறார்களே?"

"நம் நாட்டின் தண்டனைச் சட்டத்தில் பிரதமர் கொலைக்கு என்று ஒரு தனி தண்டனையும் சாமானியன் கொலைக்கு என்று ஒரு தண்டனையுமா இருக்கிறது? சட்டத்தின் முன் அனைவரும் சமம். இதுவும் மனிதக் கொலைக் குற்றம் தான், அதுவும் மனிதக் கொலைக் குற்றம்தான். இது தடா சட்டத்தின்படி என்று வைத்துக்கொண்டாலும்கூட, தடா சட்டத்தைக் கொண்டுவந்ததும் காங்கிரஸ் அரசாங்கம்தான். அதனை வேண்டாம் என்று கைவிட்டதும் காங்கிரஸ் அரசாங்கம்தான். கைது செய்யப்பட்ட மறுநாளே அவர்களை விடுதலை செய்யவில்லையே! எப்படி பிரதமர் கொலை என்பதற்காகப் பிடித்துக்கொண்டு போய் சுட முடியாதோ... அதேபோல் பிரதமர் கொலை என்பதற்காக 23 ஆண்டுகளுக்குப் பின்னரும் விடுதலை செய்யக் கூடாது என்றெல்லாம் சொல்ல முடியாது.

இப்போது திடீரென்று காங்கிரஸ்காரர்கள் குதிப்பதற்கு அர்த்தமே இல்ல.

இவர்களுடைய கோப்புகள் முழுவதும் இருந்தது மத்திய உள்துறை அமைச்சகத்தில். மத்திய உள்துறை அமைச்சகத்தில் யார் இருந்தார்கள்? காங்கிரஸ்காரர்கள்தானே? காலதாமதத்தால் தான் இவர்களுக்கு தண்டனை குறைக்கப்படுகிறது என்று தீர்ப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள்.

இந்தக் காலதாமதத்துக்கு யார் காரணம் என்று ராகுல் கூப்பிட்டு விசாரிக்கட்டும். யார் யாரின் உருவ பொம்மையையோ எரிக்கும் காங்கிரஸ்காரர்கள், ப.சிதம்பரம், சுசில் குமார் ஷிண்டே உருவ பொம்மையையும் எரிக்கட்டும்.

இங்கே இன்னொரு விடயத்தையும் குறிப்பிட்டாக வேண்டும். மகாத்மா காந்தி கொல்லப்பட்டது, 1948 ஜனவரி மாதம் 30. அந்த வழக்கில் நாதுராம் கோட்சேவுக்கும் நாராயண் ஆப்தேவுக்கும்மரண தண்டனை கொடுக்கப்பட்டது. சவார்கர் விடுதலை செய்யப்ப ட்டார்.

கோட்சேவின் சகோதரர் கோபால் கோட்சேவுக்கு ஆயுள் தண்டனை கொடுத்தார்கள். நாதுராம் கோட்சே 1948 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் திகதி சிறையில் அடைக்கப்பட்டு, அடுத்த ஆண்டு 1949 நவம்பர் மாதம் 14 ஆம் திகதியன்று தூக்கில் போடப்பட்டார்.

கோபால் கோட்சே சிறையில் ஆயுள் கைதியாக இருந்தார். அவர், தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று 1961 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

அவரை விடுதலை செய்ய முடியாது என்று 1961 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அப்படியானால் கோபால் கோட்சே சிறையில் தானே வாழ்நாள் முழுக்க் இருந்திருக்க வேண்டும்.? அதுதான் இல்லை!

1964 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி கோபால் கோட்சே விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்தவர், அன்றைய மகாராஷ்டிரா காங்கிரஸ் முதலமைச்சர் வசந்தராவ் நாயக். அதாவது காந்தி கொலையாளியை விடுதலை செய்தது காங்கிரஸ் ஆளும் மாநில அரசாங்கம்.

கோபால் கோட்சே விடுதலையாகி வரும்போது பூனாவில் பெரிதாக வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அதற்கு காந்தியவாதிகள் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்தனர்.

காந்தி கொலைகாரர்களுக்கு இவ்வளவு பெரிய வரவேற்பு கொடுக்கலாமா என்ற கேள்விகள் எழ, யார் அப்படி வரவேற்பு கொடுத்தார்கள் என்று கமிஷன் போட்டு விசாரித்தனர். கோபால் கோட்சேவுக்கு வரவேற்பு கொடுத்தது தவறு என்றுதான் குற்றம் சாட்டினார்களே தவிர, கோபால் கோட்சேவை விடுதலை செய்த காங்கிரஸ் முதலமைச்சர் வசந்தராவ் நாயக்கை யாரும் திட்டவில்லை. கொடிபிடித்துப் போராடவில்லை.

அப்படி இருக்கும்போது, ராஜீவ் கொலை வழக்கில் மட்டும் 23 ஆண்டுகள் கழித்து, வழக்கில் சிறையில் இருப்பவர்களை விடக் கூடாது. விட்டால், அது தேச துரோகம் நாட்டின் இறையாண்மை மீது தாக்குதல்... என்று சொல்வதில் என்ன நியாயம்? மகாதமா காந்தி வழக்கில் ஒரு நீதி... ராஜீவ் காந்தி வழக்கில் மட்டும் வேறு நீதியா?" என்ற கேள்வியுடன் முடிக்கிறார் தியாகு.

- ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைக் கலசம்

## எம்மவரின் சின்னத்தனம்

பண்டிகை நன்னாளில்-கையில்
மலர்ச்செண்டுகொண்டு
பட்டுடை உடுத்தி பாவாடை தரித்து
ஆலயம் செல்லும் நன்னாளில்
கையில் பீடிகொண்டு தீப்பெட்டி
கேட்கும் கலாசாரம்
ரெனிம் டவுசருடன்
பவனிவரும் ஆடவரும்
மதுபான பிரியர்கள் கடைபூட்டியிருந்தும்
சின்னக்கதவினூடே- போத்தல்
வாங்குபவரும் விற்பவரும்
வீதியோரத்தில் பம்பரம்விட்டு
மங்கையரை கேலி பண்ணும் சின்னத்தனமும்
இது போதாதென்று
கையில் கத்தி வாள்கொண்டு
திரைப்பட வில்லன்களாய்
மாறிவிடும் இளைஞர்களும்
எம்மண்ணில் இருக்கும்மட்டும்
எம் சுதந்திரம் பண்டிகை நாளிலும்
கேள்விக்குறியே!

நடுப்பக்க நித்தி, தாவை

## மனித விலங்குகள்

விலங்குகளின் வேடமிட்டு
மனிதர்கள்
மனிதனிடமில்லா உணர்வுகள்
காகங்கள் திருடுவதில்லை
வடையை திருடியதாய்
காக்கா கதை எழுதியவர்கள்
மனிதர்கள் திருடுவதை
எழுதவில்லை
நரியின் தந்திரத்தை பழிப்பவர்கள்
நரியாக வாழ்வதை
வெளிக்காட்டுவதில்லை
அன்புடன் பழகும் மிருகங்களை
மானிடர்கள் வாழ விடுவதில்லை
உண்டு விடுகிறார்கள்
அதனால்தான் என்னவோ
சில மிருகங்கள் மனிதருடன்
உறவாடுவதில்லை

இணுவை வாகீசன்

## ஞாபகம் வருதே

ஞாபகம் வருதே...
பரந்துவிரிந்த நம் ஊரின் வனப்பும்
நடந்து திரிந்த சாலை நினைப்பும்
ஞாபகம் வருதே...
கிட்டியடித்த கிட்டப்பாவீடும்
கிளித்தட்டாடிய மேட்டுத்தரையும்
முற்றத்து மணலில் பாட்டி சொன்ன பழங்கதையும்
ஞாபகம் வருதே...
கூடியிருந்த கூட்டுக்குடும்பமும்
கூட இருந்த சுற்றத்து உறவுகளும்
அண்டை நாட்டில்
அடைக்கலம் புகுந்ததும்
ஞாபகம் வருதே...
வெள்ளமடித்த மழைக்காலமும்
வெயிலடித்த வெற்றுத் தரையும்
கள்ளமில்லா காதல் நட்பும்
கனவாய் போன நினைவுகளும்
ஞாபகம் வருதே...
உறக்கம் கலைத்த கோயில் மணியும்
உழைப்புத் தந்த வயல் காடுகளும்
உருக்குலைந்து போனதும்
ஞாபகம் வருதே...
பனங்காய் சேர்த்த பனந்தோப்பும்
பணங்காசாக்கிய பசுமை நினைவும்
பள்ளியில் செய்த பகிடிவதையும்
பழகிவிலகிய பாதி நட்பும்
ஞாபகம் வருதே...
ஞாபகம் வருதே...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

## இமயம் தொட...

நீ குறி தவறாது
முயலுக்கு எய்யும் அம்பிலும்
குறி தவறினும் போர்க்களத்தில்
வலிமைமிகு யானைக்கு
எய்திடும் அம்பு
மேலானது
உன்னைப் பெருமைப்படுத்த
சிறுமைத்தனத்தை ஒழி
ஒளிர்வாய்...

மாவை.நா. கஜேந்திரன்

## வசந்தம்

பூக்கள் மலர்கின்றது
வாடி விடுவோம் என்ற
கவலையுடன் அல்ல
வசந்தத்தை கொடுப்போம்
என்ற நம்பிக்கையுடன்

## விந்தை

அன்பே,
உன் விழிகளால் என்னை
பார்க்கும் பார்வையிலே
என் கவலைகள் எல்லாம்
அக்கணமே காணாமல்
போகிறது ஏனோ
தெரியவில்லை அதுவோ
உன் கண்ணின் விந்தை

யோ.சிந்துஷா, திருநெல்வேலி



## வளையம் அல்ல உன் வாழ்க்கை

பெற்ற தாய் தந்தையும் இல்லை
ஊட்டி வளர்த்த உறவுகளும் இல்லை
இனியும் இருந்து பலன் இல்லை
புறப்பட்டுவிட்டது இளம்சிட்டு
புயலாய் தன் வருங்காலம் சிறப்பாக
அமையும் என்ற நம்பிக்கையில்...

யோ.காண்டீபன்
மானிப்பாய்

## கவலை

இந்த வாகன
டயரை வீதியில்
உருட்டி விளையாட
என் தம்பி இன்று
அருகில் இல்லையே

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## வெகுவிரைவில்

யுத்தத்தால் மாறிய
யுகத்தின் விளைவாக
பதக்கங்கள் பலவற்றை
பாரினிலே பெற்று
பச்சிளம் பாலகியின் கழுத்தை
அலங்கரிக்கும் நிலை மாறி
அழுக்கான ரயரால்
அலங்கோலப்படுத்தப்பட்டுள்ளதே
வெகுவிரைவில் இந்நிலை
மாறும் அல்லது மாற்றப்படும்

மோகனரூபன்
சுழிபுரம் கிழக்கு

# மௌனத்தின் தேடல் – 193

## முன்நிலை கொள் மகளே

மனதினில் மகிழ்வுகள்
வளர்ந்திடும் வயதினில்
கழுத்தினில் வளையத்தை
மாட்டிடத் தானோ
முள்ளியில் நடந்த துன்பங்கள்
நினைவினில் வந்து
வாட்டுதோ மனதை
எத்துயர் ஆனாலும்
அத்துயர் மறந்து
முன்நிலை கொள்மகளே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

## வாழ்க்கை வட்டம்

இது வெறும்
வளையம் அல்ல
வாழ்க்கை என்று
சுட்டிக் காட்டுகிறாள்
இந்தச் சிட்டுக்குருவி
வாழ்க்கை வட்டமதை
புட்டுக் காட்டுகிறாள்

இ.உதிஸ்டன்
மாவை கலட்டி

## சக்கரம்

நீ நடந்து வந்த
கடந்து வந்த
வாழ்க்கைச் சக்கரத்தின்
அக அழகும் புற அழகும்
தெளிவாய் திடமாய்
வட்டமிட்டு காட்டப்படுகிறது
உணர்வுகளின் உணர்ச்சிகளின்
வடுக்கள் இங்கு உன்
பார்வையில் கானல் நீராய்

யு.சோபியா

## நல்வாழ்வுக்கு

தினம் வீதிகளில் விரையும் வாகனங்கள்
தரை தொட்டுச் செல்ல விலை கூடினாலும்
இப்பொருள் எப்போதும் தேவை
இதுபோல்தான் உலக வாழ்வும்
சக்கரம் போல் சிக்கலின்றிச் சுற்ற
பொதுநலன் நாடும்
தூரப்பார்வை வேண்டும்

க.நாகராசா
நுணாவில்

## தோழமை

வண்டி கட்டி
ஓட்டினோம் அன்று
எங்கள் தோழர்களோடு
ஆனால்
இன்று நான் மட்டும்
தனிமரமாக
தேடுகின்றேன்
கலைந்து போன
எங்கள் தேன்கூட்டை...!

உதயம்ரூபன்
நயினை

## தீர்ப்பு

அன்புத் தங்கையே
அரிதாரம் பூசவேண்டிய
உன் முகத்தில்
கரிபூசவிட்ட பாவிகளை
பழிதீர்க்கும் வரை
உன் அண்ணன் மனம்
ஆறாது கண்ணே!

செந்தூர்
மானிப்பாய்

## வாழ்க்கை

சாதிக்கப் பிறந்த பெண்ணே
சளைக்காதே
இந்தச் சக்கரம் போல்தான்
வாழ்க்கை என்பதை
உணர்ந்து கொள்
இன்று மேல் இருப்பவர்கள்
நாளை கீழ் வந்தேயாக வேண்டும்

சி.தர்சிகன், யாழ்ப்பாணம்

## உடலை உறுதி செய்

சுத்தம் சுகம் தரும் உடலுக்கு
நித்திய பயிற்சி வலுவைத்தரும்
வித்தையும் பத்தியும்
நித்தமும் பழகினால்
சத்தியும் பலமுங் கிடைக்குமிதை
மெத்தவும் புரிந்து செயற்பட்டால்
சித்தம் மகிழ உடலை உறுதி செய்து
உத்தமராய் என்றும் வாழ்ந்திடலாம்

துரை, தென்மட்டுவில்

## உன் பார்வை

வாழ்க்கை ஒரு சக்கரமென்று
மகிழ்வுடனே கையில் ஏந்தி
ஊடறுத்துப் பார்க்கும் பார்வை
தாழ்நிலத்தில் உயர் நிலத்தில்
பறவை போல உலகம் சுற்ற
வாழ்க்கையிலே வெற்றி காண
என்னைச் சுமந்து செல்லும்
ரயரை நான் சுமந்து
செல்கின்றேன் என்கின்றதே

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

# சங்குநாதம் மௌனத்தின் தேடல் –194



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 06.03.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பீகார் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து கோரி ஐக்கிய ஜனதா தள கட்சியினர் தீப்பந்தம் ஏந்தி தர்ணா செய்ததைப் படத்தில் காணலாம்.

# இந்திய நீர்மூழ்கி கப்பல்கள் தரம் குறைவானவையாகும்

## மத்தியரசை கடற்படை எச்சரித்த தகவல் கசிவு

(டில்லி)

இந்திய நீர்மூழ்கி கப்பல்களின் தரம் போதுமானதாக இல்லையென்று மத்திய அரசை கடற்படை ஏற்கனவே எச்சரித்த தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஐ.என்.எஸ் சிந்து ரத்னா என்ற நீர்மூழ்கி கப்பல் மும்பையிலிருந்து 80 கி.மீ. தூரத்தில் கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த போது தீ விபத்தில் சிக்கியது. இவ்விபத்தில் கடற்படை அதிகாரிகள் இருவர் உயிரிழந்தனர். 7 வீரர்கள் படுகாயங்களுடன் மீட்கப் பட்டனர்.


விபத்திற்கு தார்மீக பொறுப்பேற்று கடற்படை தளபதி ஜோஷி தமது பதவியை இராஜினாமா செய்தார். இதனிடையே நீர்முழ்கி கப்பல்களின் தரம் குறித்து கடந்த 2010ஆம் ஆண்டு முதல் இந்திய கடற்படை மத்திய அரசை எச்சரித்து வந்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

ஆனால் கடற்படை கப்பல்களின் தரத்தை மேம்படுத்தவோ, எண்ணிக்கையை அதிகரிக்கவோ, மத்திய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதே நிலை நீடித்தால் கப்பற்படையின் தரம் 2015ஆம் ஆண்டு எப்போதும் இல்லாத அளவிற்கு சென்றுவிடும் என பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் பாதுகாப்புத்துறை அமைச்சகத்தை கடற்படை எச்சரித்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த 7 மாதங்களில் இந்திய கடற்படைக்கு சொந்தமான கப்பல்கள் 10ஆவது முறையாக விபத்தில் சிக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (2)

# முன்னாள் இராணுவ தளபதி வி.கே.சிங் உள்ளிட்ட 100 பேர் பா.ஜ.கவில் இணைவு



(புதுடில்லி)

புதுடில்லி முன்னாள் இராணுவ தளபதி வி.கே., சிங் உட்பட பல்வேறு முன்னாள் இராணுவ ஜெனரல்கள் மற்றும் இராணுவ வீரர்கள் நேற்று பா.ஜவில் இணைந்தனர்.

டில்லி பா.ஜ., தலைமை அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் கட்சி தலைவர் ராஜ்நாத்சிங் பேசுகையில், நமது அணியில் வீர தீர செயல் புரிந்த இராணுவத்தினர் நமது கட்சி யில் இணைவது எனக்கு மகிழ்வும் பெருமையும் கொள்ள செய்கிறது. நானும் இராணுவத்தில் இணைந்து பணியாற்ற விரும்பினேன்.

இராணுவ வீரர்கள் இந்த நாட்டிற்கு பெரும் தியாகம் புரிந்துள்ளனர். இவர்களது தியாகம் இந்நாட்டில் போற்றப்படாமல் புறக்கணிக்கப்படுகிறது. நமது இராணுவ கட்டமைப்பில் பல குறைபாடுகள் உள்ளன. இதனை நிவர்த்தி செய்ய மத்திய அரசு தவறி விட்டது.

பாதுகாப்பு துறையில் மத்திய அரசு முன்னேற்ற நடவடிக்கை எடுக்கவில்லை. சமீபத்தில் கடற்படை அதிகாரிகள தீ வ்பத்தில் இறந்தனர். இது நமக்கு வெட்கமாகவும், வேதனை யாகவும் உள்ளது.

இவர் நமது இராணுவ வீரர்களுக்கு துணையாக இருப்பார். நமது எதிரி நாடுகளை நம்மால் எதிர் கொள்ள முடியும். இதற்கென நாமே ஆயுதங்கள் தயாரிக்கும் தகுதியுள்ளது. இரா ணுவம், பாதுகாப்புத்துறை முன்னேற்றத்திற்கு பா.ஜ., துணையாக இருக்கும் என்றார்.

இந்நிலையில் கடந்த வாரம் மத்திய பரதேச முதல்வர் சிவராஜ்சிங்சவு காணை சந்தித்து சிங் பேசினார். பா.ஜவில் சேரும் விதமாகத்தான் இந்த சந்திப்பு இருக்கும் என செய்திகள் கசிந்தன.

இந்நிலையில் இவர் பா.ஜவில் இணைவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருடன் 100 இற்கும் மேற்பட்ட முன்னாள் இராணுவத்தினர் பா.ஜவில் சேரும் விழா டில்லியில் நடந்தது.


இது குறித்து சிங் கூறுகையில்,

தேச நலனே மிக முக்கியம். இந்த விடயத்தில் பா.ஜ., தேச நலனுக்கென உழைக்கிறது. இந்த திருநாட்டை முன்னோக்கி எடுத்து செல்லும் உறுதி பா.ஜவிடம் இருக்கிறது. எனவே இந்த கட்சியில் இணைவதில் மகிழ்ச்சி அடைகிறேன் என கூறியுள்ளார்.

வி.கே.,சிங் அன்னா ஹசாரேவுடன் மிக நெருக்கமான நட்புக்குரியவராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

பாரதச் செய்தி

# இந்தியாவில் அனைத்து மட்டங்களிலும் ஊழல் பரவியுள்ளது-அமெரிக்கா



(வோஷிங்டன்)

இந்தியாவில் அனைத்து மட்டங்களிலும் ஊழல் பரவியுள்ளது என அமெரிக்கா தெரிவித்துள்ளது. பல்வேறு நாடுகளிலுள்ள மனிதவுரிமை நடைமுறைகள் குறித்து, அமெரிக்க பாராளுமன்றில் அந்நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர், ஜோன் கெர்ரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

அதில், அமைச்சர் ஜோன்கெர்ரி கூறியுள்ளதாவது,

இந்தியாவில், நீதித்துறை முதல் அனைத்து மட்டங்களிலும் ஊழல் பரவியுள்ளது. ஊழலை தடுக்க, சட்டம் இருந்தும், அந்நாட்டு அரசு, அதை தீவிரமாக அமுல்படுத்த வில்லை. ஊழல் குற்றச்சாட்டில் சிக்கிய பிரமுகர்கள் எளிதாக தண்டனையிலிருந்து விலக்கு பெற்று விடுகின்றனர்.

மத்திய புலனாய்வுத்துறை, கடந்த ஆண்டில் 583 ஊழல் வழக்குகளை பதிவு செய்துள்ளது. ஊழல் தொடர்பான புகார்களை பெறுவதற்காக இலவச தொலை பேசி சேவையை ஊழல் கண்காணிப்பு ஆணையம் அறிமுகப்படுத்தியது.

இந்த நடவடிக்கையின் பேரில், 7 ஆயிரத்து 224 வழக்குகள் 2012இல் பதிவு செய்யப்பட்டன. இதில் 5ஆயிரத்து 720 வழக்குகளில் விசாரணை மேற்கொள்ள பரிந்துரை செய்யப்பட்டது.

ஊழலை ஒழிக்க அரசு தரப்பில் போதுமான நடவடிக்கை மேற்கொள்ளப்படாத காரணத்தால் தொண்டு நிறுவனங்கள் வீதியில் இறங்கி போராட்டம் நடத்தி வருகின்றன.

இதன் காரணமாக, லோக்பால் மசோதா பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள பயங்கரவாதிகளும் நக்சலைட்டுகளும் கடத்தல் பாலியல், பலாத்காரம் போன்ற மனிதவுரிமை மீறல் செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். ஜம்மு- காஷ்மீரில் தொடரும் வன்முறையால் 5.5 இலட்சம் மக்கள் வேறி டங்களுககு குடிபெயர்ந்துள்ளனர். இவ்வாறு ஜோன்கெர்ரி கூறியுள்ளார். (2)

# காங்கிரஸ் மீதான எதிர்ப்பு அலை சுனாமியாக மாறும்

## பிரதமர் வேட்பாளர் மோடி



(ஹூப்ளி)

நாடு எதிர்கொண்டு வரும் பல்வேறு பிரச்சினைகள், குறிப்பாக பெண்கள் சார்ந்த பிரச்சினைகளில் காங்கிரசும், அதன் தலைவர்களும் செவ்வாய்கிரகத்தில் இருந்து வந்தவர்களைப் போலவும், வானத்தில் இருந்து வந்தவர்களைப் போலவும் பேசுவதாக பா.ஜ., பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கர்நாடகாவில் குல்பர்க் பகுதியைத் தொடர்ந்து ஹூப்ளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கூட்டத்தில் மோடி உரையாற்றுகையில், காங்., தலைவர்கள் பேசுவதை நன்கு கவனித்தால் அது வேற்று கிரகத்தில் இருந்து வந்தவர்களைப் போன்றும், வானத்தில் இருந்து வந்தவர்களின் பேச்சு போலவும் இருக்கும். நாட்டில் நடைபெற்று வரும் பிரச்சினைகளில் அவர்கள் பொறுப்புடன் நடந்து கொள்வதில்லை. அவர்கள இப்போதுதான் முதல்முறையாக இந்த உலகத்திற்கு வந்திருப்பவர்களைப் போலவும், நாட்டில் நடைபெறும் தவறுகள் யாரோ ஒருவரால் நடத்தப்படுவது போலவும் நடந்து கொள்கின்றனர். இத்தகைய பொறுப்பற்ற நபர்கள் வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது.

அவர்களுக்கு நான் இந்த இடத்தில் சவால் விட நினைக்கிறேன். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகம் நடைபெறுவது டில்லியில்தான். நாட்டிலேயே குஜராத்தில்தான் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவாக உள்ளது .நாடு முழுவதிலும் இருந்து வந்து காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட தலைவர்கள், பிரதமர் வேட்பாளர் குறித்த அறிவிப்பு வரும் என எதிர்பார்த்தனர். ஆனால் அவர்களுக்கு கிடைத்தது கூடுதலாக 3 மானிய சிலிண்டர்கள் வழங்கப்படும் என்பது மட்டுமே.

காங்கிரஸ் கட்சி பிரித்தாளும் அரசியல் நடத்தி வருகிறது. அவர்கள் நாட்டு மக்களை மோதவிட்டு விட்டு டில்லியில் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள்.

நாடு, மாநிலங்கள் மட்டுமின்றி மக்களின் இதயங்களை அவர்கள் உடைக்கிறார்கள். நாட்டுமக்கள் தங்களின் பிரச்சினைகளுக்கான காரணம் காங் கிரஸ்தான் என்று அறிந்து கொணடார்கள். நாட்டிலுள்ள ஏழைமக்கள், இளைஞர்கள், விவசாயிகள் ஆகியோரின் முக்கிய பணி காங்கிரசை வேரோடு பிடுங்கி எறிய வேண்டும் என்பது தான்.

பிரதமர் மன்மோகன்சிங் சுதந்திரமாக செயற்பட முடியாமல், சிலரின் கட்டுப்பாட்டில் செயற்படும் நிர்ப்பந்தத்தில் உள்ளார்.

உள்நாட்டு பாதுகாபபில் கவனம் செலுத்தாமல் இருப்பதால், நமது நாட்டின் எல்லையில் உள்ள சீனா உடபட பல நாடுகள் எல்லை மீறி உள்ளே நுழைந்து அச்சுறுத்தி வருகிறார்கள். வாஜ்பாய் பிரதமர் பதவி வகித்த 6 ஆண்டுகளில், நாட்டை உலகில் முன்னணி நாடுகளுக்கு இணையாக கொண்டு சென்றார்.

அவரது ஆட்சி காலத்தில் தேசிய நெடுஞ்சாலை உட்பட நாட்டில் வளர்ச்சிக்கு அதிகம் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

அத்தகைய பொற்கால ஆட்சியை மீண்டும் கொண்டுவர பா.ஜ. தலைமையில் ஆட்சி அமைய வேண்டும்.

தேர்தல் திகதி அறிவிக்கப்படும் முன்பாகவே காங்கிரசுக்கு எதிராக அலை வீசுகிறது. திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் இது சுனாமியாக மாறும். அதில் காங்கிரஸ் தப்பி பிழைக்க முடியாது என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடேல் பாலசிங்கத்திற்கு எதிராக இணையத்தில் மகஜர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கத்தின் பாரியார் அடேல் பாலசிங்கத்திற்கு எதிராக இணையத்தில் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடேல் பாலசிங்கம் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்ட அடேலை கைது செய்யுமாறுகோரி இவ்வாறு கையொப்பங்கள் திரட்டப்படுவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இணையத்தின் ஊடாக இந்த மகஜருக்கான கையொப்பங்கள் திரட்டப்படுகின்றன.

இந்த மஜகரில் வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர்கள் ஆயிரக்கணக்கில் கையொப்பமிட்டுள்ளனர்.

இந்த மகஜர் பிரிட்டன் பிரதமர் கமரூனிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியில் பாடசாலை மாணவியரின் கழுத்தில் சயனைட் குப்பிகளை அடேல் பாலசிங்கமே மாட்டி விட்டார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.(அ-2)

# ஜெனீவா கூட்டத்தொடரின் போது யோசனையை முன்வைப்போம்

## கூட்டமைப்பு தெரிவிப்பு

ஐ.நா. மனிதவுரிமை ஆணைக்குழுவின் அடுத்த கூட்டத்தொடரில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் யோசனை ஒன்றை முன்வைக்கும் எனவும் ஜெனீவா கூட்டத்தொடரில் தனியாகவும் குழுவாகவும் கூட்டமைப்பு கலந்து கொள்ளும் என்றும் த.தே.கூ.நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யோசனையில் முன்வைக்கப்படவுள்ள விடயங்கள் தொடர்பில், இதுவரை இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்றாலும் அரசாங்கத்திற்கு எதிரான விடயங்களை முன்வைக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையில் யாழ்.நூலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


வடக்கு கிழக்கில் காணாமற்போனவர்கள் சம்பந்தமாக கண்டறிய நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முற்றாக எதிர்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### விஸ்வலிங்கம் கோபிதாஸ்

புலோலி தெற்கு ,புலோலியை பிறப்பிடமாகவும் 132, Fuller sway South ,Chessington, Surrey Ktq 1HA , London ஐ வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் கோபிதாஸ் கடந்த 24 ஆம் திகதி திங்கட்கிழமைஅன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கருகம்பன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### பேரம்பலம் சிவசுப்ரமணியம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும்கொழும்புவெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் சிவசுப்ரமணியம் கடந்த 26 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு பொரளை ஜயரத்ன மலர்சாலையில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதிசுப்பிரமணியம் தங்கச்சியம்மா

திருநெல்வேலியை பிறப்பிடமாகவும் கனடா Ottawa ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் தங்கச்சியம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு Capital Funeral Home & Cemetery, 3700 Prince of Wales Dr, Ottawa ,ON K2C 3H1, Canada என்னும் முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதிசத்தியரஞ்சிதம் சந்திரசேகரி

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் துவாரகை வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சத்தியரஞ்சிதம் சந்திரசேகரி(ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர்) கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.



### திருமதி மாணிக்கம் செல்லம்மா

வரணி கரம்பைக்குறிச்சியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும்கொண்ட மாணிக்கம் செல்லம்மா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு வரணியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முள்ளி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சபாரத்தினம் பரமேஸ்வரி

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் பரமேஸ்வரி கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை 8 மணிக்கு Orgden Funeral Home, 4164 Sheppard Avenue East ,Agincourt , Ontario, M1S 1T3, Canada என்னும் முகவரியில் நடைபெறும்.

# கால்வாய் நோயை கட்டுப்படுத்த சுகாதார திணைக்களம் நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டில் கால்நடைகளுக்குப் பரவியுள்ள கால்வாய் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு தங்களது கால்நடைகளுக்கு தவறாது Foot and Mouth வக்சினை முன் கூட்டியே ஏற்றிக்கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் டபிள்யூ. கே.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஒரு இலட்சம் தடுப்பூசிகள் சகல கால்நடை மருத்துவ நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொரு மாதமும் தலா ஒரு இலட்சம் தடுப்பூசிகள் வீதம் தயாரித்து விநியோகிக்கவும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வரண்ட வலயத்தில் பரவுகின்ற இந்நோயைத் தடுப்பதற்கு இதுவரையில் எவரும் ஆர்வம்காட்டாததாலேயே கால்வாய் நோய் பரவுவதற்குக் காரணமாக அமைந்தது.

மாட்டு சாணத்தைக் கூட பசளைக்காக வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

நுவரெலியா போன்ற ஈரவலயப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் மரக்கறி உற்பத்திக்கு வெளிமாவட்டங்களிலிருந்து சாணம் பசளைக்காகக் கொண்டு செல்லப்படுகிறது.

இவ்வாறு கொண்டு செல்வதைத் தடுக்காவிட்டால் ஈரவலயப் பகுதிகளிலும் இந்த நோய் பரவக்கூடுமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நோய் அதிகமாக வவுனியா மாவட்டத்திலேயே காணப்படுவதாகவும், இரண்டாவது அம்பாறை மாவட்டத்திலும் அடுத்ததாக புத்தளம் மாவட்டத்திலுமேயே இந்நோய் கூடுதலாகப் பரவிக்காணப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் இந்நோய் கடந்த காலங்களில் கூடுதலாகக் காணப்பட்டபோதும், இம்முறை அங்கு எவ்விதமான பதிவுகளும் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார். (அ-2)

# கீரை வியாபாரிகளுக்கு கடை அமைக்கப்படவில்லை

கிளிநொச்சி பொதுச்சந்தையில் வியாபாரத்தில் ஈடுபடும் கீரை வியாபாரிகளுக்கு இதுவரை கடை அமைத்து வழங்கப்படாததினால் அவர்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கீரை வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் 5 வியாபாரிகளுக்கு சந்தை வளாகத்தினுள் கடைகள் எதுவுமில்லாத நிலையில் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் மழைகாலங்களில் குடை பிடித்துக் கொண்டு வியாபாரத்தை மேற்கொள்வதுடன் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருவதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆயினும், பிரதேசசபையினரால் நாளொன்றிற்கு முப்பது ரூபா வீதம் இக்கீரை வியாபாரிகளிடம் இடத்திற்கான வாடகை அறவிடப்படுகின்றது.

வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டு ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை கடைகள் தமக்கு ஒதுக்கப்படாதது ஏன்? என அவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

எனவே, தமது அவல நிலையைக் கருத்திற்கொண்டு கீரை வியாபாரிகளுக்கான கடைகளை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-271)

# விதாதாவள நிலையத்தில் இலவச பயிற்சி நெறிகள்

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினால் சண்டிலிப்பாய் பிரதேச செயலக விதாதாவள நிலையத்தால் தொழில்நுட்ப மாற்றீட்டுப் பயிற்சிநெறிகள் இலவசமாக நடைபெறவுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி நெறியில் மெழுகுதிரி தயாரித்தல், ஊறுகாய் தயாரித்தல், யோக்கட் தயாரித்தல், பொதியிடல், ஊதுவர்த்தி தயாரித்தல், சேதனப் பசளை தயாரித்தல், வீட்டுத்தோட்டம், ஜாம், கோடியல் தயாரித்தல், மரக்கறி பதனிடல், வியாபாரக் கணக்குப் பதிவு,

பேக்கரி தயாரிப்புக்கள், பதியங்கள் உரு வாக்குதல், Hand wash, Car wash, Liquid Soap, Dish wash தயாரிப்புக்கள் Laser Printer Torne refill, Tomato சோஸ் தயாரித்தல், water soluble falm, Toilet cleaner, Computer net wo rk ஆகியவை கற்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ளவர்கள் தமது சுயவிபரக் கோவை, சான்றிதழ்கள் மற்றும் பங்கீட்டு அட்டையுடன் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை அல்லது அதற்கு முன்பாகவோ பிரதேச செயலக விதாதாவள நிலையத்தில் நேரில் வந்து பதிவினை மேற்கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

# ஆலோசனை மைய கால்கோள்விழா

(யாழ்ப்பாணம்)

சுக வாழ்வுக்கான பயணம் நிறுவனத்தால் ஆரம்பிக்கப்படவுள்ள தலையாரி இனப்பெருக்கம் மற்றும் பாலியல் சுகாதாரம் தொடர்பான கல்வி தகவல் மையத்தின் கால்கோள் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சுகவாழ்வுக்கான பயணம், மூன்றாம் ஒழுங்கை, (அன்னசத்திர லேன்), பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் இதன் தலைவர் ஜீ.நக்கீரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட மருத்துவத்துறை பேராசான் டாக்டர்.என். சிவராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவ விருந்தினர்களாக மருத்துவப்பீட சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் டாக்டர் பி.ஏ.டி .சுவங்ஜே, யாழ் .போதனா வைத்தியசாலை பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஶ்ரீபவானந்தராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் இளைப்பாறிய நீதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வர். (அ-2)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அமெரிக்க பிரதிநிதி இந்தியா வருகை

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஒபாமா அமைச்சரவை பிரதிநிதி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்க அரசின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களை கவனித்து வரும் துறையை சேர்ந்தவர் நிஷா பிஸ்வால்.

இவர் நாளை மறுதினம் முதல் 6 ஆம் திகதி வரையில இந்தியாவில் பெங்களூர் மற்றும் புதுடில்லியில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நாளை மறுதினம் பெங்களூருவிற்கு வரும் அவர் வர்த்தக பிரமுகர்களை சந்தித்து பேசுகிறார். தொடர்ந்து புதுடில்லிக்கு செல்லும் அவர் பாதுகாப்பு, பொருளாதாரத் துறை அறிஞர்களை சந்திக்கிறார். மேலும் 6 ஆம் திகதி புதுடில்லியில் உள்ள அமெரிக்க மையத்திலும் உரை நிகழ்த்துகிறார். (2)



உக்ரைன், கீவ் நகரில் உள்ள சுதந்திர சதுக்கத்தில், சமீபத்தில் நடந்த கலவரத்தில் பலியான 82 பேருக்கு மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தப்பட்டதைப் படத்தில் காணலாம்.




# உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தலையிட்டால் விபரீதங்கள் ஏற்படும்

## ஒபாமா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

***உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா தலையிட்டால், தேவையற்ற விபரீதங்கள் ஏற்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா எச்சரிக்கை விடுத்துள்ளார்.***

இது தொடர்பாக வெள்ளை மாளிகையில் உரையாற்றிய அமெரிக்க ஜனாதிபதி.


உக்ரைன் நாட்டில் ரஷ்ய படைகள் புகுந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ள நிலையில், இராணுவ நடவடிக்கைக்கான விலையை அந்நாடு கொடுக்க நேரிடும் என்று ரஷ்யாவிற்கு எச்சரிக்கை விடுத்தார்.

உக்ரைனின் தென்பிராந்தியத்தில் க்ரைனியாவிலுள்ள செவஸ்டோபோல் விமான நிலையத்தை ரஷ்யப் படைகள் கைப்பற்றிவிட்டதாக உக்ரைன் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும ஒரு நகரத்திலுள்ள விமான நிலையத்தையும் ரஷ்ய படைகள் சுற்றிவளைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நிலையில் உக்ரைன் நாட்டின் இறையாண்மையில் தலையிட்டு சீர்குலைவை ஏற்படுத்த வேண்டாம் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

உக்ரைன் நாட்டை ஐரோப்பிய யூனியனில் இணைக்க எதிர்ப்பு தெரிவித்த ஜனாதிபதி யானுகோவிச்சை, எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து பதவி நீக்கம் செய்தன. இதனையடுத்து தலைமறைவான அவர் ரஷ்யாவின் ஆதரவு பெற்ற தென்கிழக்கு பகுதியில் தஞ்சமடைந்தார். உக்ரைனில் ஜனாதிபதி நீக்கப்பட்டதையடுத்து ரஷ்ய படைகள் உக்ரைனில் புகுந்து முக்கிய நகரமொன்றை கைப்பற்றியது. மேலும் விமானநிலையங்களையும் ரஷ்ய படைகள் கைப்பற்றியதால் உக்ரைனின் அரசு படைக்கும், ரஷ்ய படைக்கும் நேரடி மோதல் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது என்றார்.

அத்துடன் உக்ரைன் புதிய பிரதமருக்கு அமெரிக்கா முழு ஆதரவளிக்கும் என்று அந்நாட்டின் துணை ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்தார்.



உக்ரைன் நாட்டின் ஜனாதிபதியாக இருந்த விக்டர் யானுகோவிச் ரஷ்யாவிற்கு ஆதரவாக செயற்பட்டதால் தலைநகர் கீவ்வில் பல மாதங்களாக போராட்டம் நடந்து இறுதியில் புரட்சி வெடித்தது. ஜனாதிபதி விக்டரின் பதவி பறிக்கப்பட்டது.

அதேநேரத்தில் பதவி இழந்த விக்டர் தப்பி தலைமறைவாகி விட்டார். இவர் ரஷ்யாவின் தீவிர ஆதரவாளராக செயற்பட்டார்.

ஆகவே ரஷ்யா இராணுவ நடவடிக்கை எடுக்கலாம் என கூறப்பட்டது. இதற்கு அமெரிக்கா, இங்கிலாந்து நாடுகள் எச்சரிக்கை விடுத்தன. (2)

# அல்கொய்தா தாக்குதல் மீண்டும் தலைதூக்கும்

## அமெரிக்கா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா தாக்குதல் மீண்டும் தலைதூக்கி விடும் என அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள், அல்கொய்தா போன்ற தீவிரவாதிகளின் ஆதிக்கத்தை அங்கு முகாமிட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படை ஒடுக்கியது.

இந்த ஆண்டு இறுதியில் வெளிநாட்டு படைகள் வெளியேற இருக்கின்றன. இருப்பினும் தீவிரவாதிகள் சதிகளை முறியடிக்க இன்னும் சில ஆண்டுகள் 10 ஆயிரம் வீரர்கள் தங்கி இருக்க வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி உடன்பாடு செய்ய கோருகிறது.


ஆனால் அதில் கையெழுத்திட ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி கர்சாய் மறுத்து விட்டார். எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடத்த ஏற்பாடு மும்முரமாக நடக்கிறது.

இதற்கிடையில் ஆப்கானிஸ்தான் அரசுக்கு அமெரிக்க இராணுவம் மற்றும் உளவுதுறை புதிய எச்சரிக்கை ஒன்றை தெரிவித்துள்ளது.

அதில் வெளிநாட்டு படைகள் முழுமையாக வெளியேறினால், அல்கொய்தாவின் தாக்குதல் சதி செயல்கள் மீண்டும் தலைதூக்கி விடும் என தெரிவித்தது.

ஆப்கானிஸ்தானில் கிழக்குப்பகுதியில் உள்ள குனார், நுசிரிஸ்தான் பகுதிகளில் அல்கொய்தாவினர் ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் மூலம் இளைஞர்களுக்கு பயிற்சி கொடுப்பதில் ஈடுபடுகிறார்கள். இந்த பணியில் உள்ளூர் அல்கொய்தா தலைவர் பரூக் அல் குத்தானி ஈடுபட்டு வருகிறார் என்றும் அந்த எச்சரிக்கை தகவலில் குறிப்பிட்டுள்ளது. (2)

# பாகிஸ்தானுக்கு 6 நீர்மூழ்கி கப்பல்களை விற்கிறது சீனா



(பீஜிங்)

பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகளின் இராணுவத்தை பலப்படுத்த, சீன அரசு நீர்மூழ்கி கப்பல்களை விற்க முன்வந்துள்ளது.

இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கடந்த ஓராண்டில் 10 நீர்மூழ்கி கப்பல்கள் விபத்தில் சிக்கின. இதில் கடற்படை வீரர்கள் சிலர் பரிதாபமாக உயிரிழந்தனர். இந்நிலையில், பாகிஸ்தான், வங்கதேசத்துக்கு நீர்மூழ்கி கப்பல்களை விற்க சீன அரசு முடிவு செய்துள்ளது. சீன அரசு 2014 ஆம் ஆண்டுக்குள் 6 நீர்மூழ்கி கப்பல்களை, பாகிஸ்தானுக்கு விற்க முன்வந்துள்ளது. இது தொடர்பாக சீனா பாகிஸ்தான் இடையே ஒப்பந்தமும் கையெழுத்தாகி விட்டது என்று வார பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சீனாவில் தயாரிக்கப்படும் எஸ்20 அல்லது யுவான் என்று பெயரிடப்பட்டுள்ள டீசல் எலக்ட்ரிக்கல் ரக நீர்மூழ்கி கப்பல்கள், பாகிஸ்தானுக்கு விற்கப்பட உள்ளன.

அவை அணு ஆயுத தாக்குதல் நடத்தக்கூடிய அதிநவீன வசதி கொண்ட நீர்மூழ்கி கப்பல்கள் என்று கூறப்படுகிறது. ஆனால், அதிநவீன நீர்மூழ்கி கப்பல்களை பாகிஸதானுக்கு விற்றால் அமெரிக்காவின் அதிருப்தியை சந்திக்க நேரிடும். அதனால்அணு ஆயுத தாக்குதல நடத்தும் வசதியுள்ள நீர்மூழ்கி கப்பல்களை பாகிஸதானுக்கு விற்காது என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதேபோல்வங்கதேச தலைநகர் தாகாவில் இருந்து வரும் தி நியூ ஏஜ் என்ற பத்திரிகை வெளியிட்ட செய்தியில்,

சீன அரசு 035 ஜி ரக டீசல் எலக்ட்ரிக்கல் நீர்மூழ்கி கப்பல் இரண்டை வங்கதேசததுக்கு வற்க முன் வந்துள்ளது என்று தெரிவித்துள்ளது. வங்கதேசதுக்கு எதிர்வரும் 2019 ஆம் ஆண்டுக்குள் நீர்மூழ்கி கப்பல்கள் வழங்கப்படும் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது. (2)

# பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தத்தில் இந்தியா இஸ்ரேலுடன் கைச்சாத்து

(கொல்கத்தா)

ஈரானிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜாவத் சரிப் நேற்று முன்தினம் இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள நிலையில் இந்தியா இஸ்ரேலுடன் பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.

சட்ட உதவி, பொது மற்றும உள்நாட்டு பாதுகாப்பு ஒத்துழைப்பு என்ற பல உடன்பாடுகளில் இரு நாடுகளும் கையெழுத்திட்டுள்ளன.

இரு நாடுகளும்மேற்கொண்டுவரும் பயங்கரவாதத்தை எதிர்ப்பு முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த உடன்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிமக்கள், அவர்களின் சொதுகள் மற்றும் நலன்களைக் காக்க உறுதியைப் பகிர்ந்து கொள்வதாக இரு நாடுகளும் தாங்கள் மேற்கொண்ட ஒப்பந்தங்களில் குறிப்பிட்டுள்ளன.

இந்த ஒப்பந்தங்கள் எங்கள்இரு நாடுகளுக்கும்இடையே உள்ள ஒத்துழைப்பை மேம்படுத்தக்கூடிய மற்றொரு மேடையாக இருக்கும். இது சம்பந்தமாக இரு நாடுகளின் உள்நாட்டு அமைச்சகங்களின் தலைமைக்கு எங்கள் பாராட்டுதல்களைத் தெரிவிக்கின்றோம் என்று இந்தியாவிற்கான இஸ்ரேலியத் தூதுர அலோன் உஷ்பிஸ் தெரிவித்தார்.

நாங்கள் எங்கள் குடிமக்களின் உயிர்களைப் பாதுகாக்க இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளும் நிபந்தனையற்ற உறுதிப்பாடே இந்த ஒப்பந்தங்களுக்கு அஸ்திவாரமாக அமைந்துள்ளன. முக்கியமாக பாதுகாப்புத் துறையில் இணைந்து செயற்படுவதன் மூலம் தொழில்நுட்பம், மனித வள மேம்பாட்டில் முதலீடு போன்ற அனைத்துத் துறைகளிலும் நமது சமுதாயமும், பொருளாதாரமும் மேம்படும் வண்ணம் செயலாற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் அடையக் கூடிய உயர்ந்த பொருள் அறிவன்று. அறிவுடன் கூடிய அனுதாபமே ஆகும். – ஓர் அறிஞன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# வடக்கில் தொடரும் அவல மரணங்கள் தேவலோகத்தில் அவசர மாநாடு

நேற்றிரவு நடுநிசி நேரத்தில் ஒரு கனவு. தேவலோகத்தில் இருப்பது போன்ற பிரமை அது. தேவலோகம் மிகவும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கின்றது. தேவர்கள், அவர்கள் சார்ந்த அதிகாரிகள் என அனைவரும் ஓடிஓடி வேலை செய்து கொண்டிருக்கின்றனர். கூடவே தேவலோகம் விசேடமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது.

எதோ நடக்கப் போகின்றது என்று ஊகித்துக் கொண்டு, சூலாயுதத்துடன் தேவலோக நுழைவாயிலில் காவல்புரியும் ஒருவரிடம் நெருங்கிச் சென்று ஐயா! இங்கு என்ன விசேடம் நடக்கப் போகின்றது? எனக் கேட்டேன். அதற்கு தேவலோக வாயிற்காப்போன், ஓ! மானிடனே,

இலங்கையின் வட மாகாணத்தில் அவல மரணங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. விபத்து, தற்கொலை, கொலை, மர்ம மரணங்கள் என்றவாறு உயிரிழப்புகள் நாளுக்கு நாள் நடக்கின்றது. இதனால் தேவலோகம் அதிர்ந்து போயுள்ளது.

வட மாகாணத்தில் இருக்கக்கூடிய பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் மேற்குறித்த மரணங்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஏந்தவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில்,

வட மாகாணத்து மக்கள் இறைவழிபாடினூடாக தேவலோகத்திற்கு தொலைநகல் மூலமாக அனுப்பி வைத்த முறைப்பாட்டை அடுத்து, தேவலோகத்தில் இந்த மாநாடு அவசரமாகக் கூட்டப்படுகின்றது என்றார்.

**நான்:** ஐயா! வடக்கில் இரணைமடுக் குள விவகாரத்திற்கு நடத்தப்படும் மாநாடு போல இங்கும் மாநாடா? இந்த மாநாட்டிற்கு சம்பந்தர் ஐயா, விக்னேஸ்வரன் ஐயா எல்லோரும் வருவார்களா?

**வாயிற்காப்போன்:** மானிடனே! இது தேவலோகத்து மாநாடு. இந்த மாநாட்டிற்கு அவர்கள் வந்தால் திரும்பவும் பூலோகத்திற்குப் போக முடியாது. ஆகையால் அவர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளமுடியாது.

**நான்:** அப்படியானால் இந்த மாநாட்டில் அரசதரப்புப் பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களா?

**வாயிற்காப்போன்:** அவர்கள் ஜெனிவா மாநாட்டிற்கு போவார்களே தவிர அவர்கள் எவரும் இந்த லோகத்திற்கு வரமுடியாது.

**நான்:** ஐயா! அப்படியானால் இந்த மாநாடு யாருடைய தலைமையில் நடக்கின்றது. இந்த மாநாட்டில் யார் யார் கலந்து கொள்வார்கள்?

**வாயிற்காப்போன்:** உலகாளும் பரமேஸ்வரப் பெருமானார் தலைமையில் நடைபெறும் இம் மாநாட்டிற்கு பூலோகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு சமயங்களின் கடவுளர்களான கௌதம புத்தபிரான், யேசுபிரான், நபிகள்நாயகம் ஆகியோரும் முப்பத்து முக்கோடி தேவர்களின் பிரதிநிதிகளுடன் இந்திரன் மற்றும் படைத்தல் துறை அமைச்சர் பிரம்மா, பாதுகாப்பு அமைச்சர் விஷ்ணு, பூலோகத்து கணக்குவழக்குகளை சரிபார்க்கும் கணக்காய்வு அதிபதி நாயகம் யமதர்மராஜன், பதிவுத்துறை அதிகாரி சித்திரகுப்தன் உள்ளிட்ட பலரும் மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

**நான்:** ஐயா! இந்த மாநாட்டில் என்ன முடிவு...

**வாயிற்காப்போன்:** உஷ்... மாநாட்டில் கலந்து கொள்பவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். நீ ஓடிப்போய் மூலையில் மறைந்திருந்து மாநாட்டைப்பார்.

(வாயிற்காப்போன் கூறியபடி மாநாடு நடைபெறும் மண்டபத்தின் தூண் ஒன்றில் மறைந்து நின்று மாநாட்டை அவதானித்தேன்)

[தொடரும்]

# கசிப்பு உற்பத்தியை தடுக்க நடவடிக்கை எடுங்கள்

## யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

சுழிபுரம் குடாகனை பகுதியில் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம் பெற்று வருகிறது. இதனை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வலி.மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நா.ஐங்கரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சு.அருமைநாயகத்திற்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சுழிபுரம் குடாகனை பகுதியில் கசிப்பு உற்பத்தி தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குறிப்பிட்டு உள்ளனர். மேற்படி விடயம் தொடர்பில் அப்பகுதி மக்கள் பலருக்கும் அறிவித்தும் இதுவரை பொருத்தமான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை.

இப்பகுதியானது சனத்தொகை அதிகமாக உள்ள பகுதியாகும். இதேவேளை தொடர்ச்சியாக இப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெற்று வரும் நிலையில் சமூக விரோத நடவடிக்கைக ளும் இடம்பெறக் கூடிய வாய்ப்பான சூழல் இடம்பெறலாம்.

எனவே, மேற்படி விடயம் தொடர்பில் எமது பிரதேசமக்களது நலனை கருத்தில் கொண்டு உடனடியாக உரிய நடவடிக்கையை மேற்கொண்டு மக்களது நல் வாழ்வுக்கு உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தின் பிரதிகள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனுக்கும் சங்கானை பிரதேச செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)

# பொது அறிவு, நுண்ணறிவு போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொது நூலகத்தினால் நடத்தப்படும் பொது அறிவு, நுண்ணறிவுப் போட்டிப் பரீட்சைக்கு பாடசாலை ரீதியாகவும் தனிப்படவும் விண்ணப்பித்த மாணவர்களுக்குரிய பரீட்சைகள் யாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விண்ணப்பித்த பாடசாலைகளில் நடைபெறும் என இணுவில் நூலகத்தினர் அறிவித்துள்ளனர். (அ)

# தேசிய சமாதான சபையின் கோரிக்கை நிராகரிப்பு

சர்வதேச சமூகத்துடன் இணைந்து இலங்கைப் படையினருக்கு எதிரான போர்க்குற்ற விசாரணைகளை நடத்துமாறு தேசிய சமாதான சபை கோரியிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், இந்தக் கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளது.

இந்நிறுவனத்திற்கு நோர்வே அரசாங்கம் நிதி உதவி வழங்கி வருகின்றது என அரசாங்க உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

படைவீரர்களுக்கு எதிராக வழக்குத் தொடர எவருக்கும் அனுமதியளிக்கப் போவதில்லை என் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்முயற்சி அமெரிக்காவின் மற்றுமொரு சதித்திட்டமாக கருதப்பட வேண்டும் எனவும் படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் இடமளிக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)


# மாதாந்த உதவி திட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

மக்கள் நலன்பேணும் அமைப்பினால் வழங்கப்படுகின்ற கல்விக்கான மாதாந்த உதவித் திட்ட நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு யா/கோண்டாவில் சி.சி.த.க பாடசாலையில் நடைபெறும் என அமைப்பின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் 20 மாணவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் வழங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை



## வந்தனை செய்திடடா தம்பி

சுன்னாகத் தானையென்றுந் தோத்திரம்நீ செய்திடடா
அன்னை பிதாக்குருவை– தம்பி!
அன்புடனே போற்றிடடா
வலமிடமாய்ச் செல்லுகின்ற வாயுவைநீ தம்பியடா
பலமுனக்கு வந்துவிடுந்– தம்பி!
பற்றற்று நின்றிடடா
குலநலம் பாராதே கோபம்நெஞ்சில் வையாதே
தலமாறுந் தாண்டிடடா– தம்பி!
தனிமையைநீ நாடிடடா

# செல்வத்தை வணங்கும் உலகக் கவலைகளில் ஆழ்ந்துவிடும் தவறை நாம் செய்யாதிருப்போம்

இன்று நமக்குத்தரப்படும்பைபிள்பகுதியில் இயேசு "எவரும் இரு தலைவருக்கு பணிவிடைசெய்யமுடியாது. ஏனெனில் ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார்.நீங்கள் கடவுளுக்கும் செல்வத்திற்கும் பணிவிடை செய்ய முடியாது எனவும் நாம் எம் வாழ்வில் கவலை கொள்ளத்தேவையில்லை எனவும் கூறுவதைப் பாக்கின்றோம்.

செல்வங்களும் உலகக் கவலைகளும் கடந்த காலத்தை மறக்கச் செய்து, நிகழகாலத்தை நாம் ஏற்காமல் வைத்து, நமது எதிர்காலத்தை உருக்குலைக்கின்றன. எனவே இவ்வுலகச் செல்வங்களின் மீது நமது வாழ்வை அமைத்துக்கொள்ளாமல் கடவுளின் வாக்குறுதி, அவரது உடன்படிக்கை, அவர்

விடை செய்வார். தலைவன் தரும் ஊதியம், அல்லது பிற பயன்கள் இவைகளுக்காகச் செய்யப்படும் பணிவிடை அலல இது. அவைகளையெல்லாம்தாண்டி, பணியாளரின் பணிவிடை அமைந்திருக்கும். இயேசுவின் இக்கூற்று, இன்றைய நமது அரசியல் தலைவர்கள், தொண்டர்களுக்குப் பொருந்தாது.

இந்தத் தலைவர்கள், தொண்டர்கள் அனைவரும் வேறொரு தெய்வத்திற்குப் பணியாளர்கள். பணம் என்ற தெய்வத்திற்கு இவர்கள் அனைவரும் பணிவிடை செய்பவர்கள். நாங்கள் கடவுளுக்கும், செல்வத்திற்கும் பணிவிடை செய்கிறோம். ஏனெனில் எங்கள கடவுளே செல்வம்தான் என்று சொல்பவர்கள் இவர்கள். இவர்கள் பின்னே போகலாமா?

கடவுளையும், செல்வத்தையும்



குறுகிப் போக, உடல்நலம் குறைந்து போக அதிக வாய்ப்புகள் உண்டு. உலகின் பல நாடுகளில், அதுவும் பல வழிகளிலும் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் ஏன் எமது நாட்டிலும் தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையும் வளர்ந்து வருகிறது என்பது நாம் அறிந்ததே.

அதற்கு அடுத்தபடியாக கவலைகளால் உருவாகும் வயிற்றுப்புண், இரத்த அழுத்தம், இதயக் கோளாறு ஆகியவற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகம் என்பது இன்றைய புள்ளிவிவரங்கள் கூறும் உண்மை. கவலைப்படுவதால், உடல் உயரத்தைக் கூட்ட முடியாது, உடல் நலத்தையும் கூட்ட முடியாது. செல்வம் சேர்க்காதீர்கள், கவலைப்படாதீர்கள் என்று இயேசு சொல்லவி

## பரமபிதா காட்டிய பாதை

தூண்களின்மீது நமது வாழ்வை அமைப்போம்.

நமது வாழ்வு முழுவதும், கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய மூன்று தூண்கள்மீது அமைய வேண்டும், ஆண்டவரின் தேர்வு கடந்த காலம், ஆண்டவரால் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நோக்கி நடப்பது எதிர்காலம், நம்மைத் தேர்வு செய்துள்ள கடவுளுக்குப் பதிலளித்து வாழ்வது நிகழ்காலம் ஆகும்.

எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது என இன்று நமக்குத்தரப்படும் பைபிள்பகுதியின் ஆரம்ப வரிகளை நோக்கும்போது இயேசு இவ்வார்த்தைகளைச் சொன்னபோது, உண்மையான தலைவன், உண்மையான பணியாளரைப் பற்றி அவர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். நல்ல பண்புகள் உள்ள ஒருவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளும் பணியாளர், அத்தலைவன் மீது உள்ள மதிப்பினால், அன்பினால் அவருக்குப் பணி

பகுதியில் ஒப்புமைப்படுத்தி பேசிய இயேசு, கடவுளையும், கவலைகளையும் இரண்டாம் பகுதியில் ஒப்புமைப் படுத்துகிறார். செல்வத்தைக் கடவுளுக்கு இணையாக வைத்து வழிபடுவதும், பணிவிடை செய்வதும் தவறு என்று இயேசு கூறுகிறார். கடவுளை நம் கண்களிலிருந்து மறைக்கும் அளவுக்கு நாம் எம் கவலைகளால் எம்மையே சூழ்விடுகிறோம்.

சிறு, சிறுத் துளிகளாய் சேரும் கவலைகள் விரைவில் நம்மை மூழ்கடிக்கும் என்பதை மறக்கின்றோம். கவலைப்படாதீர்கள் என்று மட்டும் இயேசு கூறிச் சென்றிருக்கவில்லை. கவலை கொள்ளாமல் இருக்க இயேசு வழிகளையும் சொல்லியிருக்கிறார். கவலைக்குப் பதில் கடவுள் நம்பிக்கையால் மனதை நிரப்புங்கள் என்கிறார். கவலைப்படுவதால் உங்களில் யார் தன் உயரத்தைக் கூட்டமுடியும் என்ற எதார்த்தமான சவாலை முன்வைக்கிறார் இயேசு. கவலைப்படுவதால் ஒருவேளை நாம்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

ல்லை. காசையும், கவலைகளையும் கடவுளுக்கு இணையாகவோ, கடவுளாகவோ மாற்ற வேண்டாம். அவைகளுக்குக் கோவில் கட்டவோ, அவைகளுக்கு அடிமைகளாய் பணிவிடை செய்யவோ வேண்டாம் என்று இயேசு தெளிவுபடுத்துகிறார்.

இயேசு இன்று பைபிள்பகுதியின் இறுதியில் கூறும் வார்த்தைகள் எம் மனதில் ஆழமாய் பதிய வைப்போம்: "நாளைக்காகக் கவலைப்படாதீர்கள். ஏனெனில் நாளைய கவலையைப் போக்க நாளை வழி பிறக்கும். அந்தந்த நாளுக்கு அன்றன்றுள்ள தொல்லையே போதும்." செல்வத்தை வணங்கும், உலகக் கவலைகளில் ஆழ்ந்து விடும் தவறை நாம் செய்யாதிருப் போம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு ஆனந்த சஸ்ராலயாவை வீழ்த்தி சென்.ஜோன்ஸ் கல்லூரி அபார வெற்றி



கொழும்பு கோட்டை ஆனந்த சஸ்ராலயா கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் யாழ்ப்பாண சென்.ஜோன்ஸ் கல்லூரி 198 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் 19 வயது பாடசாலை பிரிவு - 2 அணிகளுக்கிடையிலான போட்டி ஒரு நாள் துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி நடைபெற்றுவருகின்றது. யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கும் கொழும்பு கோட்டை ஆனந்த சஸ்ராலயா கல்லூரி அணிக்குமிடையிலான போட்டி கடந்த புதன்கிழமை ஆனந்த சஸ்ராலயா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 198 ஓட்டங்களால் கொழும்பு கோட்டை ஆனந்த சஸ்ராலயா கல்லூரி அணியை வென்றது.

நாணயச் சுழற்சியில் வென்ற சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியது.

எம்.சிந்துராஜன். பி.துவாரகசீலன் ஆகியோரின் துடுப்பாட்டத்தின் உதவியுடன் 50 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் எம்.சிந்துராஜன் 106, பி.துவாரகசீலன் 95, ஆர்.பிரிசங்கர் 31 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர்.

பந்துவீச்சில் சஸ்ராலயா அணி சார்பாக டி.கர்ஷணா, எச்.ஐஷேக் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர்.

322 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஆனந்த சஸ்ராலயா கல்லூரி அணி, அடுத்தடுத்து இலக்குகளை இழந்து 35 பந்துபரிமாற்றங்களில் 123 ஓட்டங்களைப் மாத்திரம் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வை.திரணகம 61, ரி.மடுஹல 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக ஆர்.லோகதீஸ்வரன் 3 (06), ஏ.கானாமிர்தன் 3 (22), எம்.நிலோஜன் 2 (23) இலக்குகளையும் கைப்பற்றினர். (க-23)

## கரம் போட்டி



வலிகாம வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகியுள்ளன.

இதில் ஆண் ,பெண் இருபாலாருக்குமான கரம் போட்டி இன்று மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக வலயக் கல்வி அலுவலக உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-23)

## இன்றைய போட்டி

காரைநகர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு பெற்ற இளைஞர் கழகங்களுக்கிடையிலான பெரு விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதன் ஓர் அங்கமான ஆண் பெண் இரு பாலாருக்குமான கபடி மற்றும் கரப்பந்து போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெறவுள்ளன. (க)

## நல்லூர் பிரதேச இளைஞர் கழக 2014 ஆம் ஆண்டு வி.நிகழ்வு

(மானிப்பாய்)

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு நிகழ்வின் இறுதி நிகழ்வுகளும் பரிசில் வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட திடலில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளன.

நல்லூர் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் இ.மிதுன்ராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செய்லக கணக்காளர் ஆர்.சிவரூபன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக உடற்கல்வி பணிப்பாளர் கே.கணேசநாதனும், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஐ.தபேந்திரனும் கலந்து கொள்வார்கள்.


கௌரவ விருந்தினராக ஈ.எஸ்.பி. நாகரத்தினமும், இளைஞர் சேவைகள் மன்ற யாழ்.மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி வினோதினி ஸ்ரீமேனனும் கலந்து கொள்வார்கள்.

இந் நிகழ்வில் இடம்பெறவுள்ள பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி இளைஞர் கழகத்தை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி இளைஞர் கழகம் மோதவுள்ளது.

ஆண்களுக்கான போட்டியில் ஜொலிஸ்ரார் இளைஞர் கழகமும் நல்லூர் தெரிவு அணியும் மோதவுள்ளதாக நல்லூர் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் யுகராஜ் அறிவித்துள்ளார். (க-23)


## விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக்கிண்ணம்

# கே.சீ.சீ.சீ அணி சம்பியன்









ஜெயரூபனின் சதமும் ஜனுதாஸின் சிறப்பான பந்து வீச்சின் உதவியுடன் 2014 ஆம் ஆண்டுக்கான விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண் ணத்தை கைப்பற்றி கொண்டது K.C.C.C அணி.

விக்ரம், ராஜன், கங்கு வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி அண்மையில் இடம் பெற்றது. இதில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியும் K.C.C.C அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பாடிய பல்கலைக்கழக அணி 231 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளை யும் இழந்தது. இதில் அச்சுதன் 80, விஷ்ணு 66, தனஞ்சய் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

K.C.C.C பந்து வீச்சில் ஜனுதாஸ் 6 இலக்குகள், பிரதீஸன் 2 இலக்குகள், சாம்பவன் ஒரு இலக்கு, சிலோஜன் ஒரு இலக்கு கைப்பற்றினர்.

பதிலுக்கு 232 என்னும் வெற்றி இலக்கோடு துடுப்பாடிய K.C.C.C 32.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்கள் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இதில் ஜெயரூபன் 118, சத்தியன் 43, சிலோ ஜன் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களைப் பெற்றனர்.

பல்கலைக்கழக பந்துவீச்சில் அச்சுதன்-2, பரணி- 2 இலக்குகளை கைப்பற்றினர்.

இப் போட்டியின் ஆட்ட நாயகராக K.C.C.C அணியின் ஜெயரூபனும் தொடர் நாயகனாக பல்கலைக்கழக அணியின் அச்சுதனும் தெரி வாகினர். (க-23)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





யாழ். நடேஸ்வரர் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் கல்லூரி அதிபர் என். அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகார பகிர்வை பயன்படுத்தி மக்களுக்கு உதவி செய்வோம்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

சமகால அரசியல் அதிகாரப் பகிர்வை பயன்படுத்தி எமது மக்களுக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்ள உதவ வேண்டும் என பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மாணவர் விடுதித் திறப்பு நிகழ்வில் நேற்றைய தினம் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இந்நாட்டின் புகழ்பூத்த பாடசாலையின் நிகழ்வில் கலந்து கொள்வதையிட்டு மகிழ்ச்சியடையும் அதேவேளை, இவ்விடுதி வசதியை ஏற்படுத்தித் தந்த கல்லூரியின் பழைய மாணவர் இயன் கிருபாகரன் அவர்களுக்கும், அவர்தம் பாரியாருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்விடுதியின் முழுமையான தேவைகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சரிடமும், வடமாகாண ஆளுநரிடமும் கிருபாகரன் கோரிக்கை விடுத்துள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் அவர்கள், கோரிக்கைகள் தொடர்பில் முழுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியமானது என்று தெரிவித்ததுடன், இது விடயத்தில் தாம் கூடிய கவனம் எடுப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டின் ஏனைய மாகாணங்களை விடவும் வடமாகாணத்திற்கே அதிகளவான நிதி அரசினால் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்தவகையில் மாகாண கல்வி அமைச்சரும் அமைச்சின் செயலாளரும் மேற்படி கோரிக்கையை கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அத்துடன், இன்றிருக்கும் இச்சூழலைப் புறந்தள்ளிவிட்டு, இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு நடைமுறைச் சாத்தியமான வழியில் தீர்வு காண வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக, அதிகாரப் பகிர்வு எம்மிடம் இருக்கிறது. எனவே, சமகாலத்தில் எமக்குத் தேவையானவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டே நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## வீடு தீக்கிரை

(யாழ்ப்பாணம்)

யாழ்.புத்தூர் பெரிய பொக்கணைப் பகுதியிலுள்ள நாளாந்த கூலி தொழிலாளியான இரத்தின சிங்கம் துயந்தன் என்பவரது வீடு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு திடீரென தீப்பிடித்து முற்றாக எரிந்து சேதமாகியுள்ளதுடன் வீட்டிலிருந்த 3 இலட்சத்துக்கும் அதிமான பொருட்களும் தீயில் கருகியுள்ளதாக அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த தொழிலாளிக்கு தற்காலிக குடிசையொன்றினை யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் நேற்று அமைத்துக்கொடுத்துள்ளது.

மேற்படி தொழிலாளியின் வீட்டில் இருந்த தொலைக்காட்சிப் பெட்டி திடீரென வெடித்துள்ளதுடன் மின்சார இணைப்புக்களுக்கு தீ பரவ தொடங்கியுள்ளது. உடனடியாக வீட்டிலிருந்தவர்கள் வெளியில் சென்றுவிட்டனர்.

தொடர்ந்து அவ்விடத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினரும் பொலிஸாரும் தீயினைக கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிகள் மேற்கொண்ட போதும், அது கைகூடாத நிலையில் வீடு முற்றாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் குறித்த தொழிலாளியின் குடும்பம் தங்குவதற்காக யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினரால் தற்காலிக சிறிய குடிசையொன்று அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

## அரசியல் கைதி...

மெதடிஸ்தமிசன் தமிழ்க் கலவன் பாடசாலை அருகாமையில் நடைபெறவுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் அறிவித்துள்ளார்.

உயிரிழந்த விஸ்வலிங்கம் கோபிதாஸ் கடந்த 2007-ம் ஆண்டு கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் கடுமையான உடல், உள சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்தார் என குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது கடந்த 24-ம் திகதி மர்மமான முறையில் இறந்துள்ளார்.

இவரது மர்ம மரணத்திற்கு நீதியான சர்வதேச விசாரணை கோரியும், அரசியல் கைதிகள், மீதான சித்திரவதைகள் துன்புறுத்தல்களை தடுத்து நிறுத்தக் கோரியும், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00- 10.00 மணி வரை வடமராட்சி புலோலி மெதடிஸ்த மிசன தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகாமையில் இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-6.24)

## பிரிட்டன் பிரஜா...

எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு உதவிகளை வழங்கும் முகமாக பிரித்தானிய தூதரகத்தின் ஆலோசனைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட சந்திப்பு ஒன்று நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் ஏ-9 வீதியில் உள்ள எக்ஸ்போ பவிலியன் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு மரணம் அடைந்த தங்கள் நாட்டின் பிரஜாவுரிமைபெற்ற விஸ்வலிங்கம் கோபிதாஸனின் விடுதலைக்கு பிரித்தானிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்திருந்ததா? என ஊடகவியலாளர் ஒருவரால் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

பிரித்தானிய பிரஜைகள் இலங்கையின் சட்ட திட்டங்களுக்கு அமைய இலங்கையில் உள்ள சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் போது எமது அரசாங்கத்தினால் விடுதலைக்கான நடவடிக்கைகள் எதனையும் எடுக்க முடியாது . சிறையில் தண்டனை விதிக்கப்பட்டு தடுத்து வைக்கப்பட்டவர்களுடைய விடுதலை தொடர்பில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமே தவிர எம்மால் எதுவும் செய்ய முடியாது.

அதேவேளை அவர்களுக்கு பண உதவிகளையும் வழங்க முடியாது, பிரித்தானிய பிரஜைகள் மற்றும் பிரஜாவுரிமை பெற்ற இலங்கையர்கள் என தற்காலிகமாக இலங்கையில் தங்கியிருப்போருக்கு ஏற்படும் நலன்சார் பிரச்சினைகளுக்கு வழங்கக் கூடிய உதவிகள் மற்றும் வழங்க முடியாத உதவிகள் தொடர்பிலான ஆலோசனை வழங்கும் நோக்கில் தான் இந்தக்கலந்துரையாடலை அவசரமாக ஏற்பாடு செய்திருந்தோம் எனக்கூறினார்.

மேலும், சிறையில் தடுத்து வைத்திருப்பவர்களுக்கான மருத்துவம் உள்ளிட்ட நலன்சார் செயற்பாடுகளிலும் நாம் ஈடுபட்டு வருகின்றோம். அந்தவகையில் மரணமான கோபிதாஸ் சிறையில் இருக்கும் காலத்தில் அவருக்கு வேண்டிய உதவிகளை மேற்கொண்டு வந்தோம்.

அத்துடன் அவரது நிலை குறித்தும் அவருடைய உறவினர்களுக்கும் தெரிவித்திருக்கிறோம். இவ்வாறான செயற்பாடுகளையே எம்மால் மேற்கொள்ள முடியும் .

இதேவேளை எமது நாட்டு பிரஜைகள் இலங்கையுள்ளிட்ட வேறுநாடுகளுக்கு செல்லும் போது காப்புறுதி செய்துவிட்டு செல்லுமாறு ஆலோசனைவழங்கி வருகின்றோம். ஆனால் எந்த நாட்டிற்கும் செல்ல வேண்டாம் என்று நாம் கூறியதில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## அரசியல் அதிகாரங்...

சிறி ஜயசேகர அண்மையில், 13 ஆவது திருத்தச் சட்டம் பற்றி வட மாகாண முதலமைச்சருக்கு எதுவும் தெரியாது எனவும் அதனை அவர் முதலில் படித்துவிட்டு அதிலுள்ள அதிகாரங்களை கேட்குமாறு கூறியிருந்தார்.

தயாசிறியின் மேற்படி கூற்று தொடர்பாக வடக்கு முதலமைச்சரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பலர் பல விதமாகச் சொன்னாலும் 13 ஆவது திருத்தச் சட்டம் என்பது வட மாகாணத்திற்கு அதிகாரங்களைத் தருவதற்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால் மேல் மாகாண முதலமைச்சர் தயாசிறி ஜயசேகர 13 ஆவது திருத்தச்சட்டம் தமக்கானதும் அல்ல வடமாகாண சபைக்குரியதும் அல்ல எனத் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்காகவே 13 ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மாகாண சபை என்பது ஏனைய இடங்களுக்கு தேவையில்லாத ஒன்று. ஆனால் எங்களுக்கு தேவையான ஒன்று அந்த அடிப்படையில் அவரது கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறோம். உண்மையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள எவற்றையும் அரசாங்கம் எமக்குத் தருவதாக இல்லை. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ளவற்றைத் தெரிந்து கொண்டே நாங்கள் இந்த தேர்தலில் போட்டியிட்டோம்.

தயாசிறியும் அரசாங்கமும் ஒரே கட்சியாக இருக்கும் போது 13 ஆவது திருத்தச் சட்டத்தை வழங்குவதில் அவர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை. ஆனால் எங்களது மொழி, மதம், இனம் எல்லாமே வித்தியாசமானது. ஆகவே நாங்கள் கேட்பதை அவர்கள் வழங்கமுடியாத நிலையில் அவரது கருத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும், மேலும் தயாசிறியின் கருத்து தொடர்பாக நான் எதையும் கூற முடியாது. அது அவரது தனிப்பட்ட கருத்து எனவும் வடக்கு மாகாண முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## ராகுலை முத்தமிட்ட...

முன் 2 நாள் சுற்றுப்பயணமாக அசாம் மாநிலம் சென்ற காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி, அங்கு பல்வேறு பொதுக்கூட்டங்கள், பேரணிகள் மற்றும் கட்சி கூட்டங்களில் கலந்து கொண்டார்.

ஜோர்காத் பகுதியில் நடந்த கூட்டத்தில் கலந்து கொண்ட ராகுல் காந்திக்கு, பெண்கள் கை குலுக்கியும் வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

அப்போது காங்கிரஸ் கட்சியை சேர்ந்த பெண் உறுப்பினர் போண்டி என்பவர் ராகுல் காந்திக்கு கன்னத்தில் முத்தமிட்டார்.

இந்நிலையில் இந்த சம்பவம் தொடர்பாக போண்டி என்ற பெண்ணுக்கும், அவரது கணவருக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து இருவரும் வார்த்தைகளால் பயங்கரமாக மோதிக்கொண்டுள்ளனர்.

இறுதியில் அந்த பெண்ணை நேற்று முன்தினம் எரித்து கொலை செய்த கணவர், தானும் தீயை கொளுத்தி கொண்டு தற்கொலைக்கு முயன்றுள்ளதாக தெரிகிறது.

இதில் படுகாயம் அடைந்த கணவர் அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-11)

## கைலாகு கொடுப்...

சுமார் 6 கோடி ரூபா செலவில் யாழ். பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் புதியதாக நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிகளைக் கொண்ட மாணவர் விடுதி திறப்பு விழா நேற்றுக்காலை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான ஜேர்மன் நாட்டின் தூதுவர் ஜர்கான் மொஹாட், ஜேர்மன் நாட்டின் செனற்சபை உறுப்பினரும் மேற்படி மாணவ விடுதியை அமைப்பதற்கான நிதியுதவியை வழங்கியவருமான இயன் கரன், மற்றும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கல்லூரி முதல்வர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் எனப்பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

விருந்தினர்கள் மேடைக்கு அழைக்கப்பட்டபோது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் முதலமைச்சர் விக்னேஸ்வரனும் தமக்கென ஒதுக்கப்பட்டிருந்த இருக்கைகளில் அமர்ந்து கொண்டனர். இதனையடுத்து ஊடகவியலாளர்கள்; விருந்தினர்களை புகைப்படம் எடுத்தபோது முதலமைச்சரும் அமைச்சரும் கைலாகு கொடுத்தனர்.

முதலமைச்சரும் அமைச்சரும் கைலாகு கொடுத்ததை தமது புகைப்படக்கருவியில் பதிவுசெய்யத்தவறியவர்கள் மீண்டும் இருவரையும் கைலாகு கொடுக்கும்படி கேட்டுக்கொண்டனர். இதனையடுத்து இருவரும் மீண்டும் கைலாகு கொடுத்தனர். இதன்போது முதலமைச்சர் நாங்கள் இருவரும் சந்திக்கும் போது மனிதாபிமான அடிப்படையில் கைலாகு கொடுப்போம். ஆனால் அரசியல் ரீதியாக நாம் இருவரும் இணைவது சாத்தியமற்றது எனக் கூறினார்.

அதேவேளை நீங்கள் புகைப்படத்தை எடுத்துவிட்டு என்னென்னவெல்லாம் எழுதப்போகின்றீர்களோ தெரியவில்லையென சிரித்தபடிகூறினார்.

இதன்போது முதலமைச்சருக்கு கைலாகு கொடுப்பது எனக்கு பிரச்சினையில்லை. ஆனால் அவருக்கு பிரச்சினைகளை ஏற்படுத்திவிடாதீர்கள் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் சிரித்தபடி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்கு

JJ-4XXXஎனும் இலக்கமுடைய CBZ Star மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :- 0779766683, 0779587231 (5722)



## கார் விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் டாக்டரின் பாவனையில் உள்ள TOYOTA COROLLA 64 - 52 xx Original Diesel கார் விற்பனைக்கு உண்டு.

✦ A/C Full Option

வெளிநாடு செல்ல உள்ளதால் விலை 1225000 /-

(5715)

தொடர்பு :- 0777 906 536


## மாணவனை...

மணியளவில் வீட்டில் இருந்து A9 வீதிக்கு சென்றதை அயலவர்கள் பார்த்ததாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிறுவன் பற்றி தெரிந்தவர்கள் 0775907281 இலககத்தோடு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தோடு தொடர்பு கொள்ளுமாறு கனகராயன்குள பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15)


## வயற்காணி தேவை

இரணைமடுக்குளத்து தண்ணீர் பம்பு உள்ள இருபோகமும் செய்கைக்குரிய வயற்காணி கிளிநொச்சிப் பகுதியை அண்மித்துத் தேவை.

விற்க விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய தொலை பேசி இலக்கம்

077 634 1216 (இ)



# SPOKEN ENGLISH

புதிய பிரிவுகள் ஆரம்பம்

கிழமைநாட்களின் மாலை நேர பாடநெறி

**05.03.2014 @ 4.00 P.M (3 months)**

(திங்கள் - வியாழன் வரை 4.00 - 6.00 P.M வரை)

சனி/ஞாயிறு பாடநெறி (12.00 -3.00 P.M)

**15.03.2014 @ 12.00 P.M**

நீங்கள் ஆங்கிலம் பேசுவதை உறுதிப்படுத்துங்கள்

A1, B1,B2(Course & Registration)

**IELTS Registration Centre**

வடமாகாணத்தின் முதன்மை ஆங்கிலக் கல்லூரியில் இன்றே இணைந்திடுங்கள்

# E-CITY COLLEGE

372,பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

0212217106 / 0774924166/0773400418 (C-6625)



## வீடு + காணி விற்பனைக்கு / வாடகைக்கு

4 அறைகள், ஹோல்கள், கராச், கிணறு, குளியலறை சமையலறை வசதிகளுடன் உடுவில் பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள # 36, தோம்பை வீதி உடுவில் கிழக்கு சுன்னாகத்தில் அமைந்துள்ள 3 1/4 பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு/வாடகைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு :- 011 2452 736 (C-6616)



## பக்திப் பாடல்கள் உருவாக்கி தரப்படும்

உங்கள் ஆலயங்களின் சிறப்புக்களை கூறும் பக்திப் பரவச மூட்டும் பாடல்களை,

தென்னிந்திய கவிஞர்கள், இசையமைப்பாளர்கள், பாடகர்களினால் உருவாக்கப்பட்டு இந்தியாவின் சிறந்த கலையகத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். (5723)

**தொடர்புகளுக்கு - சண் 0779395983**



# மிகப்புதிய வரவு அபூர்வ வரவு

கனடாவில் படிக்க, உழைக்க

3 மாதங்களில் பறக்கலாம்

எதிர்பார்க்கப்படும் செலவீனம்

22 இலட்சங்கள். எண்ணி 7 பேருக்கு மட்டுமே இவ் வாய்ப்பு

(நிபந்தனைகளுடன்)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 0212219016, 0215689090

(C-6638) www.thisaivisa.com



# SINGER FASHION ACADEMY

ஒரு நாள் தையல் நிகழ்ச்சித் திட்டம் யாழ்ப்பாணம்

**சிங்கர் பிளஸ் இல்**

நாள்: 2014 மார்ச் மாதம் 4ம் திகதி

நேரம்: முற்பகல் 9 மணிமுதல் மாலை 2 மணிவரை

இலவசம் இலவசம் இலவசம்

அந் நாளில் ....

- ரிபன் எம்ரோய்டரி
- மெசின் எம்ரோய்டரி
- பிரசிநியன் எம்ரோய்டரி
- பெட்ச் வேக்ஸ்
- நீடில் பெய்ன்டிங்

(C-6624)

ஒரு நாள் பாடநெறி மற்றும் ஒரு மணித்தியாலத்தில் விஞ்ஞான ரீதியான சாறி சட்டை தைத்து முடித்து காட்டப்படும்.

அந்நாளில் தையல் வகுப்பிற்கு புதிதாக இணையும் மாணவர்களுக்கு 25% விசேட கழிவுகள் உண்டு.

Singer Plus Jaffna, 021 222 5408 [Rashmina]



## வேலைவாய்ப்பு

உங்களுக்கு 18-50 வயதா? வேலையில்லாத பிரச்சினையா? கவலையை விடுங்கள். எம்முடன் கைகோருங்கள். கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளான ஜேம் / கோடியல்/ பிஸ்கட் / கோழிஇறைச்சி / டயில் / பெயின்ட் தொழிற்சாலைகள் / தண்ணீர்போத்தல் / கிளவுஸ் / PVC / பிளாஸ்டிக் / காமெண்ட் / தேயிலை / மற்றும் பல தொழிற்சாலைகளில் ➢உற்பத்தி பிரிவு ➢தரம் பிரித்தல் ➢லேபல் ➢பொதியிடல்பிரிவுக்கு ஆண்-பெண் தேவை. உணவு+ தங்குமிடம் குறைந்தவிலைகளில். சம்பளம் 18000 /- 25000 /- 35000 /- (நண்பர்கள் + குழுக்களாகவும் + தம்பதியினரும் ஒரே தொழிற்சாலைகளில்) வருகைதரும் நாளிலே வேலைவாய்ப்பு 077 5561883 (C-663



## Apply Today நாளை ஆரம்பியுங்கள்

உங்களுக்காக எப்பொழுதும் நல்ல நிலையில் பல்வேறுபட்ட தொழில் வாய்ப்புகள் உள்ளன. விற்பனையின் அடிப்படை பயிற்சி, வாடிக்கையாளர்கள் சேவை, களஞ்சியப்படுத்துனர், மேற்பார்வையாளர் ஆகிய பணிகளும் உள்ளடங்கும். திறமையான வாய்ப்புகளை நழுவவிடாதீர்கள். திறமைகளை வெளிக்காட்டுங்கள்.

அனுபவம் அவசியமற்றது

Call:-0772302795, 0775566226



## FRENCH LANGUAGE CENTRE

FALC யாழில் சர்வதேச தரத்தில் French கற்பிக்கும் ஒரே ஒரு மையம்.

# FRENCH CLASSES

French, Canada Embassy மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட International Certificates இனை France, Canada, Belgium செல்வோர் இலகுவாக பெற்றுக் கொள்ளலாம்... 774 க்கும் மேற்பட்டோர் கற்றுள்ளனர்...

ஆசிரியர் : MR. V. JEGAN (Trained teacher in France - 2007, University இல் பகுதி நேர French விரிவுரைகளை மேற் கொள்பவரும்)

கடந்த DELF A1,A2 Exam இல் எம் மாணவர்கள் மட்டுமே 100% சித்தி..

Note: எமது ஆசிரியரின் வகுப்புக்கள் யாழ் ஆரியகுளத்தடி, நெல்லியடியில் மட்டுமே..

எம்மிடம் கற்ற பல மாணவர்கள் France இல் வேலை செய்கிறரர்கள்.......

| | | |
|---|---|---|
| ஆரம்பம்: 08.03.14 8.30am No. 40, Palaly Road, Jaffna. (ஆரியகுளத்தடி) | ஆரம்பம்: 11.03.14 at 11am No.181, 1st Floor, Main Street, Nelliady. | Deutsch & Sinhala வகுப்புகளும் 021 320 2973 0779 789 456 |

(C-6626)



SPEED LANKA EXPRESS Courier

# வெளிநாடுகளுக்கான

## தபால் பொதிகள் சேவை

- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(C-6620)

ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே - 0772931062, 0776217926 www.speedlanka.net






ஓம் சக்தி

ஒரேதாய் ஒரே குலம்

மேல்மருவத்தூர் சுயம்பு

# அருள்மிகு ஆதிபராசக்தி





கரணவாய் கரவெட்டி வார வழிபாடு மன்றம் நடாத்தும்

# அருள்திரு பங்காரு அடிகளாரின் 74 ஆவது அவதாரத் திருவிழா

உலகமெங்கும் சக்தி ஒளி பரவவேண்டும்.
ஒவ்வொருவர் மனக்குறையும் நீங்க வேண்டும்.

பேரன்புடையீர் !

மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தியின் அவதாரம். சக்திபீடத்தில் உலாவரும் ஆன்மீகக்குரு, அருள்திரு பங்காரு அடிகளாரின் அவதாரத்திருவிழா விஜயவருடம் மாசிமாதம் 03.03.2014 திங்கட்கிழமை காலை 8.00 மணிக்கு கரவெட்டி-கரணவாய் மூத்த விநாயகர் கோவில் திருமண மண்டபத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படவுள்ளது. அத்திருநாளில் பக்தர்கள் அனைவரும் வருகை தந்து அன்னை ஆதிபராசக்தியின் அருளைப் பெறுவதுடன், அன்றைய தினம் நடைபெறும் பஜனையிலும் கலந்து கொண்டு, அதன்பின்பு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளைப் பார்த்து மகிழ்ந்து அதனைத் தொடர்ந்து நடைபெறும் அன்னதானத்திலும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டால் பழவினை மாறும். சக்தியருள் கிட்டும். துன்பம் நீங்கும். நீ வேறு ஒன்றும் செய்ய வேண்டியதில்லை.

'அடிகளாருக்குப் பிறந்தநாள் எடுப்பது அவர்களுக்காக இல்லை. அவர் அருள் உங்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக என்பது அன்னையின் அருள்வாக்கு'

| | |
|---|---|
| கரணவாய் | மேல்மருவத்தூர் சுயம்பு |
| கரவெட்டி | அருள்மிகு ஆதிபராசக்தி |
| தொலைபேசி: 0778000748 | வார வழிபாட்டு மன்றம், |

(5717)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org